

ஏரி புனரமைத்தல் - கோயம்புத்தூர்



பழ அங்காடி - மதுரை




மிதிவண்டி பகிர்மானம் - சென்னை



உணர்வு பூங்கா - சென்னை

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2019 - 2020
## மானியக் கோரிக்கை எண். 34

# எஸ்.பி. வேலுமணி

**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர்**



# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1-13 |
| 2. | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 14-115 |
| 3. | பெருநகர சென்னை மாநகராட்சி | 116-180 |
| 4. | பேரூராட்சிகளின் இயக்ககம் | 181-218 |
| 5. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 219-255 |
| 6. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 256-304 |
| 7. | தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் | 305-318 |
| 8. | சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை | 319-329 |

| | | |
|---|---|---|
| 9. | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் | 330-345 |
| 10. | புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் | 346-351 |
| 11. | தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் | 352-358 |

# மானியக் கோரிக்கை எண். 34

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2019-2020

## 1. முன்னுரை

நகரமயமாதல் என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாகும் இது நாட்டின் .நகர்ப்புற மக்கள் தொகையில் பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சார மாற்றங்களுடன் கூடிய வளர்ச்சியின் ஒரு செயல் ஆகும். இது கிராமப்புறவிவசாய நிலப்பகுதிகளிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம் பெயருதலை குறிப்பிடுவ-தோடல்லாமல், "நகர்ப்புற மக்கள்தொகை மற்றும் " "நகர்ப்புறப் பகுதிகள் விரிவாக்கம்ஆகியவற்றின் " அதிகரிப்பை தனிநபர் ஆற்றல் மற்றும் வளத்தின் நுகர்வோடு தொடர்புபடுத்தி விவரிக்கிறது .நகர்ப்புற பகுதிகள், பொதுவாக சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள், மேம்பட்ட மருத்துவ வசதிகள், கலாச்சார மற்றும் அரசியல் பங்கேற்புக்கான மேம்பட்ட வாய்ப்புகள் ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளில், இது தொழில்மயமாக்கல் மற்றும் பிந்தைய தொழில்மயமாக்கல் காலத்திலிருந்து பொருளாதார வளர்ச்சியின் ஒரு இயற்கையான விளைவு மற்றும் தூண்டுதல் ஆகும்.

உலகம் தற்போது வரலாற்றில் மிகப்பெரிய ,நகர்ப்புற வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறதுஉலக . மக்கள்தொகையில் பாதிக்கும் மேலானவர்கள் இப்போது நகரங்களில் வாழ்கின்றனர். 2030 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை சுமார் 5 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .மூன்றாம் உலக நாடுகளில் இந்த நகர்ப்புறமயமாதல் மிகப்பெரிய சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் மாற்றங்களை கொண்டு வருகிறது. நாகரீகத்தின் புதிய சகாப்தத்தில், வளத்தின் திறன் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் நகர்ப்புறமயமாக்குதல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், இது தனித்துவம் வாய்ந்த சவால்களான, வறுமை, குடிசை பகுதி குடியேற்றங்களின் அதிகரிப்பு, மாசு அளவுகளின் அதிகரிப்பு போன்ற சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது. உலகத்தின் நகரப்புற பகுதிகளின் பெருக்கத்தால் ஏற்படும் மேற்கண்ட பிரச்சினைகள் மற்றும் பிற சிக்கல்களை நிர்வகிக்க வலுவான நகர திட்டமிடல் அவசியமாகும்.

### 1.1 உலகளாவிய நகரமயமாதலின் நிலை

உலகளாவிய நகர்ப்புற மேம்பாடுகள் கடந்த நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளதுஉலக மக்கள்தொகையில் பாதிக்கும் . மேற்பட்டவர்கள் இப்பொழுதுநகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர் மற்றும் உலக நாடுகளில் நகரமயமாதல் அதிகரித்து வருகின்றன. ஐக்கிய நாடுகளின் உலக நகரமயமாக்கல் வாய்ப்புகளின்படி ,1950ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 30 விழுக்காடு

நகர்ப்புறமயமாக்கப்பட்டுள்ளது, இது 2016 ஆம் ஆண்டில் 54% ஆக அதிகரித்துள்ளதுடன் 2050 ஆம் ஆண்டில் 68% ஐ எட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது .2050 ஆம் ஆண்டில் மூவரில் இருவர் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்து, புதிய பெரு நகரங்கள் உருவாகின்றன. அவற்றின் முக்கிய கவனம் வளர்ச்சி குறைவான பகுதிகளில் உள்ளது. 1990 ஆம் ஆண்டில் இருந்த சுமார் 10 பெரு நகரங்கள் )153 மில்லியன் மக்கள்தொகை ,(2014 ஆம் ஆண்டில் 28 பெரு நகரங்களாக )453 மில்லியன் மக்கள்தொகைஇது உலக மக்கள் .அதிகரித்துள்ளது ( விழுக்காடு 12 தொகையில்நகர்ப்புற மக்களை உள்ளடக்கியதாக உள்ளது.

உயர் வருவாய் நாடுகளான லத்தீன்-அமெரிக்கா மற்றும் கரிபியன் நாடுகளில் ஏற்கனவே பெரும்பான்மையான மக்கள் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கின்றனர் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் 50 விழுக்காடுக்கும் மேல் நகர்ப்புறங்களில் வசித்து வருவதால் ,ஒப்பீட்டளவில் மெதுவான வளர்ச்சியை பதிவு செய்துள்ளனர். ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் மற்ற பகுதிகளை காட்டிலும் கிராமபுறங்கள் அதிகளவில் நகரமயமாக்கப்படுகின்றனதற்போது ,, இந்தியாவும் சீனாவும் உலகிலேயே மக்கள் தொகை அதிகம் கொண்ட நாடுகளாகும். இதில் சீனாவின் ஷாங்காய் )26 மில்லியன் ( ய்ஜிங்மற்றும் பெ (22 மில்லியன்), டெல்லி (29 மில்லியன்) மற்றும் மும்பை

(20 மில்லியனுக்கும் மேல்) அடங்கும். 2010 ஆம் ஆண்டில் உலக அளவிலான மக்கட்தொகை கணக்கெடுப்புகளின்படி, ஆசிய பெரு நகரங்கள் 60 விழுக்காடு உலக மக்கள் தொகையை கொண்டதாக உள்ளது. வேகமாக வளர்ந்துவரும் நகர்ப்புற கூட்டமைப்பில், நடுத்தர நகரங்கள் மற்றும் ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் ஆசியா மற்றும் ஆப்ரிக்காவில் அமைந்துள்ளது.

தொடர்ச்சியான மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் மற்றும் நகரமயமாக்கல் ஆகியவைகளால் 2.5 பில்லியன் மக்களை 2050 ஆம் ஆண்டுக்குள் நகரமக்கள் தொகையோடு சேர்க்கப்படும்இதில் ஆசியா மற்றும் . ஆப்ரிக்கா நாடுகளில் ஏறக்குறைய 90 விழுக்காடு குவிதல் அதிகரிக்கும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி, வாழ்க்கை நிலைமைகளுக்கான கணிசமான தாக்கங்கள் போன்ற இந்நிலைகள் மனித குடியேற்றத்தின் நிலப்பரப்பை மாற்றி வருகின்றன. உலகம் தொடர்ந்து நகரமயமாவதால், நகர்ப்புறமயமாக்குதலில் குறிப்பாக, இந்தியா உள்ளிட்ட குறைந்த நடுத்தர வருவாய் நாடுகளில், நகரங்கள் பல்வேறு நிலையான அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

## 1.2 இந்தியாவின் நகரமயமாதலின் சூழ்நிலை

மக்கள்தொகை மற்றும் பொருளாதார வளர்ச்சிகள் சமீப காலங்களில் இந்தியாவில் நகரமயமாக்கத்தை ஊக்குவித்து வருகின்றன. இதனால் நகரங்கள் மற்றும் மாநகரங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. வரவிருக்கும் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 7.5% மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உலகில் வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதாரமாக இந்தியா விளங்கும். இந்தியா ஏற்கனவே மிகவும் விரும்பப்பட்ட வெளிநாட்டு முதலீட்டு இடங்களில் ஒன்றாகும் இது .2025-க்குள் மூன்றாவது பெரிய நுகர்வோர் பொருளாதாரமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இளம் மக்கள்தொகையின் அடித்தளம் ,உயரும் வருவாய் அளவு, நடுத்தர வர்க்கத்தின் விரிவாக்கம் (உலகளாவிய) மற்றும் நிலையான ஜனநாயகம் ஆகியவை இந்தியாவை பிரதான உலகப் பொருளாதார சக்திகளின் கூட்டமைப்பில் கொண்டு சேர்க்கிறது.

இந்தியாவின் தனித்தன்மையான நகர்ப்புற மயமாக்கல் என்பது ஒரு அனுமானமல்ல. ஆனால் இது வளர்ச்சியின் ஒரு உந்து சக்தியாக விளங்குகிறது. இந்தியாவின் பொருளாதார உற்பத்தியில், நகர்ப்புறங்கள் மூன்றில் இரு பங்கைக் கொண்டுள்ளன. மேலும், அவை நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்தியாவின் நகர்ப்புறமயமாக்கல் சுதந்திரத்திற்கு பின் கலப்பு பொருளாதாரத்தை நாடு ஏற்றுக் கொண்டதனால் வேகமடைந்தது. இந்தியாவில் நகர்ப்புறங்களில் வாழும் மக்களின் சதவிகிதம் 11.4% லிருந்து (1901 கணக்கெடுப்பின் படி) 31.16% ஆக (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி) அதிகரித்துள்ளது.

இந்தியாவில் நகரமயமாக்கலின் உயர் விகிதங்களுக்கு பின்னால் பல காரணிகள் உள்ளன. மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் இடம்பெயருதல் ஆகியவை இரண்டு பிரதான உந்து காரணிகளாக அடையாளம் காணப்பட்டதுசமீபத்தில் ., மற்றொரு காரணி, அதாவது உயர் பொருளாதார வளர்ச்சியும் நகர்ப்புறமயமாக்கல் நிகழ்வுக்கு முக்கிய பங்களிப்பாகக் காணப்படுகிறது.

2001-2011 வரை உள்ள காலகட்டத்தில் பெரு நகரங்களின் எண்ணிக்கை )1 மில்லியனுக்கு மேல் மக்கள் தொகை (35லிருந்து 53 ஆக அதிகரித்து உள்ளது .அவர்கள் இப்போது மொத்த நகர்ப்புற மக்களில் 42.6 சதவிகிதத்தினர் . அதேபோல், வகுப்பு I நகரங்கள் )1,00,000 மேல் மக்கள் தொகை) இப்பொழுது நாட்டின் நகர்ப்புற மக்களில் 70.2 சதவீகிதமாக உள்ளன. 2001 ஆம் ஆண்டில் இதன் விகிதம் 68 விழுக்காடாக இருந்தது. ஐ.நா.வின் உலக மக்கள்தொகை அறிக்கையின்படி 2030 ஆம் ஆண்டில் நாட்டின் மக்கள்தொகையில் 40.76 சதவிகித மக்கள் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள்.

இந்தியா முழுவதும் நகர்ப்புறமயமாக்கல் நிகழ்வு ஒவ்வொரு மாநிலத்திலும் பரவலான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது ,வீட்டுவசதித்திட்டம் .சாலை கட்டமைப்பு, நகர்ப்புற போக்குவரத்து, குடிநீர் வழங்கல், மின்சாரம் சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்புகள் ஆகியவற்றில் முதலீடுகள் மற்றும் நகர்ப்புற மேலாண்மையின் பிற பரிமாணங்கள் ஆகியவை இந்தியாவில் கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறத்திற்கு மக்கள் குடிபெயர காரணிகளாகும்.

### 1.3 தமிழ்நாட்டின் நகரப்புறமயமாக்கலின் நிலை

தேசிய அளவில் 31 சதவிகிதம் மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றபோதுதமிழ்நாடு , நாட்டிலேயே நகரமயமாக்கலின் முன்னோடியாக 48.45 சதவிகிதம் நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களை கொண்டுள்ளது .தமிழ்நாடு மிக விரைவான தொழில் மயமாதல் மற்றும் நகரமயமாதல் மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. மேலும், தமிழ்நாடு நாட்டின் மிகப்பெரிய மாநிலங்களில் நகர்ப்புற மக்களின் பங்களிப்பில் முதலிடம் வகிக்கிறது. மொத்த நகர்ப்புற மக்கள் தொகையில் 3வது மாநிலமாக உள்ளது. மாநிலத்தில் நகர்ப்புற மக்கள்தொகையின் வளர்ச்சி )2001-2011ல் 27 சதவிகிதம் ( ) கிராமப்புற மக்கள்தொகை வளர்ச்சியை விட6 சதவிகிதம் அதே காலகட்டத்தில்) விஞ்சி வேகமாக வளர்ந்துள்ளது.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் அதிகமான மக்கள்

கிராமங்களிலிருந்து நகர்ப்புறத்திற்கு குடிபெயர்ந்துள்ளனர். தமிழ்நாட்டில், 1,30,058 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 10,658.06 சதுர கி) .மீ.8.1%) அளவிற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் நகர்ப்புற அதிகார வரம்பு உள்ளது .அதிக எண்ணிக்கையிலான சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மாநிலம் முழுவதும் பரவியுள்ளதால், தமிழகம் நகர்ப்புறமயமாக்கலில் இடஞ்சார்ந்த முறைமை கொண்டுள்ளது.

| **மாநிலத்தின் பெயர்** | **நகரமக்கள் தொகை (இலட்சத்தில்)** | **மொத்த மக்கட்தொகையில் நகர்ப்புற மக்களின் சதவீத பங்கு** | **தரம்** |
|---|---|---|---|
| ராஜஸ்தான் | 171 | 25% | 8 |
| மத்திய பிரதேசம் | 201 | 28% | 7 |
| கர்நாடக | 236 | 39% | 4 |
| குஜராத் | 257 | 43% | 3 |
| ஆந்திரப் பிரதேசம் | 284 | 33% | 5 |
| மேற்கு வங்கம் | 291 | 32% | 6 |
| **தமிழ்நாடு** | **349** | **48%** | **1** |
| உத்தரப் பிரதேசம் | 445 | 22% | 9 |
| மகாராஷ்டிரா | 508 | 45% | 2 |

கடந்த 20 ஆண்டுகளில், மாநிலத்தில் நகர்ப்புறமயமாக்கலால் ஏற்பட்ட தாக்கங்களான பெருகிவரும் கூடுதல் உட்கட்டமைப்பு தேவைகள் தமிழக அரசின் சீரிய முயற்சிகளால் எதிர்கொள்ளப்பட்டன.

2030 ஆம் ஆண்டில் நகர்ப்புற மக்கள் தொகை 67% ஆக இருக்கும் எனவும் இது நாட்டிலேயே மிக அதிகமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய அதிகரிப்பு ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு சேவைகள் மீது கூடுதலான அழுத்தத்தை விளைவிக்கக் கூடும். நகர்ப்புற உட்கட்டமைப்பில் அதிகரிக்கும் தேவைகளை சமாளிப்பது மற்றும் அடிப்படை சேவைகளை வழங்குவதில் முக்கிய கொள்கை மற்றும் மேலாண்மையில் ஏற்படும் சவால்கள் ஆகியவை பிற தாக்கங்களாக உள்ளன.

**தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம்** 2023-**ன்படி**, மாநிலத்தால் எதிர்பார்க்கப்படும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை பெருக்குவதற்குண்டான ஒரு திட்டத்தை வகுக்கிறது. இது நகர்ப்புற போக்குவரத்து, குடிநீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை, திட கழிவு மேலாண்மை, வீட்டுவசதி, குறைந்த வருவாய் பிரிவினரை உள்ளடக்கிய வீட்டுவசதி போன்றவற்றை வலியுறுத்துகிறது .நகர்ப்புற உட்கட்டமைப்புகளில் பரிந்துரைக்கப்பட்ட / திட்டமிடப்பட்ட முதலீடுகளின் நோக்கமானது நவீன வசதிகளுடன் சமூக மற்றும் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்துவது மற்றும் நகர்ப்புறத்திலிருந்து மற்ற

பகுதிகளுக்கு முறையான இடரில்லாத இணைப்பை ஏற்படுத்துவதே ஆகும்.

## 1.4 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

சாத்தியமான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு வறுமையை ஒழித்தல், வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதி செய்ய துரித நகர்ப்புறமயமாதல் திறம்பட நிர்வகிக்கப்பட வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு மாநிலத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதை உறுதிபடுத்தி மேம்படுத்தும் பணியை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்துறையானது நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் மக்களுக்கு தேவையான பொது சேவைகளை அளிக்கிறது .திட்டமிடல், நிதியளித்தல், சேவை அளவிலான வரையறைகளை அடைவதற்கு நோக்கமாகக் கொண்டிருக்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

பல துறைகளில் உட்கட்டமைப்பு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நிதி ஆதாரங்களை இத்துறை திரட்டி வருகிறது. குடிநீர் வழங்கல், சாலைகள், கட்டிடங்கள், மழை நீர் வடிகால், தெரு விளக்குகள், திட கழிவு மேலாண்மை, சுகாதாரம், பேருந்து நிலையங்கள்

மற்றும் வணிக வளாகங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு தேவைகளின் மீது இத்துறை கவனம் செலுத்துகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளை நிர்வகிக்கிறது.

தமிழ்நாட்டின் மாவட்ட வாரியான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன :

| வ எண் | மாவட்டங்கள் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0 | 2 | 2 |
| 2 | சென்னை | 1 | 0 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 3 | 37 |
| 4 | கடலூர் | 0 | 5 | 16 |
| 5 | தர்மபுரி | 0 | 1 | 10 |
| 6 | திண்டுக்கல் | 1 | 3 | 23 |
| 7 | ஈரோடு | 1 | 4 | 42 |
| 8 | காஞ்சிபுரம் | 0 | 9 | 17 |
| 9 | கன்னியாகுமாரி | 1 | 3 | 55 |
| 10 | கரூர் | 0 | 2 | 11 |
| 11 | கிருஷ்ணகிரி | 1 | 1 | 6 |
| 12 | மதுரை | 1 | 3 | 9 |
| 13 | நாகப்பட்டிணம் | 0 | 4 | 8 |

| வ எண் | மாவட்டங்கள் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|---|
| 14 | நாமக்கல் | 0 | 5 | 19 |
| 15 | நீலகிரி | 0 | 4 | 11 |
| 16 | பெரம்பலூர் | 0 | 1 | 4 |
| 17 | புதுக்கோட்டை | 0 | 2 | 8 |
| 18 | இராமநாதபுரம் | 0 | 4 | 7 |
| 19 | சேலம் | 1 | 4 | 33 |
| 20 | சிவகங்கை | 0 | 3 | 12 |
| 21 | தஞ்சாவூர் | 1 | 2 | 22 |
| 22 | தேனி | 0 | 6 | 22 |
| 23 | திருவள்ளூர் | 1 | 4 | 10 |
| 24 | திருவண்ணாமலை | 0 | 4 | 10 |
| 25 | திருவாரூர் | 0 | 4 | 7 |
| 26 | தூத்துக்குடி | 1 | 2 | 19 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 1 | 3 | 16 |
| 28 | திருநெல்வேலி | 1 | 7 | 36 |
| 29 | திருப்பூர் | 1 | 5 | 16 |
| 30 | வேலூர் | 1 | 11 | 16 |
| 31 | விழுப்புரம் | 0 | 3 | 15 |
| 32 | விருதுநகர் | 0 | 7 | 9 |
| மொத்தம் | | 15 | 121 | 528 |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் துறைகளின் விவரம் பின்வருமாறு—:

1. நகராட்சி நிர்வாக ஆணையரகம்
2. பெருநகர சென்னை மாநகராட்சி
3. பேரூராட்சிகளின் இயக்குநரகம்
4. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்
5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
6. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்
7. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை
8. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்
9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம்
10. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம்

## 2. நகராட்சி நிர்வாக ஆணையரகம்

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி தவிர) மற்றும் நகராட்சிகளை ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வையிடும் துறையாக நகராட்சி நிர்வாக ஆணையரகம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையரகம் மாநில அளவில் நகராட்சி நிர்வாக ஆணையரை தலைமையாகவும் மற்றும் இணை ஆணையர், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் மண்டல அளவில் ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களையும் (செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களுக்கு தலா ஒருவர் வீதம்) கொண்டுள்ளது.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகர்கோவில், ஓசூர் மற்றும் ஆவடி ஆகிய 14 மாநகராட்சிகளும் (சென்னை நீங்கலாக) மற்றும் 121 நகராட்சிகளும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகராட்சிகளும் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

| வ. எண் | தரம் | ஆண்டு வருமானம் (₹கோடியில்) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சிறப்பு நிலை | 10.00 க்கு மேல் | 18 |
| 2 | தேர்வு நிலை | 6.00 – 10.00க்குள் | 27 |
| 3 | முதல் நிலை | 4.00 – 6.00க்குள் | 32 |
| 4 | இரண்டாம் நிலை | 4.00க்கு கீழ் | 44 |
| | மொத்தம் | | 121 |

**2.1 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள்**

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வார்டுகள் எல்லை மறுவரையறை செய்யப்பட்டு, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கான பிரிவு வாரியாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நாகர்கோவில், ஓசூர் மற்றும் ஆவடி ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டதன் காரணமாக, மாநகராட்சி மேயர்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர்களுக்கான பிரிவு வாரியாக இட ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு**

உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய

பணி ஆகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை உருவாக்க அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (Kfw), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் மூலம் பெறப்படும் நிதி உதவிகளைக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சிகளில் உட்கட்டமைப்புத் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.3 குடிநீர் வழங்கல்

மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை போதிய அளவில் வழங்குவதற்கு அரசு உரிய முன்னுரிமை மற்றும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. குடிநீர் விநியோக நிலைமையை மேம்படுத்துவதற்காக, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA), ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (Kfw) மற்றும் உலக வங்கி போன்ற பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலமும், மத்திய மற்றும் மாநில அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) மற்றும் மூலதன மானிய நிதி (CGF) மூலமும் உதவிகள் பெறப்பட்டு, பல்வேறு குடிநீர் விநியோக திட்டப்பணிகள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் சில நேர்வுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD)

மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையில் குடிநீர் வழங்க, மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனம் (CPHEEO) அளவீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த அலகுகளை எட்டும் நோக்கோடு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் குடிநீர் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் பின்வருமாறு:

| **உள்ளாட்சிகள்** | **அளவீடு (நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு)** | **தற்போதைய நிலை** | **உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 110 லிட்டர் மற்றும் அதற்கு மேல் | நன்று | 8 |
| | 70-109 லிட்டர் வரை | திருப்திகரமான நிலை | 5 |
| | 70 லிட்டர்க்கும் கீழ் | பற்றாக்குறை | 1 |
| மொத்தம் | | | 14 |

| உள்ளாட்சிகள் | அளவீடு (நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு) | தற்போதைய நிலை | உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நகராட்சிகள் | 90 லிட்டர் மற்றும் அதற்குமேல் | நன்று | 66 |
| | 40 முதல் 89 லிட்டர் வரை | திருப்திகரமான நிலை | 55 |
| | 20 முதல் 39 லிட்டர் வரை | பற்றாக்குறை | 0 |
| மொத்தம் | | | 121 |

2011-ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 93 லிட்டர் என்ற வீதத்தில் மொத்தம் 1,567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகிய திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தியதன் மூலமாக குடிநீர் விநியோகம் 1899.29 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 113 லிட்டர் வீதம் வழங்கும் அளவுக்கு 2018-19ம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-IIIன் கீழ் 17 குடிநீர் திட்ட பணிகள் ₹ 661.65 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்

கொள்ளப்பட்டு, அவற்றில் 13 பணிகள் முடிவடைந்துள்ளன. இதன் மூலம் நகரங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோக அளவு மேம்படுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல் படுத்துவதற்கு முன்பு | | திட்டம் முடிவுற்ற பின்பு | |
| | | | எம்.எல்.டி | எல்.பி.சி டி | எம்.எல்.டி | எல்.பி.சி டி |
| 1 | திருநெல்வேலி (தச்சநல்லூர்) | 5.94 | 36.72 | 77 | 55.00 | 116 |
| 2 | கோபிசெட்டிபாளையம் | 4.05 | 4.96 | 90 | 7.44 | 135 |
| 3 | பொள்ளாச்சி | 8.64 | 10.2 | 105 | 12.7 | 135 |
| 4 | போடிநாயக்கனூர் | 2.32 | 5.75 | 76 | 6.95 | 90 |
| 5 | சேலம் | 24.84 | 71.00 | 85 | 105.72 | 127 |
| 6 | குறிச்சி(கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | 49.93 | 4.00 | 40 | 7.5 | 70 |
| 7 | குனியமுத்தூர் (கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | | 3.5 | 40 | 8.00 | 75 |
| 8 | கவுண்டம்பாளையம் (கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | 30.38 | 4.56 | 48 | 8.00 | 80 |

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல் படுத்துவதற்கு முன்பு | | திட்டம் முடிவுற்ற பின்பு | |
| | | | எம்.எல்.டி | எல்.பி.சி டி | எம்.எல்.டி | எல்.பி.சி டி |
| | வடவள்ளி(கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | | 2.3 | 55 | 3.00 | 70 |
| 9 | திருவண்ணாமலை I | 0.32 | பகிர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது | | | |
| 10 | சிவகங்கை II | 0.16 | | | | |
| 11 | துறையூர் | 0.14 | | | | |
| 12 | கிருஷ்ணகிரி | 1.52 | | | | |
| 13 | குழித்துறை | 0.99 | | | | |

மீதமுள்ள 4 குடிநீர் திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | சேலம் பகுதி-II | 147.12 | பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. |
| 2 | பல்லவபுரம் | 99.95 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 3 | பம்மல் | 43.10 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 4 | தேனி அல்லிநகரம் | 68.83 | பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன |

நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை (JnNURM -UIG) திட்டத்தின் கீழ் 10 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிகள் ₹613.30 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 9 பணிகள் முடிவுற்றுள்ளன. பணி நிறைவு பெற்ற நகராட்சிகளில் அதிகரிக்கப்பட்ட விநியோக அளவீடு பின்வருமாறு:-

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல் படுத்துவதற்கு முன்பு | | திட்டம் முடிவுற்ற பின்பு | |
| | | | எம்.எல்.டி | எல்.பி.சிடி | எம்.எல்.டி | எல்.பி.சிடி |
| 1 | மதுரை(வைகைII) தடுப்பணை 2 பணிகள் | 80.37 | 71.6 | 67 | 118.6 | 110 |
| 2 | கோயம்புத்தூர் (பில்லூர் –II) | 159.85 | 176.00 | 109 | 216.00 | 135 |
| 3 | தாம்பரம் | 32.62 | 8.77 | 55 | 16.12 | 90 |
| 4 | ஆனையூர்(மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | 7.88 | 3.48 | 46 | 4.12 | 90 |
| 5 | திருப்பரங்குன்றம் மற்றும் ஹர்விபட்டி(மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) | 9.70 | 2.69 | 69 | 3.71 | 90 |
| 6 | திருமங்கலம் | 68.13 | 8.08 | 90 | 11.18 | 135 |
| 7 | மதுரை விரிவாக்கப்பகுதி (அவனியாபுரம், திருநகர் மற்றும் விளாங்குடி) | 106.99 | 17.14 | 90 | 27.55 | 135 |

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல் படுத்துவதற்கு முன்பு | | திட்டம் முடிவுற்ற பின்பு | |
| | | | எம்.எல்.டி | எல்.பி.சிடி | எம்.எல்.டி | எல்.பி.சிடி |
| 8 | கோயம்புத்தூர் விரிவாக்கப்பகுதி (துடியலூர், வெள்ளக்கிணறு, காளப்பட்டி, சரவணம்பட்டி மற்றும் சின்னவேடம்பட்டி) | 29.03 | 10.64 | 70 | 36.08 | 135 |
| 9 | ஆவடி | 103.14 | 41.6 எம்.எல்.டிக்கு வடிவமைக்கப்பட்டு, தற்போது 0.6 எம்.எல்.டி குடிநீர் மட்டுமே பெறப்படுகிறது. | - | | |

மீதமுள்ள ஒரு பணியின் தற்போதைய நிலை பின்வருமாறு:—

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | அனகாபுத்தூர் | 14.88 | பணிகள் நடைபெற்று வருகிறது. |

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் (UIDSSMT) திட்டத்தின் கீழ் ₹740.47 கோடி மதிப்பீட்டில் 40 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 37 குடிநீர் திட்டப் பணிகள் தேவக்கோட்டை, கரூர், வால்பாறை, திருப்பத்தூர், இராமநாதபுரம், பரமக்குடி, கீழக்கரை, சிவகங்கை, இராமேஸ்வரம், அரக்கோணம், திருத்தணி, அறந்தாங்கி, மறைமலைநகர், விக்கிரமசிங்கபுரம், நாமக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், கூடலூர்(நீலகிரி), ஈரோடு, இராசிபுரம், தஞ்சாவூர், விழுப்புரம், ஒட்டன்சத்திரம், மேட்டூர், ஆத்தூர், வந்தவாசி, திருச்செங்கோடு, காரைக்குடி, பல்லடம், சிதம்பரம், தாராபுரம், பெரியகுளம், திருவத்திபுரம், வெள்ளக்கோயில், காங்கேயம், காயல்பட்டினம், கம்பம் மற்றும் ஆரணி ஆகிய இடங்களில் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 3 பணிகள் கோவில்பட்டி, திண்டிவனம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளில் நடைபெற்று வருகின்றன.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதி உதவியுடன் திருச்சி, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 மாநகராட்சிகளிலும் மற்றும் பழனி, குன்னூர், எடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 6 நகராட்சிகளிலும் ₹663.68 கோடி மதிப்பீட்டில் 9 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவைகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியின் கீழ் ₹869.15 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 15 பணிகளில், 6 பணிகள் திருநெல்வேலி, கடையநல்லூர். திருவண்ணாமலை, பள்ளிப்பாளையம், கடலூர், கரூர் ஆகிய நகராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 9 பணிகள் தாந்தோணி (கரூர் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) இனாம்கருர் (கரூர் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது), உதகமண்டலம், குன்னூர், பத்மநாபபுரம் மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (விரிவாக்கப்பட்ட பகுதி) ஆகிய மாநகராட்சிகளில் பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்ட (AMRUT) நிதியின் கீழ், 2015-2016 ஆண்டில், ₹1989.79 கோடி மதிப்பீட்டில் 9 குடிநீர் மேம்பாட்டு திட்டப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிகள் முடிவுற்றும், மீதமுள்ள 8 பணிகள் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, வேலூர், நாகர்கோயில், ஓசுர் ஆகிய மாநகராட்சிகள் மற்றும் இராஜபாளையம்,

ஆம்பூர் ஆகிய நகராட்சிகளில் பணிகள் பல்வேறு நிலையிலும் முன்னேற்றத்தில் உள்ளன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்ட (AMRUT) நிதியின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டில், 2 குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் கும்பகோணம் நகராட்சியில் ₹687.21 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்ட (AMRUT) நிதியின் கீழ் 2017-2020 ஆம் ஆண்டில் 3 குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளான கோயம்புத்தூர் பில்லூர்–III, திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் முல்லைபெரியாறு அணையிலிருந்து மதுரை மாநகராட்சிக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கு ₹2823.66 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP) நாமக்கல் நகராட்சியில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும் மற்றும் சங்கரன்கோவில், புளியங்குடி, இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் ஆகிய 5 நகராட்சிகளில் கூட்டுக்குடிநீர் திட்டங்களும் ₹660.37 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.3.1 திறன்மிகு குடிநீர் வழங்கல் மேலாண்மை அமைப்பு

குடிநீர் வழங்கல் திட்டங்களை இயக்குவதிலும் பராமரிப்பிலும் நல்ல கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பினை மேற்கொள்ள நீர் வழங்கல் மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்துவது மிகவும் அத்தியாவசியமானதாகும். அப்பணிகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து அவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

1. நீருந்து கட்டமைப்பின் திறனை மேம்படுத்த தற்போதுள்ள திறனற்ற மோட்டார்கள் மற்றும் நீருந்து குழாய்களுக்குப் பதிலாக புதிய திறன்மிகு மோட்டார்கள் மற்றும் புதிய குழாய்கள் அமைத்தல்.
2. சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய தற்போதுள்ள பகிர்மான கட்டமைப்பினை புனரமைத்தல்.
3. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் திட்டங்களில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன், குடிநீர் தரத்திற்கான வெளிப்படை மற்றும் வேதியியல் தன்மைகள் போன்றவை குறித்த விவரங்கள் சேகரிப்பதை தொடர்ந்து கண்காணித்தல், கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையகப்படுத்தல் அமைப்புகளை நிறுவுதல்.

### 2.3.2 மழைநீர் சேகரிப்பு

இந்தியாவிலேயே மழைநீர் சேகரிப்புத் திட்டம் அவசியமாகக் கருதி அதனை செயல்படுத்துவதில் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது. 2001 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் சிறப்பான முறையில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

கட்டட அனுமதி வழங்குவதற்கு அனைத்து கட்டடங்களிலும் "மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை கட்டாயமாக அமைக்க வழி வகை செய்யும் விதமாக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், 1973 ஆம் ஆண்டு அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள், 2002 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி கட்டடங்கள் (நீர் பாதுகாப்பு) விதிகள் ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. திருத்தம் செய்யப்பட்ட கட்டட விதிகளின் வாயிலாக மாநிலம் முழுவதும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மழை நீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தமுள்ள 45.14 இலட்சம்

கட்டடங்களில், 39.40 இலட்சம் கட்டடங்களில் (30,331 அரசு கட்டடங்கள் மற்றும் 39.10 லட்சம் தனியார் கட்டடங்கள்) மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்புப் பணிகளை மேற்கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. கோவில் குளங்கள் உட்பட மொத்தமுள்ள 1,486 குளங்களில், 773 குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

மேற்கண்ட நடவடிக்கையின் மூலம் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 88 சதவீத கட்டடங்கள், 52 சதவீத குளங்கள் மற்றும் நீர்நிலைகளில், மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. கட்டடங்கள் மற்றும் நீர்நிலைகளில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தியதன் மூலம் நீர் மீள்நிரப்பு திறன் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. பழனி, காரைக்குடி, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, அரியலூர், நாகப்பட்டினம், சாத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் ஈரோடு மாநகராட்சியில் நீர்வளங்களை மேம்படுத்துவதற்காக ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி (KfW) திட்டத்தின் கீழ் ₹34.28 கோடி நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது.

ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் புதிய கட்டமைப்புகளில் புதிய வடிவமைப்புகள் அமைக்கவும் மாநகராட்சிகள் மற்றும்

நகராட்சிகளில் ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.3.3 கோடை மேலாண்மை திட்டம் 2019

2019ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் போதிய அளவு மழை பெய்யாததால் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகள் கைபம்புகளுடன் அமைத்தல் மற்றும் சிறு மின்விசை பம்புகள் அமைத்தல் கைபம்புகளை பராமரிப்பதற்கான உதிரிபாகங்கள் வாங்குதல், ஆழ்துளை கிணறுகள் / நீர் உறிஞ்சி கிணறுகள் புனரமைப்பு செய்தல், கைபம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளை சிறுமின்விசை பம்புகளாக மாற்றியமைத்தல், டாங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், HDPE டேங்குகள் அமைத்தல் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளைத் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த மோட்டார்களை மாற்றுதல் ஆகிய குடிநீர் பணிகள் செய்யப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டில் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 23 மாவட்டங்களில் உள்ள 7 மாநகராட்சிகள் மற்றும் 75 நகராட்சிகளில் ₹56.05 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள அரசின் மாநில பேரிடர் நிவாரண நிதியில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 976 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 147 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், அவசர

அவசியத்தினை கருத்தில் கொண்டு பொது நிதியிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.4 பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS) மற்றும் கசடு கழிவுநீர் மேலாண்மை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டங்களை (UGSS) அமல்படுத்துவதற்கான கொள்கையை அரசு நிர்ணயித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்ட பின் இத்திட்டங்கள் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### 2.4.1 செயலாக்கத்திலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல், தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், தேனி-அல்லி நகரம், வேலூர், நாகப்பட்டினம் (பகுதி), புதுக்கோட்டை, திருவள்ளூர், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் பல்லவபுரம் ஆகிய நகராட்சிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் பகுதி-III-ன் கீழ் ₹ 1,025.51 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு ₹757.04 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மதுரை, கோயம்புத்தூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகள், தாம்பரம் நகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டத்தின் கீழ் ₹ 925.49 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மறைமலைநகர், அரியலூர், அரக்கோணம், சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், பெரியகுளம், மேட்டூர், நாகர்கோவில் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகரங்களில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ₹ 575.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, மறைமலைநகர் உடுமலைப்பேட்டை, பெரியகுளம் மற்றும் அரியலூர் ஆகிய 4 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 6 நகராட்சிகளில் வெவ்வேறு நிலைகளில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

ஈரோடு மாநகராட்சியில் ₹209.09 கோடி, காரைக்குடி நகராட்சியில் ₹ 112.53 கோடி, பொள்ளாச்சி நகராட்சியில் ₹109.62 கோடி, விழுப்புரம் நகராட்சியில் ₹49.36 கோடி மற்றும் மேட்டுப்பாளையம் நகராட்சியில் ₹91.70 கோடி மதிப்பீட்டில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியின் (kfw) கீழ் பாதாள சாக்கடை திட்டப்பணிகள்

எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் விழுப்புரம் நகராட்சியில் பணிகள் முடிக்கப்பட்டு, வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி, காரைக்குடி, மேட்டுப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

போடிநாயக்கனூர் நகராட்சியில் ₹71.10 கோடி, அரியலூர் நகராட்சியில் (விடுபட்ட பகுதி) ₹3.30 கோடி, பெரம்பலூர் நகராட்சியில் (விடுபட்ட பகுதி) ₹9.50 கோடி சத்தியமங்கலம் நகராட்சியில் ₹54.26 கோடி, மற்றும் ராசிபுரம் நகராட்சியில் ₹55.42 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி (IUDM) திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் போடிநாயக்கனூர், அரியலூர் (விடுபட்ட பகுதி) மற்றும் பெரம்பலூர் (விடுபட்ட பகுதி) ஆகிய 3 நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. சத்தியமங்கலம் மற்றும் ராசிபுரம் ஆகிய 2 நகராட்சிகளில் பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தில் (TNSUDP) கீழ், ஓசூர் மாநகராட்சியில் ₹ 283.94 கோடி நிதி மதிப்பீட்டில் பாதாளசாக்கடைத் திட்டம் செயல்படுத்திட நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அம்ரூத், சீர்மிகு நகரம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் பாதாள சாக்கடைத் திட்டம் பல்லவபுரம் நகராட்சியில் ₹22.00 கோடி, கும்பகோணம் நகராட்சியில் ₹59.84 கோடி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி இரண்டாம் கட்டம் ₹344.00 கோடி, மூன்றாம் கட்டம் ₹312.14 கோடி, திருநெல்வேலி மாநகராட்சி - இரண்டாம் கட்டம் ₹289.01 கோடி மற்றும் மூன்றாம் கட்டம் ₹ 440.19 கோடி, வேலூர் மாநகராட்சி - இரண்டாம் கட்டம் ₹ 343.69 கோடி மற்றும் மூன்றாம் கட்டம் ₹293.77 கோடி, இராமேஸ்வரம் நகராட்சியில் ₹ 52.46 கோடி, கோயம்புத்தூர் மாநகராட்சி (குறிச்சி, குனியமுத்தூர்) ₹442.00 கோடி, ராஜபாளையம் நகராட்சியில் ₹246.99 கோடி தஞ்சாவூர் மாநகராட்சி இரண்டாம் கட்டம் ₹ 93.68 கோடி, கோயமுத்தூர் மாநகராட்சியில் (விடுபட்ட பகுதி) ₹24.38 கோடி மற்றும் ஆம்பூர் நகராட்சியில் ₹ 165.55 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்லவபுரம் நகராட்சியில் பணிகள் முடிக்கப்பட்டும் மற்றும் இதர மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்திலும் உள்ளன.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள ஆவடி (தற்போது மாநகராட்சி), அரியலூர், போடிநாயக்கனூர், கோயம்புத்தூர் (பகுதி), தருமபுரி, திருவண்ணாமலை, பெரியகுளம், திண்டுக்கல் (பகுதி), பல்லவபுரம், மறைமலைநகர், சின்னமனூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, உதகமண்டலம், நாமக்கல், கரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர்,

திருப்பூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, வேலூர், உடுமலைப்பேட்டை, திருவள்ளூர், தேனி-அல்லிநகரம், விருதுநகர், நாகப்பட்டினம் (பகுதி), கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 35 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 6,10,225 (கடந்த ஆண்டு 5,50,386 இணைப்புகள்) வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.4.2 கசடு கழிவு நீர் மேலாண்மை

கழிவுநீர் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ, திட (Sludge), மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் (Scum) ஆகியன மிகையாக காணப்படும். கழிவு நீர்த் தொட்டி வடிவமைப்பு, கழிவு சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். நமது துரிதகதியில் நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், கசடு கழிவினை அகற்றிக் கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்தல், மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஒரு விரிவான திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.

மொத்தம் 15 மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி உள்பட), 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 12,524 கிராம பஞ்சாயத்துக்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 9 மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி உள்பட), 27 நகராட்சிகள் மற்றும்

3 பேரூராட்சிகளில், பாதாளச் சாக்கடை திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாக்கத்தினால் நகரை சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள்தொகை பலமடங்கு உயர்வதாலும், பாதாள சாக்கடை வசதி இல்லாததாலும் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் உருவாகும் கழிவுநீரினை சுகாதார முறையில் கையாள அருகே அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து தொகுப்பு முறையில் (Cluster Basis) செயல்படும் கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் அவசியமானதாகிறது.

### 2.4.2.1 கசடு கழிவு நீர் மேலாண்மையின் தேவை

கழிவு நீர் கசடினை கையாள்வதை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு முழுமையான வழிகாட்டுதலை, அரசாணை (நிலை) எண் 106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள் 01.09.2014 வாயிலாக தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

i. நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்

ii. உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்

iii. கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்

iv. சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்

v. கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல் மற்றும் சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்

vi. தகவல், கல்வி திட்டம் பற்றிய புரிதல் மற்றும் பரிமாற்றம்

vii. மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலமாக ஆவணம் பாதுகாத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 18 முதல் 20 கிலோமீட்டர் சுற்றளவில் சேகரிப்பு இடங்கள் அமைந்துள்ளவாறு 39 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 21 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள், தங்களது உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் கழிவுநீர் கசடுகளை மேற்படி தொகுப்புகளில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீர் கசடுகளை வெளியேற்ற, தொகுப்புகளை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லி யன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | - | 727 | ASP | 560.00 | 77 | 706547 |
| 2 | சின்னமனூர் | 2012 | 4 | ASP | 3.70 | 93 | 6421 |
| 3 | கோயம்புத்தூர் | 2010 | 110 | SBR | 27.00 | 25 | 40052 |
| 4 | கடலூர் | 2016 | 12.25 | ASP | 4.5 | 37 | 8241 |
| 5 | தருமபுரி | 2013 | 4.86 | ASP | 1.86 | 38 | 3563 |
| 6 | திண்டுக்கல் | 2012 | 13.65 | ASP | 2.6 | 19 | 12361 |
| 7 | காஞ்சிபுரம் | 2012 | 14.7 | WSP | 14.5 | 99 | 22707 |
| 8 | கரூர் | 2007 | 15 | EAP | 4.7 | 31 | 11485 |
| 9 | கும்பகோணம் | 2009 | 17 | ASP | 14 | 82 | 19926 |
| 10 | கிருஷ்ணகிரி | 2016 | 9 | ASP | 4.25 | 47 | 7521 |
| 11 | மதுரை | 2011 | 170.7 | SBR | 40 | 23 | 162974 |
| 12 | மறைமலைநகர் | 2010 | 2.02 | EAP | 2 | 99 | 4611 |
| 13 | மயிலாடுதுறை | 2007 | 8.5 | WSP | 5.86 | 69 | 11084 |
| 14 | மாமல்லபுரம் | 2016 | 2.34 | ASP | 0.45 | 19 | 368 |
| 15 | நாமக்கல் | 2012 | 5 | ASP | 5.3 | 106 | 9325 |
| 16 | நாகப்பட்டினம் | 2016 | 12.59 | ASP | 3.2 | 25 | 7845 |
| 17 | ஒரத்தநாடு | 2016 | 1.5 | ASP | 0.9 | 60 | 1108 |
| 18 | பல்லவபுரம் | 2011 | 0 | ASP | 13 |  | 26710 |

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | பெரம்பலூர் | 2013 | 4.2 | ASP | 3.2 | 76 | 11608 |
| 20 | புதுக்கோட்டை | 2016 | 10.62 | ASP | 3 | 28 | 12155 |
| 21 | இராமநாதபுரம் | 2013 | 7 | ASP | 6 | 86 | 10295 |
| 22 | தஞ்சாவூர் | 2007 | 28.05 | ASP | 13.07 | 47 | 28094 |
| 23 | திருவண்ணா மலை | 2013 | 8.76 | ASP | 2.7 | 31 | 6650 |
| 24 | தேனி -அல்லிநகரம் | 2015 | 12.05 | ASP | 5.02 | 42 | 9567 |
| 25 | திருவள்ளூர் | 2016 | 6.2 | MBBR | 2.5 | 40 | 6280 |
| 26 | திருவாரூர் | 2014 | 6.92 | ASP | 3 | 43 | 6389 |
| 27 | திருநெல்வேலி | 2007 | 24.2 | WSP | 11 | 45 | 25412 |
| 28 | திருப்பூர் | 2008 | 15 | EAP | 8 | 53 | 15495 |
| 29 | திருச்செந்தூர் | 2016 | 3.9 | ASP | 1 | 26 | 86 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 2007 | 58 | WSP | 56 | 97 | 59547 |
| 31 | உதகமண்டலம் | 2000 | 5 | ASP | 4 | 80 | 15969 |
| 32 | உடுமலைப்பேட்டை | 2016 | 7.81 | ASP | 3.84 | 49 | 9740 |
| 33 | வேலூர் | 2015 | 10.28 | ASP | 6 | 58 | 6984 |
| 34 | விருதுநகர் | 2016 | 7.65 | ASP | 1.5 | 20 | 4721 |
| 35 | விழுப்புரம் | 2014 | 12.5 | ASP | 3.5 | 28 | 6336 |
| 36 | பெரியகுளம் | 2017 | 5.47 | ASP | 4 | 73 | 7098 |

| வ.எண் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லி யன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 37 | ஆவடி | 2017 | 40 | ASP | 1.05 | 3 | 16668 |
| 38 | அரியலூர் | 2018 | 4.16 | ASP | 0.2 | 5 | 1721 |
| 39 | போடிநாயக்கனுர் | 2018 | 12.08 | ASP | 2.50 | 21 | 9668 |
| | **மொத்தம்** | | 1419.96 | | 848.9 | 1900 | 1333332 |

சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல், நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டிகளிலிருந்து கழிவுநீர் 211 எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட லாரிகளில் அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 50,000 மக்களுக்கு பயன்படும் வகையிலான முன்மாதிரியான கசடு கழிவு மேலாண்மை திட்டம் பில் அண்டு மெலின்டா கேட்ஸ் நிறுவனத்தின் (Bill and Melinda

Gates Foundation) உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனைத்தொடர்ந்து பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தாத 49 நகராட்சிகளில் (மக்கள் தொகை 50,000-க்கு குறைவாக உள்ள நகராட்சிகள்) கசடு கழிவு மேலாண்மை திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்ட நிதியுதவியுடன் (IUDM) செயல்படுத்தப்பட்டு வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டம் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும்போது நிலத்தடிநீர் மாசுபடுவது தடுக்கப்படுவதுடன், சுற்றுசூழல் மேம்படும். இதிலிருந்து கிடைக்கப்பெறும் உரம் விவசாயத்திற்கு பயன்படும். மேலும், இதனால் 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகளிலுள்ள 34.36 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

## 2.5 விலங்குகள் (நாய்கள்) இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்

விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம் என்பது, தெரு நாய்களை மனிதாபிமானமற்ற முறையில் கொல்லப்படுவதற்கு பதிலாக, அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக செயல்படுத்தப்படுவதாகும். உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி பரிந்துரைக்கப்பட்ட இத்திட்டம், மாநகராட்சி/நகராட்சிகளின் பொது சுகாதார பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 181, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.04.2013ன்படி, அரசால்

இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ₹5.40 கோடியில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு (சென்னை தவிர) தெரு நாய்களை கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காக கொண்டு செல்ல ₹3.00 கோடி செலவில் 60 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் ₹2.40 கோடி செலவில் 80 அறுவைச் சிகிச்சை கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திட துப்புரவு பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி (சென்னை தவிர) பகுதிகளில் 2013ஆம் ஆண்டில் தெருவில் சுற்றித்திரியும் நாய்களின் எண்ணிக்கை 2,42,655 என கணக்கெடுக்கப்பட்டது. இந்த கணக்கெடுப்பின்படி, தற்போது மார்ச் 2019-ஆம் ஆண்டு வரை 18662 நாய்களுக்கு ₹1.15 கோடி மதிப்பில் தனியார் கால்நடை மருத்துவர்கள் மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் நாய்கள் வசதியான கூடங்களில் தீவிர கண்காணிப்பில் வைக்கப்படுகின்றன. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கு நோய்கள் ஏற்படாதவாறு நோய்தடுப்பு மருந்துகள் அளிக்கப்படுகிறது. மீதமுள்ள தெரு நாய்களுக்கும் தொடர்ச்சியாக அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.6 திடக்கழிவு மேலாண்மை

தினந்தோறும் சுமார் 6394 மெட்ரிக் டன் திடக்கழிவு தமிழகத்தில் உள்ள 14 மாநகராட்சிகள் (சென்னை தவிர) மற்றும் 121 நகராட்சிகளில் உற்பத்தியாகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகள் முதல் நிலை சேகரிப்பு, கழிவினை எடுத்துச் செல்வது மற்றும் திடக்கழிவாக மாற்றம் செய்தலாகும். திடக்கழிவுகளை கையாள தூய்மை இந்தியா திட்டம் மற்றும் மாநில நிதியின் கீழ் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மக்கும் கழிவுகள் பரவலாக்கப்பட்ட முறையில் சிறிய அளவிலான உரக்கூடங்கள் அமைத்து ஒருங்கிணைந்த காற்றாடல் முறையில், உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், உயிரி எரிவாயு கூடம் அமைத்தல் போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளன. மக்காத கழிவுகள் மறுசுழற்சி மற்றும் கழிவுமீட்பு சேகரிப்பு மையம் மூலம் சேகரிக்கப்பட்டு மறுசுழற்சிக்காக அடையாளம் கண்டறியப்பட்டு விற்பனையாளர்களிடம் ஒப்படைப்பு செய்யப்படுகிறது. உயிரி அகழ்வு முறையில் பல ஆண்டுகளாக தேக்கி வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகள் அகற்றப்பட்டு அதற்கான நிலம் மீட்டெடுக்க நடவடிக்கையில் உள்ளது.

### 2.6.1 திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் திடக்கழிவு மேலாண்மை கொள்கை.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ நடைமுறைப்படுத்தும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளாலும் உப விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி, பயனாளர் கட்டணம் மற்றும் அபராதத் தொகையை உள்ளடக்கி இந்த உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும், அவற்றிற்குரிய திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்திட்டத்தினையும் தயாரித்துள்ளன.

### 2.6.2 திடக்கழிவு மேலாண்மையில் கழிவு சேகரிக்கும் செயல்முறை

ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள வீடுகள்தோறும் அவ்வப்போது கழிவுகள் சேகரிக்கும் நடைமுறை உள்ளது. ஈரக்கழிவுகள் வீடுதோறும், நாள்தோறும், சேகரிக்கப்பட்டு அருகாமையிலுள்ள நுண்ணுரக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. வீடுகளில் உருவாகும் அபாயகரமான கழிவுகளான நேப்கின், டையாப்பர் போன்றவை தனியாக தினந்தோறும் சேகரிக்கப்பட்டு நுண்ணுரக் கூடங்களில் நிறுவப்பட்டுள்ள எரியூட்டிகள் மூலம் எரியூட்டப்படுகின்றன. இதர அபாயகரமான கழிவுகளான பெயின்ட் டப்பாக்கள், வெப்பமானிகள், காலாவதியான மருந்துகள், குழாய் விளக்குகள் போன்றவை வாரந்தோறும் தனியாக சேகரிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள வள மீட்பு வசதி / பொருள் மீட்பு வசதி மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயலாக்குநரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. மின்னணுக்

கழிவுகள் மாதந்தோறும் சேகரிக்கப்பட்டு வள மீட்பு வசதியில் சேமிக்கப்பட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் அவ்வப்போது ஒப்படைக்கப்பட்டு அகற்றப்படுகின்றது.

### 2.6.3 வீடுகள் தோறும் கழிவு சேகரித்தல் மற்றும் பிரித்தல்

திடக்கழிவு மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து முயற்சிகளாலும் 94 சதவீதம் வீடுதோறும் கழிவு சேகரிப்பும், 80 சதவீதம் கழிவு உருவாகும் இடத்திலேயே பிரித்தலும் எய்தப்பட்டுள்ளது.

### 2.6.4 ஈரக்கழிவுகள் செயலாக்க முறைகள்.

#### 2.6.4.1 உயிரி எரிவாயு கூடங்கள்

11 மாநகராட்சிகள் மற்றும் 27 நகராட்சிகளில் உற்பத்தியாகும் மக்கும் தன்மையுள்ள கழிவுகள், குறிப்பாக உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியன மூலம் பெறப்பட்டு 47 உயிரி எரிவாயு கூடங்கள் மொத்தம் 197 மெட்ரிக் டன் திறனுடன் ₹37.42 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம், பகுதி-2 திட்டம், இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டுடன் உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. உயிரி எரிவாயு கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் ஆற்றல், நகராட்சி உரக்கிடங்குகளிலுள்ள மின் விளக்குகளை எரிய வைக்கவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை

இயக்குவதற்கும், திரவக்கழிவுகளை சுத்தப்படுத்தும் அலகுகளை இயக்குவதற்கும், அம்மா உணவகங்களின் சமையல் எரிவாயு பயன்பாட்டிற்கும், எரிவாயு தகனமேடை இயக்கத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**2.6.4.2 பரவலாக்கப்பட்ட சிறிய அளவு உர உற்பத்தி கூடம்**

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 4 அல்லது 5 வார்டுகளை உள்ளடக்கி பரவலாக்கப்பட்டு சேவை பகுதிகள் பிரிக்கப்பட்டு, அவற்றில் சிறிய அளவு உரக்கூடங்கள் அமைக்கப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. அந்தந்த பகுதியில் உருவாகும் மக்கும் கழிவுகள் அங்கேயே செயலாக்கப்படுகிறது. இம்முறையை பின்பற்றுவதில் போக்குவரத்து செலவுகள் குறைவதுடன் குப்பைத்தொட்டிகள் இல்லாத தெருக்கள் மற்றும் வார்டுகள் நிலையை அடைய முடிவதுடன் உள்ளூர் சுய உதவி குழுக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கப் பெற்றது.

தற்போது 794 நுண்ணுர உற்பத்தி மையங்கள் நாளொன்றுக்கு 3087 மெட்ரிக் டன் மக்கும் தன்மையுள்ள கழிவுகளை செயலாக்கம் செய்ய ஏதுவாக ஒப்புதலளிக்கப்பட்டு, அவற்றுள் 316 எண்ணிக்கையில் நுண்ணுர உற்பத்தி மையங்கள் முடிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 1015 டன் மக்கும் தன்மையுள்ள கழிவுகளை செயலாக்கம் செய்யும் வண்ணம் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.6.4.3 காற்றாடல் முறையில் உரம் தயாரித்தல்.

காற்றாடல் முறையில் உரம் தயாரிக்கும் முறையானது 36 உள்ளாட்சி அமைப்புகளில் 5 மாநகராட்சிகள் மற்றும் 31 நகராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறையில் நாளொன்றுக்கு 258 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகள் செயலாக்கம் செய்யப்பட்டு, அதில் 39 மெட்ரிக் டன் உரமானது தயார் செய்யப்பட்டு விவசாய பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

### 2.6.4.4 சிறிய அளவிலான நுண்ணுரக் கூடங்கள்

பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் உருவாகும் தோட்டக் கழிவுகளையும் அவற்றைச் சுற்றியுள்ள வீடுகளில் உருவாகும் ஈரக்கழிவுகளையும் செயலாக்கம் செய்யும் விதமாக, நுண்ணுர கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் நாளொன்றுக்கு 416 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை செயலாக்கம் செய்யும்விதமாக சிறிய அளவிலான 876 நுண்ணுர கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன.

### 2.6.4.5 உரம் உபயோகிக்கும் முறை

உள்ளாட்சி அமைப்புகளில் தரம்பிரிக்கப்பட்ட திடக் கழிவுகளைக் கொண்டு, மக்கும் தன்மை கொண்ட கழிவுகளின் மூலமாக உரம் தயாரிக்கும் பணி பல்வேறு வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வுரமானது நுண்ணுர கூடங்களைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள

தோட்டங்களில் உபயோகப்படுத்தப்படுவதுடன், விவசாய பயன்பாட்டிற்காக விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகின்றது. கம்போஸ்ட் உபயோகத்தை அதிகப்படுத்த மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் கம்பெனி உதவியுடன் கம்போஸ்ட் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. 2016 முதல் மே 2019 வரை 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் உருவான 15,570 மெட்ரிக் டன் கம்போஸ்ட் உரமானது சலுகை விலையிலோ / இலவசமாகவோ விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் பராமரிக்கப்படும் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களுக்கு கம்போஸ்ட் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.6.5 உலர் கழிவு செயலாக்கம்

#### 2.6.5.1 பொருள் மீட்பு வசதி

உள்ளாட்சிகளில் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் சேகரிக்கப்படும் உலர் கழிவுகள், பொருள் மீட்பு வசதி மையத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதுவரை 91 மையங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் 24 மையங்கள் அமைக்கும் பணி நடைமுறையில் உள்ளது. விற்பனைக்கான உலர் கழிவுகள் விற்பனையாளர்களிடம் விற்கப்பட்டு, அத்தொகை நகராட்சியில் தூய்மை பணி மேற்கொள்பவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. எரியும் தன்மை கொண்ட உலர் கழிவுகள் அனைத்தும் சிமெண்ட் தொழிற்சாலை / பேப்பர் தொழிற்சாலை / மின் உற்பத்தி நிலையங்கள் / சர்க்கரை ஆலைகளுக்கு எரிபொருள்

உபயோகத்திற்காக அனுப்பப்படுகின்றது. வீடுகளில் சேகரம் செய்யப்படும் அபாயகரமான கழிவுகள் மற்றும் மின்னணுக் கழிவுகள் இம்மையங்களில் சேமித்து வைக்கப்பட்டு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட செயலாக்குநரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

### 2.6.5.2 வெப்பச்சிதைவு (Pyrolysis)

வெப்பச் சிதைவு (Pyrolysis) முறையானது மக்க வைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்குள்ளாக்க இயலாத திட உயிரியல்புகளை எரியூட்டி அதன் வாயிலாக எளிதில் சேமித்து வைக்கக்கூடிய மற்றும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய திரவ எண்ணெயாக மாற்றக்கூடிய முறையாகும். இந்த எண்ணெயை வெப்பம் மற்றும் வேதிப்பொருள் உருவாக்கும் ஆற்றல் எரிபொருளாகப் பயன்படுத்தலாம். இந்த முறையைக் கையாண்டு சாத்தியமான உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவின் அங்கமான மக்கவைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்குள்ளாக்க இயலாத நெகிழிப் பைகள், (Plastic) துணிகள் மற்றும் இதர எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகளை செயலாக்கம் செய்வதற்கான பைராலிசிஸ் மையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

### 2.6.5.3 உயிரி சுரங்கம் மற்றும் உயிரி மீட்டெடுத்தல் அமைத்தல்

உயிரி சுரங்கம் முறையில் பழைய தேக்க திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்படுகிறது. கும்பகோணம் நகராட்சியில் உயிரி சுரங்க முறையில் 2,00,000 கன மீட்டர்

கொள்ளளவு தேக்க திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டு, 12 ஏக்கர் நிலம் மீட்டெடுப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக செம்பாக்கம், பம்மல் மற்றும் பூந்தமல்லி நகராட்சிகளில் 1,26,000 கன மீட்டர் கொள்ளளவு தேக்க திடக்கழிவுகள் நீக்கப்பட்டு 10 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 5 மாநகராட்சிகள் மற்றும் 87 நகராட்சிகளில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் உயிரி சுரங்கம் அமைத்தல் பணி எடுக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலையிலுள்ளது. இப்பணிக்கான அளவுகளையும் தரத்தினையும் ஆய்வு செய்ய கிண்டியிலுள்ள அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வு மையம் 92 உள்ளாட்சிகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டியாக நியமிக்கப்பட்டு உள்ளது.

### 2.6.5.4 நெகிழி (பிளாஸ்டிக்) தடை

அரசாணை (நிலை) எண்.84 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (EC2) நாள். 25.06.2018ன் படி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகள் 01.01.2019 முதல் தடைசெய்யப்பட்டது. ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை உற்பத்தி செய்வதற்கும், சேமிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் உரிய தண்டனை விதிக்க சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை நெகிழியை குறைப்பதற்கும் நீண்ட காலமாக சுற்றுச்சூழலின் மாசுபடுதலை தடுப்பதற்கும் எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க முயற்சியாகும். இத்தடையை நடைமுறைப்படுத்தும் விதமாக உள்ளாட்சி

அமைப்புகளால் அபராதம் மற்றும் பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜனவரி 2019 முதல் 30.06.2019 வரையிலான காலத்தில் 559.49 மெட்ரிக்டன் நெகிழிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் ₹178.54 இலட்சம் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**2.7 சாலைகள்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பில் சாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. பாதுகாப்பான வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பான நடமாட்டத்திற்கான சிறந்த சாலைகளை அமைப்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய குறிக்கோளாகும். சாலைகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் சேதமடைந்த சாலைகளை செப்பனிடுதல் உள்ளிட்ட அனைத்து சாலை பணிகளும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MoRTH) விவரக் குறிப்புகளின் அடிப்படையில் செலவு மற்றும் பயன்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் சாலைகள் தரமாக வடிவமைக்கப்படுகின்றன.

மொத்தம் 23,464.607 கி.மீ நீளமுள்ள சாலைகள் மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 5504.71 கி.மீ நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரிட் சாலைகளும், 15,975.683 கி.மீ நீளத்திற்கு தார்சாலைகளும்,

592.218 கி.மீ நீளத்திற்கு கப்பி சாலைகளும் 1156.255 கி.மீ நீளத்திற்கு மண்சாலைகளும், மீதமுள்ள 236.10 கி.மீ நீளத்திற்கு செதுக்கப்பட்ட கற்கள், பேவர் பிளாக்குகள் போன்றவற்றால் சாலைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம், மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவை மூலம் சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இவை தவிர சீர்மிகு நகரங்கள் என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 10 மாநகராட்சிகளில் நடைபெற்று வருகின்றன.

**2.7.1 நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)**

குடிநீர் விநியோகத் திட்டங்கள், பாதாள சாக்கடை திட்டங்கள் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்து மேம்படுத்தும் பணிக்காக நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் அரசால் உருவாக்கப்பட்டது.

கடந்த எட்டு ஆண்டுகளில் (2011-12 – 2018-19) குடிநீர் விநியோகத் திட்டச் செயலாக்கம், பாதாள சாக்கடை திட்டச் செயலாக்கம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 6083.46 கி.மீ சாலைகள் ₹3050.65 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்கொள்ளப்பட்ட 5310 பணிகளில் ₹2560.42 கோடியில் 4947 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| வருடம் | நிதி ஒதுக்கீடு (₹ கோடியில்) | நீளம் (கி.மீ) | எடுத்துக்கொள்ளப் பட்ட பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2011-12 | 200.00 | 584.394 | 1035 |
| 2012-13 | 186.50 | 516.115 | 1084 |
| 2013-14 | 265.61 | 523.313 | 1063 |
| 2014-15 | 263.12 | 501.610 | 1084 |
| 2015-16 | 258.29 | 1016.410 | 248 |
| 2016-17 | 247.16 | 871.35 | 258 |
| 2017-18 | 411.16 | 832.07 | 224 |
| 2018-19 | 659.56 | 1238.20 | 314 |
| மொத்தம் | 2491.4 | 6083.462 | 5310 |

## 2.8 தெருவிளக்கு

அடிப்படை வசதிகளுள் தெருவிளக்கு அமைப்பது உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பொறுப்பாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தரக்கட்டுப்பாடு அளவீட்டின்படி தெருவிளக்குகளை திறம்பட பராமரித்து, குறைந்த செலவில் சேவை வழங்கப்பட்டு வருகிறது. 7.58 லட்சம் தெரு விளக்குகள் 14 மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) மற்றும் 121 நகராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தெரு விளக்குகளுக்கான மின் கட்டண செலவு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த மின் கட்டண செலவில் 25% - 30% ஆகும். இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மிகுந்த நிதிச்சுமை ஏற்படுத்துகிறது. மின்சக்தித் திறனை மேம்படுத்தவும் பராமரிப்புச் செலவை தற்போதைய கட்டணத்தில் குறைந்த பட்சமாக 35 % ஆக குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக 9 மாநகராட்சிகள் தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலங்களின் 34 நகராட்சிகளிலும் மின்சார சேமிப்பு நிறுவனங்கள் (Energy Saving Companies) மூலம் செயலாக்கம் மற்றும் பராமரித்தல் உட்பட்ட மின்சார சேமிப்பு நடவடிக்கை ஒரு முன் மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கத்தின் மூலம் ₹ 183.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 3,13,507 தெருவிளக்குகளில், 2,16,680 தெருவிளக்குகள் மின்சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெருவிளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டிற்கு ₹32 கோடி மின்கட்டணத்தில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் 10 மாநகராட்சிகளில் அனைத்து வகையான தெருவிளக்குகளையும் மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெருவிளக்குகளாக சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் மாற்றி அமைக்கப்படவுள்ளது.

திண்டுக்கல், நாகர்கோயில், ஓசூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகள் மற்றும் எஞ்சியுள்ள 87 நகராட்சிகளில்

உள்ள 3,07,300 அனைத்து வகையான தெருவிளக்குகளையும், மின் சேமிப்பு விளக்காக எல்இடி (LED) மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதலீட்டு தர தணிக்கை வேலைகள் முடிவுற்று தொடர் நடவடிக்கையில் உள்ளது.

### 2.9 சிறப்பு உட்கட்டமைப்புத் திட்டம்

#### 2.9.1 நவீன எரிவாயு தகன மேடை

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விறகுகள் பயன் பாட்டிற்கு பதிலாக நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படுகின்றன. முன்னர் எரியூட்டுவதற்கு 4 மணி நேரம் தேவைப்பட்டது. மேற்படி எரிவாயு தொழில்நுட்பத்தினால் தற்போது எரியூட்டும் நேரம் 60 முதல் 90 நிமிடமாக குறைக்கப்படுகிறது. மழைக்காலங்களில் கூட திறன்பட எரியூட்ட முடியும்.

இதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 96 நகர்ப்புற உள்ளாட்சிகளில் ₹39.38 கோடி செலவில் 114 நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. அதில் 107 தகன மேடைகள் கட்டி முடிக்கப்பட்டு, பொது நல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 7 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.9.2 நவீன இறைச்சிக் கூடங்கள்

அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் சுகாதாரமான முறையில் இறைச்சிக் கூடங்களை நடத்த நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது, இறைச்சிக் கூடங்களை நவீனப்படுத்துதலை ஊக்குவிக்கவும், சுகாதாரமாகவும் சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் அவற்றை இயக்கவும், சுகாதாரக் குறைப்பாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஆண்டுகளில் பகுதி-2 திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி ஆகியவற்றின் கீழ், 8 மாநகராட்சிகள் மற்றும் 26 நகராட்சிகளில் ₹ 10.81 கோடி மதிப்பீட்டில் 38 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் "உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் 50 விழுக்காடு மானிய நிதி உதவியுடன் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ₹ 10.49 கோடி மதிப்பீட்டில் 2 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டதில் ஒரு பணி முடிக்கப்பட்டுள்ளது.

### 2.9.3 கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவுதல்

தமிழக அரசு மழைநீர் சேமிப்புத் திட்டத்தை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது போல், மின்

சக்தியை சேமிக்கவும், சிக்கன முறையில் பராமரிக்கவும், சூரிய எரிசக்தி திட்டத்தை கொண்டுவர முடிவு செய்தது.

தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012-ன் படி 3000 மெகா வாட் சூரிய மின்சக்தி திறன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கையானது மேற்கூரையில் சூரிய எரிசக்தி தகடுகள் அமைத்தல், சூரிய ஒளி மூலம் சுடுநீர் தயாரித்தல் மற்றும் சூரிய ஒளி பூங்கா போன்றவற்றை உள்ளடக்கியது. நகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி மின்உற்பத்தி செய்ய தகடுகள் பொருத்தி அதன் மூலம் அன்றாட அலுவலக பயன்பாட்டிற்கு மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளவும், அடுத்த கட்டமாக சூரிய மின்சக்தியை நகராட்சி தெருவிளக்குகளுக்கும், குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 445 நகராட்சி கட்டடங்களில் சூரிய சக்தி பலகைகள் அமைக்கப்பட்டு, 2,198 கிலோ வாட் (KWh) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாக கட்டட மேற்கூரையில் சூரியஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தகடுகளை (போட்டோவோல்டிக்) அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டடங்கள், குடிநீர் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்குகளில் சேர்த்து அமைக்க வருங்காலத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

சூரிய ஒளி தகடுகள் மூலம் உள்ளாட்சிகளிலுள்ள 2,825 கட்டட மேற்கூரையில் 11 மெகா வாட் சூரிய சக்தி திறன் உற்பத்தி செய்ய சாத்தியக் கூறு கண்டறியப்பட்டுள்ளது. 2018-19-ம் ஆண்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் திருச்சி, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளில் 640 கட்டடங்களில் 2.94 மெகா வாட் சூரிய மின் சக்தி ஆற்றல் தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,185 கட்டடங்களில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 8.06 மெகா வாட் மின்னாற்றல் சூரிய ஒளி தகடு மூலம் உற்பத்தி செய்ய 2019-20 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.9.4 தரைதளத்தில் சூரிய மின்தகடுகள் நிறுவுதல் (Ground-Mounted Solar Panel System)

கோயம்புத்தூர், திருச்சி, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளில் 2018-19 ஆம் ஆண்டில் தரைதளத்தில் சூரிய மின்தகடுகள் நிறுவுதல் திட்டம் ₹102.35 கோடி மதிப்பீட்டில் 18.42 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒரு பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. பிற மாநகராட்சிகளில் மேற்குறிப்பிட்ட பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 2.10 மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Capital Grant Fund and O & M Gap Filling Fund )

### 2.10.1 மூலதன மானிய நிதி (Capital Grant Fund)

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி உருவாக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு நிதியில் 7% முதல் 15% வரை நிலை வாரியாக வழங்கப்படுகிறது. அரசின் முயற்சியால் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத மற்றும் மூலதன நிதியின் பணிகள் மேற்கொள்ள முடியாத நிதி நிலைமை மோசமாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவுவதற்கு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைக்கு ஏற்றவாறு அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான மூலதன பணிகளுக்காக அரசால் இந்நிதி வழங்கப்படுகிறது. 2018-19ம் ஆண்டில் ₹455.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 12 புதிய பணிகளுக்கு ₹25.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ₹429.41 கோடியினை உள்ளாட்சிகளின் பங்களிப்புத் தொகையினை AMRUT, UIDSSMT, IUDM போன்ற திட்டங்களில் நடைபெறும் பணிகளுக்கான உள்ளாட்சிகளின் பங்களிப்புத் தொகையினை ஈடுசெய்வதற்கு ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

### 2.10.2 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O & M Gap Filling Fund )

இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், பாதாள சாக்கடை திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவிற்கும் நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் மின்கட்டணம் செலுத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது, உள்ளாட்சிகளுக்குண்டான இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது 3 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக 5வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உயர்த்தப்பட்டுள்ளது. இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ₹599.26 கோடி மதிப்பீட்டில் 510 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றில் 436 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2018-19ம் ஆண்டில் ₹151.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 8 புதிய பணிகளுக்கு ₹40.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள தொகையான ₹111.47 கோடி தொகையான இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் AMRUT, UIDSSMT, IUDM போன்ற திட்டங்களில் நடைபெறும் பணிகளுக்குண்டான உள்ளாட்சிகளின் பங்களிப்புத்

தொகையினை ஈடுசெய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்(IUDM)

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் ₹589.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் கீழ் தற்போது நடைபெற உள்ள திட்டங்களை ஒருங்கிணைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வசதி, பாதாள சாக்கடை மற்றும் துப்புரவு வசதி, மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் பூங்கா வசதி ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் தரம் ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தப்படும். இத்திட்டம் 2018-19 ஆம் ஆண்டில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. 290 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.12 துப்புரவு பணியாளர்கள் நலன்

நகர்ப்புற உள்ளாட்சிப் பணியாளர்களில் 70% துப்புரவு பணியாளர்கள் ஆவர். (43,089 பணியாளர்களில் 30,109 பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள்) நகர்ப்புற உள்ளாட்சிகளில் முக்கிய பணியான அடிப்படை சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்துவது அவர்களின் முக்கிய பணியாகும். இவர்களின் பணிகளை கண்ணியம் மிக்கதாக மேம்படுத்தலும், பாதுகாப்பான ஆரோக்கியமான பணிச்சூழலை அனுசரித்தலும் மிக முக்கியமானதாகும்.

அரசு, கடந்த எட்டு ஆண்டுகளில் துப்புரவு பணியாளர்களுக்கான 1,366 குடியிருப்புகளை உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் பகுதி-2 திட்டங்களின் நிதியிலிருந்து கட்டுவதற்காக ₹ 99.44 கோடியினை பின்வருமாறு ஒதுக்கீடு செய்துள்ளது:

| வருடம் | உள்ளாட்சிகளின் எண்ணிக்கை | குடியிருப்பு களின் எண்ணிக்கை | தற்போதைய நிலை | |
|---|---|---|---|---|
| | | | முடிக்கப் பட்டவை | முன்னேற்றத்தில் உள்ளவை |
| 2011-12 | 3 | 72 | 72 | 0 |
| 2012-13 | 6 | 80 | 80 | 0 |
| 2013-14 | 11 | 336 | 336 | 0 |
| 2014-15 | 8 | 214 | 214 | 0 |
| 2015-16 | 5 | 200 | 200 | 0 |
| 2016-17 | 4 | 134 | 30 | 104 |
| 2017-18 | 9 | 300 | 0 | 300 |
| 2018-19 | 2 | 30 | 0 | 30 |
| Total | 48 | 1366 | 932 | 434 |

மேலும் சுகாதார பணியாளர்களின் பணியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தள்ளுவண்டிகளின் மூலம் திடக்கழிவுகளை அகற்றுவதை தடுப்பதற்காக Battery Operated Garbage Collection (BOV) மற்றும் Vehicle and Motor Operated Light Commercial Vehicle (LCV)க்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுகாதார பணியாளர்கள் தங்கள் பணியினை கண்ணியமிக்கதாகவும்,

பாதுகாப்பாகவும் செய்யமுடியும். இந்த BOV மற்றும் LCVக்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் நிதி பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

| வருடம் | BOV | LCV |
|---|---|---|
| 2017-18 | 2629 | 809 |
| 2018-19 | 3193 | 463 |
| மொத்தம் | 5822 | 1272 |

### 2.13 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

#### 2.13.1 சீர்மிகு நகரங்கள்

மத்திய அரசு 25.06.2015-ம் தேதியன்று சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை துவக்கியது. மக்களுக்கு முக்கிய உட்கட்டமைப்பு சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகளின் பயன்பாடு போன்ற உயர்தரமான வாழ்க்கை தரத்தை உள்ளடக்கிய நகரமாக மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) மற்றும் நகர முழுமைக்கும் திறன்வாய்ந்த தீர்வுகளை பயன்படுத்துதல் (PAN CITY) போன்றவை சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் இரண்டு முக்கிய கூறுகள் ஆகும்.

பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) என்பது போதிய குடிநீர் வழங்கல், உறுதியளிக்கப்பட்ட மின்சார விநியோகம் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை உட்பட்ட சுகாதாரம்,

நகர்ப்புற போக்குவரத்து மற்றும் தனிநபர் ஆகியவற்றுக்கான செம்மையான ஏற்பாடு, மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார சக்திக்கு ஏற்ற குறைந்த விலையில் வீட்டுவசதி, வலுவான தகவல் தொழில் நுட்ப இணைப்பு வசதி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல், சிறந்த ஆளுகை குறிப்பாக மின் ஆளுகை (e-governance) மற்றும் மக்கள் பங்கேற்பு, நிலையான சுற்றுச்சூழல், பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் கல்வி போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

நகர முழுமைக்குமான வளர்ச்சி (Pan City Development)யின் கீழ் நகரம் முழுவதும் ஏற்கனவே அமைந்துள்ள உட்கட்டமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்தி கட்டமைப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் ஆகும்.

தமிழ்நாட்டில் 2015-16-ம் ஆண்டில் நகரங்களுக்கிடையே போட்டியின் அடிப்படையில் முதல் சுற்றில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2016-17ம் வருடத்தில் இரண்டாம் சுற்றில் மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2017-18ம் வருடத்தில் மூன்றாம் சுற்றில், தூத்துக்குடி, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராபள்ளி மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

நான்காம் சுற்றில் ஈரோடு மாநகராட்சியும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சீர்மிகு நகரங்களிலும், சிறப்பு தேவைக்கான அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கூறிய மாநகராட்சிகளில் ₹10606.05 கோடி மதிப்பீட்டில் 287 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 29 பணிகள் ₹103.95 கோடி மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. 156 பணிகள் ₹4411.66 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. பிற பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

மத்திய அரசின் பங்களிப்பில் ₹ 1653 கோடியும் மற்றும் மாநில அரசின் பங்களிப்பில் ₹1091 கோடியும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு பணிகளை செயல்படுத்துவதற்காக விடுவிப்பதற்கு திட்ட இயக்குநரகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகர திட்ட செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் ஏழாவது இடத்தில் உள்ளது.

### 2.13.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)

மத்திய அரசால் 25.06.2015 அன்று அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம்

மக்களுக்கு நேரடியாக சிறந்த சேவைகளை வழங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள 12 மாநகராட்சிகள், 20 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆகியவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 9 உள்ளாட்சிகளிலும், 1 பாதாள சாக்கடை திட்டப்பணி மற்றும் 90 பூங்காக்கள் அமைத்தல் ஆகிய பணிகள் 24 உள்ளாட்சிகளில் ₹ 2067.83 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த 2015-16 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் தஞ்சாவூர் குடிநீர் மேம்பாட்டுப்பணி, பல்லவபுரம் பாதாள சாக்கடை பணி மற்றும் 90 பூங்காக்கள் அமைக்கும் பணி ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கோயம்பத்தூர் 24X7 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், 8 பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் 24 உள்ளாட்சிகளில் 133 பூங்காக்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ₹3017.35 கோடி மதிப்பீட்டில் 2016-17-ஆம் ஆண்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு பூங்கா பணிகள் முடிவுற்று குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

2017-20-ஆம் வருடத்தில் 3 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 4 பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் 24 உள்ளாட்சிகளில் 135 பூங்காக்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ₹4228.95 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு பூங்கா பணிகள் முடிவுற்று பிறபணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

மத்திய அரசின் பங்களிப்பில் ₹ 1732.67 கோடி மற்றும் மாநில அரசின் பங்களிப்பில் ₹ 887.78 கோடி சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிப்பதற்காக திட்ட இயக்குநரகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தேவையான உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு, ஆசிய மேம்பாட்டு வங்கி/ ஜெர்மன் வங்கி நிதி/ தமிழ்நாடு நீடித்த உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி/ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம்/மூலதன மான்ய நிதியின் கீழ் பெற முன்மொழியப்பட்டுள்ளது.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்ட செயலாக்கத்தில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் பதின்மூன்றாவது இடத்தில் உள்ளது.

### 2.13.3 தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)

இத்திட்டமானது 7 உட்கூறுகளை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் இரண்டு

உட்கூறுகளான நகர்ப்புற வீடற்றோர்க்கு உறைவிடம் மற்றும் நகர்ப்புற நடைபாதை வியாபாரிகளுக்கான நலத்திட்டம் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### 2.13.3.1 நகர்ப்புற வீடற்றோர்க்கு உறைவிடம்

இத்திட்டத்தின் அங்கீகார குழுவின் 5 கூட்டங்களின் மூலம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் ₹ 107.60 கோடி திட்ட நிதியில் 242 அலகுகள் அனுமதிக்கப்பட்டன. இதில் 89 குறுகிய கால உறைவிடமான மாவட்ட மற்றும் வட்டார தலைமையிட மருத்துவமனைகளில் உள்நோயாளிகளின் உதவியாளர்கள் தங்கும் சிறப்பு உறைவிடமும் அடங்கும். இதுவரை 149 அலகுகள் பணிநிறைவு பெற்று எஞ்சியுள்ள 93 உறைவிடங்களின் பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளன.

### 2.13.3.2 நகர்ப்புற நடைபாதை வியாபாரிகளுக்கான நலத்திட்டம்

இத்திட்டத்தின் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 1,21,098 நடைபாதை வியாபாரிகள், கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டு 1,03,048 நடைபாதை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. சென்னை நீங்கலாக அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர விற்பனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் 528 பேரூராட்சிகளில் 347 பேரூராட்சிகளில் நகர விற்பனைக்குழு அமைக்கப்பட்டு எஞ்சியுள்ள பேரூராட்சிகளில்

வருங்காலத்தில் நகர விற்பனைக்குழு துரிதமாக அமைக்கப்படும்.

### 2.13.4 தூய்மை இந்தியா இயக்கம்

தூய்மை இந்தியா இயக்கம், இந்திய நகர்புற வளர்ச்சி அமைச்சகத்தினால் 02.10.2014 அன்று கீழ்க்கண்ட நோக்கங்களை செயல்படுத்தும் விதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இயக்கம் 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

(1) திறந்த வெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்,

(2) மனித கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழித்தல்,

(3) நவீன மற்றும் அறிவியல் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளுதல்,

(4) ஆரோக்கியமான சுகாதார பழக்கங்களை உருவாக்குதல்,

(5) சுகாதாரம், மனித ஆரோக்கியம் தொடர்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,

(6) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திறன் மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவில் தனியார் துறை பங்களிப்பு ஈர்த்திடும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல்.

இதன்பொருட்டு இத்திட்டத்தை தமிழ்நாட்டில் கீழ்கண்ட கூறுகளுடன் நடைமுறைப்படுத்த அரசு நிர்வாகம் அனுமதியளித்துள்ளது.

(1) தனிநபர் கழிப்பிடங்கள் அமைத்தல், (2) சமுதாய கழிப்பிடங்கள் அமைத்தல், (3) திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம், (4) விழிப்புணர்வு ஏற்படுத்துதல், (5) திறன் மேம்படுத்துதல்.

இத்திட்டத்தினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் பணிகளைக் கண்காணிக்கவும் மாநில அளவிலான உயர்மட்ட குழு ஒன்று நகராட்சி நிர்வாக முதன்மை செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

### 2.13.4.1 தனிநபர் கழிப்பறைகள்

| ஆண்டு | இலக்கு | முடிக்கப்பட்டவை | கட்டப்பட்டு வருபவை |
|---|---|---|---|
| 2015-16 | 98,048 | 98,048 | - |
| 2016-17 | 1,02,569 | 1,02,569 | - |
| 2018-19 | 87,049 | 47740 | 39309 |
| Total | 2,87,666 | 248357 | 39309 |

தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதற்கான மொத்த இலக்கு அக்டோபர் 2019-க்குள் முடிக்கப்படும்.

### 2.13.4.2 சமுதாயக் கழிப்பிடங்கள்

| ஆண்டு | கழிப்பறைகள் எண்ணிக்கை | இருக்கைகள் | முடிக்கப்பட்டவை | கட்டப்பட்டு வருபவை |
|---|---|---|---|---|
| 2014-15 | 293 | 2167 | 2167 | - |
| 2015-16 | 415 | 3961 | 3961 | - |
| 2016-17 | 136 | 1287 | 1193 | 94 |
| 2017-18 | 23 | 338 | 115 | 223 |
| Total | 867 | 7753 | 7436 | 317 |

### 2.13.4.3 திடக்கழிவு மேலாண்மை

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுவரை தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி ஆகியவற்றின் மூலம் ₹1204.03 கோடி மதிப்பீட்டில் 135 உள்ளாட்சிகளில் 1967 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 1085 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.13.4.4 சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

சுத்தம், சுகாதாரம், தூய்மை, திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழித்தல் மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட உயிரி கழிவு மற்றும் மறுசுழற்சிக்குட்படுத்தக் கூடிய கழிவுகளை திறமையாக கையாளுவது குறித்து பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த 1264 பரப்புரையாளர்கள், 215 மேற்பார்வையாளர்கள், 11 ஒருங்கிணைப்பாளர்கள் 121 நகராட்சிகள் மற்றும் 14 மாநகராட்சிகளில் ஈடுபடுத்த 2016-17 முதல் 2018-19 வரையிலான காலத்தில், ₹ 76.85 கோடிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரம், தூய்மை பணிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதத்தில் விழிப்புணர்வு செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

### 2.13.4.5 நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு

தமிழக அரசு 2030 ஆம் ஆண்டிற்குள் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை அடைய கீழ்க்கண்டவற்றுக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது.

1. அனைவருக்கும் சமச்சீரான குடிநீர் பாதுகாப்பான முறையில் வழங்குதல்.
2. போதுமான மற்றும் சமச்சீரான அளவில் அனைவருக்கும் சுகாதார வசதிகளை அளித்து, பொது இடங்களில் மலம் கழிக்கும் நிலையை அறவே ஒழித்தல்.

3. நீர் மாசுபடுதலை தவிர்த்து அதன் தரத்தினை மேம்படுத்துதல், அபாயகரமான கழிவுகள் மற்றும் இரசாயனங்கள் வெளியேறுவதை குறைத்தல் மற்றும் கழிவுகளை ஒரே இடத்தில் தேக்கி வைத்தலை ஒழித்தல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை பாதியாக குறைத்தல் மற்றும் அதன்மூலம் நீர் மறுசுழற்சி மற்றும் மறு உபயோகத்தினை மேம்படுத்துதல்.

4. ·குடிநீர் மற்றும் சுகாதாரம் குறித்த திறன்மேம்பாட்டு பயிற்சிகளை அளித்தல்.

5. ·கழிவுகளை குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறு உபயோகத்தின் மூலமாக பெருமளவில் கழிவு உற்பத்தியினை குறைத்தல்.

மேற்கண்ட அனைத்து இலக்குகளையும் அடைய பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. தூய/பாதுகாப்பான குடிநீர் அனைவருக்கும் கிடைக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. கழிவு நீரை சுத்திகரிப்பு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி, கழிவுநீர் மறு உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

3. பொது சுகாதாரத்தை பொறுத்தவரை, தனிநபர் கழிவறைகள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு சுகாதாரமற்ற கழிவறைகளை சுகாதாரமுள்ள கழிவறைகளாக மாற்றி

அனைவருக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் ஒழிக்கப்பட்டுள்ளது.

4. உருவாகும் கழிவின் உட்கூறுகளான ஈரக் கழிவுகள் மற்றும் உலர் கழிவுகளை செயலாக்கம் செய்யும் விதமாக செயலாக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கழிவுகள் குறைப்பு, மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் போன்றவற்றை அடைய தீவிரமான தகவல் தொடர்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.13.4.6 புராதன நகர மேம்பாடு மற்றும் புனரமைப்பு திட்டம் (Heritage City Development and Augumentation Yojana-HRIDAY)

மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் இந்தியாவில் உள்ள புராதன நகரங்களின் முழுமையான வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக, புராதன நகர மேம்பாடு மற்றும் புனரமைப்பு திட்டம் (Heritage City Development and Augumentation Yojana (HRIDAY) புராதன நகரங்களின் கலாச்சாரம், கலை நயம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றை பாதுகாப்பதுடன், அவற்றின் தனித்தன்மை மாறாமல் மேலும் அழகுப்படுத்துவது, பாதுகாப்பாக வாழ்வதற்கேற்ற நீடித்த நிலைத்தன்மையுடன் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேற்படி இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசு, தனியார்

நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் மத்திய அரசே வழங்கும். மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் காலம் நான்கு வருடங்கள் (ஜனவரி, 2015 முதல் நவம்பர், 2018 வரை) ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்றாகும். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களை தலைவராக கொண்ட 10 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனை மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் பணியின் நிலை பின்வருமாறு:

| வ. எண் | பணி விவரம் | வேலையின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ₹ (இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 6 | 989.72 | முடிவுற்றுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 6 | 763.86 | முடிவுற்றுள்ளன |
| 3 | அருள்மிகு காமாட்சி அம்மன் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 7 | 246.00 | 85 சதவீதப்பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | Total | 19 | 1999.58 | |

## 2.14 வெளிநாட்டு நிறுவன உதவித்திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

### 2.14.1 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம்

9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டு பணிகள் இத்திட்டத்தின் கீழ் ₹663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

### 2.14.2 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம்

26 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், பாதாளச் சாக்கடை திட்டம், நீர் நிலைகள் மேம்பாடு மற்றும் விளையாட்டு திடலுடன் பூங்காக்கள் மேம்பாடு போன்ற 35 பணிகள் ₹3047.20 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 12 பணிகள் முடிக்கப்பட்டும் மீதமுள்ள 23 பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

### 2.14.3 தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை ₹3831.00 கோடி செலவில் தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

இந்தத் திட்டம் நகர ஆளுமை கூறு, நகர்ப்பகுதிக்கான தொழில்நுட்ப உதவி கூறு மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு ஆகிய 3 கூறுகளைக் கொண்டதாகும்.

மேற்கூறிய 3 கூறுகளில் நகர ஆளுமை கூறு, நகர்பகுதிக்கான தொழில்நுட்ப உதவி கூறு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்படுகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு என்ற துணைத் திட்டம் தமிழ்நாடு

நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.14.3.1 நகர்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு**

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆகியவை நகர்ப்புற ஆளுமை (மாதிரி நகரம்) கூறு என்பதன் கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கட்டமைப்புத் திறன்

ii) வளர்ச்சித் திட்டங்கள்

iii) நீடித்த நிதி மற்றும்

iv) மின் ஆளுமை மற்றும் பொது தகவல் அமைப்பு

ஆகிய நான்கு இனங்களில் நகர் மேலாண்மையினை மேம்படுத்துவதற்கு நகர்ப்புற ஆளுமை கூறின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நகர் மேலாண்மை இனங்களில் மேற்கொள்ளப்படும் திருப்திகரமான செயல்பாடுகளின் அடிப்படையில் இந்நகரங்களுக்கு மானியம் வழங்கப்படும். 2016-17 முதல் 2021-22 வரையிலான ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எட்டப்படும் சாதனைகளின் அடிப்படையில் மானியம் வழங்குவதற்காக ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹153.24 கோடியும் ஓசூர் மாநகராட்சிக்கு ₹ 76.62 கோடியும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014-15 மற்றும் 2015-16ஆம் ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எட்டப்பட்ட சாதனைகளுக்காக

2016-17ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹51.08 கோடியும், ஓசூர் மாநகராட்சிக்கு ₹25.54 கோடியும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நகர் மேலாண்மையில் இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளின் அடிப்படையில் 2017-18 முதல் 2019-20 வரையிலான ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் இதே அளவிலான மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.14.3.2 நகர்பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக்கூறு

இக்கூறின் கீழ், கீழ்க்கண்ட நான்கு துணைக்கூறுகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| வ.எண் | துணைக்கூறு | மொத்த நிதி | உலகவங்கி நிதி |
|---|---|---|---|
| | | (மில்லியன் டாலரில்) | |
| 1 | நகராட்சி மின் ஆளுமை / பொது நிதி மேலாண்மை மற்றும் புவியியல் தகவல் அமைப்பு | 21.50 | 11.50 |
| 2 | திறன் மற்றும் நிறுவன மேம்பாடு | 7.00 | 6.00 |
| 3 | திட்ட தயாரிப்பு நிதி | 2.00 | 0 |
| 4 | திட்ட மேலாண்மை மற்றும் திட்ட செயல்பாட்டு செலவு | 3.5 | 3.5 |
| | மொத்தம் | 34.00 | 21.00 |

### 2.14.3.3 நகர்ப்புறங்களில் மின் ஆளுமை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளை மின் ஆளுமை மூலம் கையாளுவதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும் தரமாகவும் சேவைகளை செய்வதற்கு 29 எண்ணிக்கையிலான நகராட்சி மின் ஆளுமை சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட வளைதள மின் ஆளுமை பயன்பாடு என்ற சீரிய திட்டம் ₹18.31 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்து கொள்ளப்பட்டது. 2018-19 ஆம் ஆண்டில் 23 மின் ஆளுமை சேவைகள் 14 மாநகராட்சிகளிலும் 121 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த மின் ஆளுமை சேவைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் 14610 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயன்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 135 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மீதமுள்ள 6 மின் ஆளுமை சேவைகளையும் நடைமுறைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.14.3.4 திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு

திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு திட்டத்தின் கீழ் ₹ 6.59 கோடியில் பயிற்சி வழங்கப்பட்டது.

அதில் 26,092 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் திறன் மேம்பாடு பயிற்சியில் பயனடைந்தனர்.

2019-20ஆம் ஆண்டில் ₹ 13.42 கோடி மதிப்பீட்டுத் தொகையில் நான்கு பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டு, நகராட்சியில் பணிபுரியும் 41,119 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## 2.15 தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019

74வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் குறிப்பிட்டுள்ள பணிகளான நகரமைப்பை உள்ளடக்கிய நகராட்சிகளில் திட்டமிடல் மற்றும் கட்டடங்கள் கட்டுவது மற்றும் நிலப்பயன்பாட்டை ஒழுங்குப்படுத்துதல் ஆகிய பணிகள் உள்ளாட்சிகளில் முக்கிய பணியாக குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில், அனைத்து மாநகராட்சிகள்/நகராட்சிகள்/பேரூராட்சிகள் மற்றும் கிராமப்புறங்கள் உள்ளடக்கிய அனைத்து உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும் எளிமையான வகையிலான ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019 தயார் செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-1) துறை, நாள் 04.02.2019 வாயிலாக பிரசுரம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இனி வரும் காலங்களில் எந்த ஒரு இடத்திலிருந்தும் எந்த ஒரு உள்ளாட்சியிலும் சிரமமின்றி குறிப்பிட்ட காலத்திற்குள் இணையதளம் வாயிலாக அனுமதியினை பெற்றுக்கொள்ளும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த

அபிவிருத்தி மற்றம் கட்டட விதிகள் 2019 மூலம் தொடர்புடைய நபர்கள் பயனடைவர்.

## 2.16 அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப் பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல்

தமிழக அரசின் சிறப்புத் திட்டமான அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்த விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் 64,645 மனைகள் முறைப்படுத்தப்பட்டு, அதன் வாயிலாக ₹36,242 இலட்சம் அபிவிருத்தி கட்டணமாக வசூலிக்கப்பட்டது. இத்தொகை வாயிலாக சம்பந்தப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப்படும். மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் முறைப்படுத்தப்படும் மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளை உள்ளாட்சியே முறைப்படுத்தி அனுமதி வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.17 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் பின்வரும் நோக்கங்களுக்காக நிறுவப்பட்டது.

(1) நகராட்சி நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களை பயன்படுத்துவதன் அவசியத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(2) நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள்,

வெளியீடுகள் மூலமாக பெரும்பான்மையான மக்களுக்கு சென்றடைதல்.

(3) நகர்ப்புற மேம்பாடு, நகராட்சி நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த துறைகளில், ஆராய்ச்சி படிப்புகள் மற்றும் ஆலோசனை சேவைகள் மேற்கொள்ளுதல்.

(4) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை செய்தல்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இப்பயிற்சி நிறுவனத்தின் இயங்குவதற்கு முக்கியமான நிதியாதாரம் ஆகும்.

இந்நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பணியாளர்களுக்கு பயிற்சிகளை அளிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான புத்தறிவுப் பயிற்சிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விரிவாக்கப் பயிற்சிகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் இந்நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன.

இப்பயிற்சி நிறுவனத்தால் 2018-2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பயிற்சி திட்டங்களின் விவரங்கள் கீழ்க்காணுமாறு:

| வ. எண் | பயிற்சி | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சி மற்றும் நகராட்சி இளநிலை உதவியாளர்களுக்கான நான்கு வார விரிவாக்கப் பயிற்சி | 132 |
| 2 | தமிழ்நாடு நிலைத்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி | 246 |
| 3 | தமிழ்நாடு நிலைத்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகர் நல அலுவலர் / உதவி நகர் நல அலுவலர் / சுகாதார அலுவலர் / சுகாதார ஆய்வாளர் ஆகியோர்களுக்கான மூன்று நாள் பயிற்சி | 446 |
| 4 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஓய்வு கால திட்டமிடல் குறித்து மூன்று நாள் சிறப்புப் பயிற்சி | 182 |
| 5 | பேரூராட்சி சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்களுக்கான நோய்த் தடுப்பு தொடர்பான மூன்று நாள் உணர்திறன் பயிற்சி | 65 |
| 6 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதார பணியாளர்களுக்கான மூன்று நாள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி | 5185 |
| 7 | கட்டட விதிகள் மற்றும் அதன் அனுமதி நடைமுறைகள் குறித்த இளநிலை பொறியியல் பட்ட மாணவர்களுக்கான பயிற்சி | 120 |

| வ. எண் | பயிற்சி | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கான தேசிய அளவிலான களம்சார் பயிற்சிப் பட்டறை. | 223 |
| 9 | புதிதாக பணியமர்த்தப்பட்ட கர்நாடக மாநில நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் இளநிலை பொறியாளர்களுக்கான களப்பயிற்சி | 41 |
| 10 | புதிதாக பணியமர்த்தப்பட்ட கர்நாடக மாநில வருவாய் பிரிவு பணியாளர்களுக்கான களப்பயிற்சி | 21 |
| 11 | மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் அமைச்சக நிதி உதவியுடன் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்திய பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கான பாலின நிதித் திட்டம் குறித்த பயிற்சி | 60 |
| | மொத்தம் | 6721 |

AMRUT திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் என்ற முறையில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் வழங்கிய நிதி உதவியுடன் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் 5185 சுகாதார பணியாளர்களுக்கு உதகை, கோயம்புத்தூர், ஏற்காடு, மாமல்லபுரம் மற்றும் மதுரை ஆகிய மையங்களில் 193

குழுக்களாக பிரித்து மூன்று நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி 2018-2019-ல் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் பாரதியார் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். முனைவர் பட்ட (Ph.D) ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டிருக்கும் ஒருவர் கடந்த ஆண்டு நகராட்சிகளின் (தஞ்சாவூர் மண்டலம்) சொத்துவரி மேலாண்மை என்ற தலைப்பில் ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பித்து, தேர்வாகி, முனைவர் பட்டம் பிப்ரவரி 2019ல் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், மண்டல மையங்களை அரசு பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து துவங்குவதற்காகவும், அரசாணை (நிலை) எண் 84, நிதி (நிதி குழு - 4) துறை, நாள் 31-3-2017-ல் சிறப்பு மானியமாக ₹25.00 கோடி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, அரசு கடந்த மார்ச் மாதம் ₹10 கோடி இந்நிறுவனத்திற்கு விடுவித்துள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்களை கட்டுவதற்கு பொதுத்துறையைச் சார்ந்த ஒரு நிறுவனத்தை தேர்வு செய்யும் முனைப்பில் இந்நிறுவனம் உள்ளது. அதேபோல் உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டல பயிற்சி மையங்களை அமைக்கும் பொருட்டு அரசு பயிற்சி நிறுவனங்களை கண்டறிந்து வருகிறது.

## 2.18 நிதிக்குழு

### 2.18.1. 5 வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரை மற்றும் மானியம் ஒதுக்கீடு

73வது மற்றும் 74வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தின்படி மற்றும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 243 I மற்றும் 243 Y மற்றும் அதனைத்தொடர்ந்து வந்த மாநிலச் சட்டங்களின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு மாநிலமும் மாநில நிதி ஆணையத்தை அமைக்க வேண்டும். மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் நிதி ஆதாரங்களை உரியவாறு பங்கிட்டுக்கொள்வது குறித்து பரிந்துரைப்பதற்கென மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் 1.12.2014ல் தமிழ்நாடு அரசால் ஐந்தாவது மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்பட்டு, அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை 27.12.2016ல் மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சரிடமும் அளித்தது.

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகள் அரசாணை (நிலை) எண் 84, நிதித் (நிதி குழு - 4) துறை, நாள் 31-3-2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் ஐந்து ஆண்டுகள் (2017-18 முதல் 2021-22 வரை) ஆகும். அதாவது 2017 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 31.3.2022

வரை ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்மானங்கள் வழங்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசால் நிதி பகிர்ந்தளிக்கப்படும்.

கீழ்க்காணும் பரிந்துரைகளின் படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப்பகிர்மானங்கள் வழங்கப்படுகிறது.

மாநில அரசின் மொத்த நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி நிதிப் பகிர்மான விகிதமாக 10 விழுக்காடு அளவு அளிக்கப்படுகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான வரிகளை கிடை நிலையாக 56:44 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு செய்ய ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தில் பரிந்துரைசெய்யப்பட்டு இப்பரிந்துரை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடுக்குகளுக்கிடையே (Vertical) நிதி பகிர்மானத்திற்கும் ஒவ்வொரு அடுக்கின் உள்ளே நிதி பகிர்மானத்திற்கும் (Horizontal) கீழ்காணும் நிதி பகிர்மான கணக்கீட்டினை கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆணையத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காரணி | நிறை மதிப்பீடு |
|---|---|---|
| 1. | 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி மக்கள் தொகை | 65 விழுக்காடு |
| 2. | பரப்பளவு | 15 விழுக்காடு |
| 3. | தனிநபர் நுகர்வு செலவின இடைவெளி | 10 விழுக்காடு |
| 4. | குடிசை வாழ் மக்கள் தொகை / விகிதம் | 10 விழுக்காடு |
| | மொத்தம் | 100 விழுக்காடு |

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2017-2018ம் ஆண்டில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட மானியத் தொகை மற்றும் 2018-2019ஆம் ஆண்டிற்கான விடுவிக்கப்பட்ட மானியத்தொகை கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

(₹ *கோடியில்*)

| வருடம் | 12 மாநகராட்சிகள் | மூலதன மானியத் தொகை | இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத்தொகை | மொத்தம் | நகராட்சிகள் | மூலதன மானியத் தொகை | இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | மொத்தம் | பெரு மொத்தம் (5+9) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 2017-18 | 1215.82 | 224.96 | 75.99 | 1516.77 | 881.4 | 165.28 | 55.09 | 1101.84 | 2618.61 |
| 2018-19 | 1408.11 | 264.02 | 88.00 | 1760.13 | 1020.8 | 191.32 | 63.80 | 1276.00 | 3036.13 |

### 2.18.2. 14 வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் மானியம் ஒதுக்கீடு

14 வது நிதிக்குழு தனது அறிக்கையினை மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளது. 14வது நிதிக்குழுவின் பரிந்துரையினை மத்திய அரசு ஏற்று அதனை மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ளது. 14 வது நிதிக்குழுவின் கால அளவு 2015-16 முதல் 2019-2020 வரை ஆகும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் வழங்குவதற்கான 14வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் மானியம் ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

1) மாநிலங்களுக்கான மானியம் 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் 90% மற்றும் பரப்பளவின் அடிப்படையில் 10% பகிர்ந்தளிக்கப்படவேண்டும். மேலும் மேற்படி மானியம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் நகர மற்றும் ஊரக மக்கள் தொகையின் அடிப்படையில் கிராமங்களுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கு இரண்டாகப் பிரித்து அளிக்கப்படவேண்டும்.

2) அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு வகை மானியம் ஒப்பளிக்கப்பட்டு, கிராம பஞ்சாயத்துகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் வழங்கப்படவேண்டும். அவற்றில் கிராம பஞ்சாயத்துகளுக்கு 90% அடிப்படை மானியமாகவும், 10% செயல்திறன் மானியமாகவும் இருக்கவேண்டும். நகராட்சிகளை பொருத்தமட்டில் இவை 80:20 என்ற அடிப்படையில் இருக்கவேண்டும்.

3) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை மானியம் இரண்டாக பிரித்து ஒவ்வொரு அடுக்கிற்கும் அதாவது மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு மாநில அரசு மாநில நிதிக்குழு

ஆணையம் அளித்துள்ள விதிகள் அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

மேலும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஆண்டு வாரியாக பரிந்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் பின்வருமாறு: (2015-16 முதல் 2018-2019 வரை)

(₹ கோடியில்)

| ஆண்டு | அடிப்படை மானியம் முதல் தவணை | | மொத்தம் (1) | அடிப்படை மானியம் இரண்டாம் தவணை | | மொத்தம் (2) | மொத்தம் (1)+(2) |
|---|---|---|---|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | | |
| 2015-16 | 158.00 | 122.46 | 280.46 | 158.00 | 122.46 | 280.46 | 560.92 |
| 2016-17 | 218.79 | 169.56 | 388.35 | 218.79 | 169.56 | 388.35 | 776.70 |
| 2017-18 | 252.79 | 195.91 | 448.70 | 252.79 | 170.63 | 423.42 | 872.12 |
| 2018-19 | 292.44 | 212.02 | 504.46 | 0 | 0 | 0 | 504.46 |
| மொத்தம் | 922.02 | 699.95 | 1621.97 | 629.58 | 462.65 | 1092.23 | 2714.20 |

| ஆண்டு | செயல்திறன் மானியம் | | மொத்தம் |
|---|---|---|---|
| | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | |
| 2015-16 | ஒதுக்கீடு செய்யப்படவில்லை | | |
| 2016-17 | 129.15 | 100.09 | 229.24 |

**2.19 மாநகராட்சிகள்**

நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 14 மாநகராட்சிகள் உள்ளன.

**2.19.1 மதுரை மாநகராட்சி**

மதுரை மாநகராட்சியானது 01.05.1971 அன்று நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 15,61,129. 100 வார்டுகளை கொண்டுள்ள இம்மாநகராட்சியின் பரப்பளவு 147.99 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹438.28 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1. சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ₹1242.95 கோடியில் 14 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்திலுள்ளது

2. அட்டல் மிஷன் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றம் திட்டத்தின் (AMRUT), கீழ் முல்லை பெரியாறு ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு ₹1020 கோடி மதிப்பீட்டில் தனிக் குடிநீர் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

3. தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் ₹ 6.32 கோடி மதிப்பீட்டில் 6619 தனிநபர் குடியிருப்பு கழிப்பறைகள் (IHHL) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

4. தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் ₹ 3.48 **கோடி மதிப்பீட்டில்** 56 **சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன**.

5. மதுரை மாநகராட்சியில் வார்டு பகுதியளவில் பரவலாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மையை மேற்கொள்ளும் வகையில் 23 இடங்களில் ₹ 18.99 கோடி மதிப்பீட்டில் உரம் தயாரிக்கும் மையம் கட்டுவதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. 31.07.2019-க்குள் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

6. மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் கழிவுகள் சேகரிப்பினை எளிதாக்கும் வகையில் 250 எண்ணம் மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் ₹ 4.50 கோடி மதிப்பீட்டில் வாங்குவதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 31.07.2019க்குள் மேற்படி வாகனங்கள் முழுமையாக வாங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

7. நகரப் பகுதிகளில் ஐந்தாண்டுகளுக்கு மேலாக மறுசாலை அமைக்கப்படாத சாலைகள் தேர்வு செய்யப்பட்டு புதுப்பிக்கவும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018-19ன் கீழ் ₹ 25.56 கோடி மதிப்பீட்டில் 51.85 கி.மீ. நீளத்திற்கு தார் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கவும் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. 31.10.2019-க்குள் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
8. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் (IGFF)திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பயன்பாட்டிற்கென மண்டலம் 4, வார்டு எண். 94-ல் எம்.எம்.சி. காலனி பகுதியில் 54 குடியிருப்புகள் ₹5.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. 31.10.2019-க்குள் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 2.19.2 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 01.05.1981 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 16,01,438, 100 வார்டுகளை கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 265.36 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 681.44 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1. சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், ₹ 1178.20 கோடியில் 34 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்திலுள்ளன.

2. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டு பணி ₹ 395.41 கோடியில் அம்ருத் 2015-2016ன் கீழ் அனுமதிக்கப்பட்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 45% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

3. பழைய மாநகராட்சிப்பகுதியில் 24X7 குடிநீர் திட்டம் ₹ 506.04 கோடியில் செயல்படுத்த அம்ருத் 2016-17ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டு, குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

4. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் ₹ 442.00 கோடியில் அம்ருத் 2016-2017-ன் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் பணிகள் 2 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பாதாள சாக்கடை சேம்பர் கட்டும் பணிகளும் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பிற்கான குழாய் பதிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

5. அம்ரூத் 2015-2016, 2017-20-ன் கீழ் 21 பூங்காக்கள் மேம்படுத்தும் பணி ₹14.49 கோடி மதிப்பீட்டில் 3 கட்டமாக எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

6. ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் குடிநீர் அபிவிருத்தி திட்டமானது கோவை மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ள கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கு ₹ 108.16 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 85% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் ஆகஸ்டு 2019க்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

7. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹ 1.96 கோடி திட்ட மதிப்பீட்டில் 5 எண்ணிக்கையிலான உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

8. ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2018-19 ஆண்டில் 35.86 கி.மீ நீளத்திற்கு சாலைகள் சீரமைக்க ₹25.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.19.3 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 9,16,857. 65 வார்டுகள் கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 465.60 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன:—

1. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொருத்தப் பட்டுள்ள சோடியம் ஆவிவிளக்குகள், சி.எப்.எல், மெட்டல் உறலாய்டு விளக்குகளை புதிய எல்.இ.டி மின்விளக்குகளாக மாற்றியமைக்க தொகுப்பு I ₹ 8.70 கோடி மதிப்பீட்டிலும், தொகுப்பு II ₹14.70 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
2. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 2018-19ஆம் ஆண்டில் 3170 தனி நபர் வீட்டு கழிப்பிடங்களில் 1955 தனி நபர் வீட்டு கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கழிப்பிடங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
3. அம்ரூத் (2017-2020) திட்டத்தின் கீழ் ஸ்ரீரங்கம், அரியமங்கலம் மற்றும் பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட 7 பூங்காக்கள் மேம்படுத்தும் பணிக்கு 7 பணிகள் ₹385.575 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

4. குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளான வார்டு எண்.61 முதல் 65 வரை உள்ள பகுதிகளுக்கு ₹63.70 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று, இதன் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 LPCD குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

5. பாதாள சாக்கடைத் திட்டத்தில் (பகுதி 1) விடுபட்ட பகுதிகளுக்கு அம்ருத் திட்டத்தின் கீழ் ₹344 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் விடுபட்ட பகுதிகளுக்கு (பகுதி 2) ₹312.14 கோடி பணிகளுக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையிலுள்ளது.

### 2.19.4 சேலம் மாநகராட்சி

சேலம் மாநகராட்சி, 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. வார்டுகளின் எண்ணிக்கை 60 ஆகவும், 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,34,792 ஆகவும், பரப்பளவு 91.34 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 197.91 கோடியாகவும் உள்ளது.

2018-19 ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது:—

1. சீர்மிகு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தின் கீழ் 39 எண்ணிக்கையிலான பணிகள் ₹941.30 கோடி

மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளது.

2. 2018-19ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) 46.040 கீ.மீ. நீளத்திற்கு அரசு மானியத்துடன் ₹ 26.20 கோடி மதிப்பீட்டில் 110 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

3. மாநகராட்சியின் பொது நிதியின் கீழ் ₹ 40.00 கோடி மதிப்பீட்டில் 67.332 கீ.மீ. நீளத்திற்கு சாலைகளை சீரமைக்க 190 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

4. 2018-19 ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 29.389 கீ.மீ. நீளத்திற்கு அரசு மானியத்துடன் ₹21.10 கோடி மதிப்பீட்டில் 117 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

5. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 10 எண்ணிக்கையிலான புதிய வாகனங்கள் வாங்கும் பணிகள் ₹ 239.30 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

6. சட்ட பேரவை 110 விதியின் கீழ் அறிவிப்பை தொடர்ந்து புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ₹ 50.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா சுற்றுச்சூழல் அரங்கு (Amma Eco Pavilion) அமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டது.

### 2.19.5 திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,74,838 ஆகும். 55 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் பரப்பளவு 108.65 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 462.81 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் ₹ 1074.67 கோடி மதீப்பீட்டில் 31 திட்டப் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 9 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
2. திருநெல்வேலி மாநகராட்சிக்கு அரியநாயகிபுரம் அணைக்கட்டு நீர்த்தேக்கப் பகுதியில் இருந்து நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் திட்டப்பணி, அரசாணை (ப) எண்.09 நாள் 27.01.2014 ன்படி ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ₹230.00 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி திட்டப் பணிகள் யாவும் 30.09.2019க்குள் முடிவு பெறும்.

3. திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற அம்ருத் திட்டத்தின் (2016-17) கீழ், ₹289.01 கோடி மதிப்பீட்டிலும், மேலும் 2வது கட்டமாக ₹381.86 கோடி மதீப்பீட்டிலும் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி திட்டப்பணிகள் யாவும் 31.12.2021-க்குள் முடிவு பெறும்.

## 2.19.6 ஈரோடு மாநகராட்சி

ஈரோடு மாநகராட்சியில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,98,121 ஆகவும், பரப்பளவு 109.52 சதுர கிலோ மீட்டர் ஆகவும், 60 வார்டுகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மாநகராட்சியின் ஆண்டு சராசரி வருமானம் ₹486.15 கோடியாகவும் உள்ளது.

2018-19-ம் ஆண்டில் கீழ்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1. ஈரோடு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ₹ 986.78 கோடி மதிப்பிலான 16 பணிகளில், ₹651.65 கோடி மதிப்பில் 12 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 9 பணிகள் நடைபெற்று வருகின்றன. 3 பணிகள் துவக்கப்படவுள்ளது. எஞ்சியுள்ள பணிகள் மேற்கொள்ள பல்வேறு நிலையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. அம்ருத் திட்டத்தின் கீழ் ₹ 484.54 கோடி மதிப்பீட்டில் ஊராட்சிக் கோட்டையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் தனிக் குடிநீர் திட்டத்தில் எடுக்கப்பட்டு, பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு 71% பணிகள் முடிவுற்று எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. 14வது மத்திய மற்றும் 5வது மாநில நிதிக்குழு ஆணைய மானியத்தின் கீழ் ₹ 2.63 கோடி மதிப்பீட்டில் 3.11 கி.மீ நீளசாலைகள் சீரமைக்க 7 பணிகள் எடுக்கப்பட்டு 6 பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள பணி முன்னேற்ற நிலையில் உள்ளன.

4. இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் ₹ 1.90 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒரு பணி முடிக்கப்பட்டும் எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலையிலும் உள்ளன.

5. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ₹ 10.62 கோடி மதிப்பீட்டில் 7.02 கி.மீ நீள சாலைகள் சீரமைக்க 4 பணிகள் எடுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

6. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (Swachh Bharath Mission) 10462 தனிநபர் கழிப்பிடம் கட்டும் பணிகள் ₹ 12.55 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 3202 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

7. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (Swachh Bharath Mission) ₹65 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அடைப்புகளை நீக்கும் 2 வாகனங்கள் வாங்கப்படவுள்ளன.

8. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் ₹3.00 கோடி மதிப்பீட்டில் துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டுதல் மற்றும் ₹75 இலட்சம் மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

9. KfW நிதி ஆதாரத்தின் கீழ் ₹209.22 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியில் 93% முடிவுற்று எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

10. KfW நிதி ஆதாரத்தின் கீழ் கனிராவுத்தர் குளம் புனரமைப்பு செய்யும் பணி ₹5.95 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு விரைவில் பணி துவக்கப்படவுள்ளது.

11. மாநகராட்சி பொது நிதியின் கீழ் ₹40.00 கோடி மதிப்பீட்டில் 41.785 கி.மீ நீளசாலைகள் சீரமைக்க 9 பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### 2.19.7 திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சியின் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 ஆகவும், பரப்பளவு 159.35 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 206.28 கோடியாகவும் உள்ளது.

2018-19 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- திருப்பூர் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ₹ 1103.63 கோடி மதிப்பீட்டில் 26 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 18 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்ற பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

12. குடிநீர் மேம்பாட்டு பணிகள் அம்ரூத் 2015-16-ன் கீழ் ₹250 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அம்ருத் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் ₹992.94 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்படி திட்ட மதிப்பீடுகள் 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, அதில் 4 சிப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு சிப்பத்திற்கு விரைவில் பணி ஆணை வழங்கப்படும்.
- அம்ருத் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் ₹525.92 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளில்

பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்படி திட்ட மதிப்பீடுகள் 4 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.19.8 வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி தற்போது 60 வார்டுகளை உள்ளடக்கியதாகவும், 87.915 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும், 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 5,04,079 மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது. ஆண்டு சராசரி வருமானம் ₹ 99.73 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

1. சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ₹ 883.29 கோடி மதிப்பீட்டில் 34 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.
2. குடிநீர் மேம்பாட்டு பணிகள் அம்ருத் 2015-16ன் கீழ் ₹ 234.93 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.
3. வேலூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட மற்றும் பாதாள சாக்கடை விடுபட்ட பகுதிகளுக்கு அம்ருத் 2016-2017ன் கீழ் முதல் கட்டமாக ₹ 248.26 கோடி மதிப்பீட்டிலும், இரண்டாம் கட்டமாக ₹ 343.69 கோடி மதிப்பீட்டிலும் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடனும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த

எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

4. அம்ரூத் 2015-2016 முதல் 2017-2020 திட்டத்தின் கீழ் 12 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹6.90 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளன.

5. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின், வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹ 83 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 2 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் ஒரு கட்டிட பணி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது. 31.07.2019ல் முடிவடையும்.

6. உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் ₹ 2.50 கோடி மதிப்பீட்டில் சுகாதார பணியாளர்கள் குடியிருப்பு கட்டடம் கட்டுதல் நடைபெற்று வருகிறது.

### 2.19.9 தஞ்சாவூர் மாநகராட்சி

தஞ்சாவூர் மாநகராட்சி 19.02.2014 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,51,655 ஆகவும், பரப்பளவு 128.02 சதுர கிலோமீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 6016.99 இலட்சமாகவும் உள்ளது.

2018-19 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

1. சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ₹1001.29 கோடி மதிப்பீட்டில் 30 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் ஒரு பணி முடிக்கப்பட்டு, 19 பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.

2. அம்ரூத் 2015-16 குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளுக்கு ₹48.14 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளது.

3. அம்ரூத் 2017-20 பூங்கா மேம்பாட்டு பணிக்கு, 4 பணிகளுக்கு ₹3.09 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

4. தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டப்பணிகள் 2018-19-ல் 40 எண்ணிக்கையிலான தார் சாலைகள் அமைக்கும் பணிக்கு ₹ 15.25 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5. இடைவெளி நிரப்பும் திட்டப்பணி 2017-18-ன் கீழ் புதிய மாநகராட்சி அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு ₹6.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

6. இயக்குதல் மற்றும் பராமரித்தல் திட்ட நிதி 2017-18-ன் கீழ் மாரிக்குளம் இடுகாட்டில் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு ₹ 1.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**2.19.10 திண்டுக்கல் மாநகராட்சி**

திண்டுக்கல் மாநகராட்சி 19.2.2014 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 ஆகவும், பரப்பளவு 14.01 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 56.30 கோடியாகவும் உள்ளது.

2018-19ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன :-

1. அம்ரூத் திட்டம் 2017-2020 ன் கீழ் 7 பூங்காக்கள் அபிவிருத்தி செய்யும் பணிக்கு ₹2.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாகனங்கள் வாங்குதல், நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைக்கும் பணி மற்றும் உரக்கிடங்கு அபிவிருத்திப் பணிகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள ₹ 13.89 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதல்

கட்ட மற்றும் இரண்டாம் கட்ட திடக்கழிவுகள் சேகரிப்பிற்கான வாகனங்கள் வாங்கும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. ₹ 2.04 கோடி மதிப்பீட்டில் முருகபவனம் உரக்கிடங்கிற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. ₹ 8.35 கோடி மதிப்பீட்டில் 12 இடங்களில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3. தூய்மை இந்தியா திட்டம் 2017-18 ன் கீழ் ₹ 1.22 கோடி மதிப்பீட்டில் 12 இடங்களில் சமுதாயக் கழிவறைகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

4. தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் கீழ் மூன்று ஆரம்ப சுகாதார மையங்கள் கட்ட ₹ 1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு சுகாதார மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சவரியார் பாளையம் சுகாதார மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

5. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2018-19 ன் கீழ் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளால் சேதமடைந்த 25.165 கி.மீ நீளமுள்ள சாலைகளை சீரமைக்க ₹10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

6. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ₹45 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறி கழிவுகளிலிருந்து எரிவாயு தகன மேடை இயக்கத் தேவையான எரிபொருள் தயார் செய்யும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

7. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ₹25 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கழிவறையிலிருந்து எரிபொருள் தயார் செய்து சமுதாய சமையலறை கட்டும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

8. 14 வது நிதிக் குழு பரிந்துரையின் கீழ் 2017-18 ம் நிதியாண்டிற்கு ₹3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தலா ₹ 50.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 6 சாலைப் பணிகளில், 4 பணிகள் முடிவுற்றுள்ளன. மீதம் உள்ள 2 பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2016-17 ன் கீழ் காமராசர் பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகளுக்கென ₹5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியில் தரை தளத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கான

கான்கீரிட் தளம் அமைக்கப்பட்டுள்ளது. பிற பணிகள் நடைபெற்று வருகின்றன.

10. தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018-19ன் கீழ் உயிரி அகழ்வு முறையில் (Bio Mining) முருகபவனம் பழனி சாலை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை அகற்ற ₹13.16 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. மூலதன மான்ய நிதியின் கீழ் ₹11.15 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் காமராஜர் சாகர் அணையில் நீர் தேக்க கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நீர்த்தேக்கம் கட்டும் பணிக்கு 01.03.2019 ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

### 2.19.11 தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சியின் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,72,408 ஆகவும் மற்றும் அதன் பரப்பளவு 90.66 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹ 107.79 கோடியாகவும் உள்ளது.

2018-19-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. குடிநீர் அபிவிருத்தி திட்டம், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 20.44 கி.மீ. சாலைகளை சீரமைக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2018-19ன் கீழ் ₹12.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 29 சாலைப் பணிகள்

எடுத்துக்கொள்ளப்பட்டு, 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

2. குடிநீர் அபிவிருத்தி திட்டம், மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளில் சேதமடைந்த 17.82 கி.மீ. சாலைகளை சீரமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-19ன் கீழ் ₹10.55 கோடி மதிப்பீட்டில் 40 சாலைப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

3. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டமன்றப்பேரவை விதி 110இன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சிப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 6, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு (மாந.6) துறை, நாள் 23-01-2018ல் ₹96.12 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு உலகவங்கி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் 6 சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தம் கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

4. மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் தூய்மை இந்தியா திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை

திட்டம் 2017-18 ன் கீழ் ₹12.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் மாநகராட்சி பகுதிகளில் 16 இடங்களில் நுண் உர மையம் அமைப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் 14 நுண் உர மையம் கட்டுமான பணிகள் முடிவுற்றுள்ளன. 2 நுண் உர மையம் கட்டுமான பணி நடைபெற்று வருகின்றன. மேற்படி பணிகளுக்கு 74 புதிய இலகு ரக வானங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. ஒரு வடிகால் தூர்வாறும் இயந்திரம் வாங்கும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**2.19.12 ஓசூர் மாநகராட்சி**

ஓசூர் நகராட்சியானது 01.03.2019 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,45,354. 45 வார்டுகளை கொண்டுள்ள இம்மாநகராட்சியின் பரப்பளவு 72.41 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹ 100.95 கோடியாகவும் உள்ளது.

**2.19.13 நாகர்கோவில் மாநகராட்சி**

நாகர்கோவில் நகராட்சியானது 01.03.2019 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,60,315. 52 வார்டுகளை கொண்டுள்ள இம்மாநகராட்சியின் பரப்பளவு 49.10 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹ 80.25 கோடியாகவும் உள்ளது.

### 2.19.14 ஆவடி மாநகராட்சி

ஆவடி நகராட்சியானது 17.06.2019 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,44,721 ஆகும். 48 வார்டுகளை கொண்டுள்ள இம்மாநகராட்சியின் பரப்பளவு 65 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹66.78 கோடியாகவும் உள்ளது.

## 2.20 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி விருது

சிறப்பான முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு விருது வழங்க, 2012-13ஆம் ஆண்டில் "மாண்புமிகு முதலமைச்சர் விருது" உருவாக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு திருப்பூர் மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் (பரிசு தொகை ₹25 இலட்சம்) மற்றும் நகராட்சிகளில், கோவில்பட்டி, கம்பம் மற்றும் சீர்காழி நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் (பரிசு தொகை முறையே ₹ 15 இலட்சம், ₹ 10 இலட்சம் மற்றும் ₹ 5 இலட்சம்) தேர்வு செய்யப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2018ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசு தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கினார்கள்.

### 2.20.1 மத்திய அரசின் தூய்மை கணக்கெடுப்பு 2019 விருதுகள்

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வருடந்தோறும் தூய்மை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தூய்மையில் முன்னிலை பெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விருது வழங்கப்படுகிறது. இதன்படி, தூய்மை கணக்கெடுப்பு 2019ல், தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி, திருவேற்காடு மற்றும் பவானி நகராட்சிகள், கோட்டகுப்பம், குகலூர், திருப்போரூர், அகரம் மற்றும் மேலத் திருப்பன்துருத்தி ஆகிய பேரூராட்சிகள் தூய்மையான உள்ளாட்சி அமைப்புகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு புதுதில்லியில் 06.03.2019 அன்று நடந்த தேசிய அளவிலான விழாவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## 3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை நகரமானது தமிழ்நாட்டில் பெரிய மற்றும் முக்கிய மாநகரமாகும். இந்த நகரம் வரலாற்று மற்றும் நவீன சமகால இந்திய கலாச்சாரத்தை சித்தரிக்கிறது. சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் நாள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, நாட்டின் மிகப் பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது பழமையான உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது. 331 வருட வரலாறு கொண்ட சென்னை மாநகராட்சி, தொன்மை வாய்ந்த மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் மூலம் சென்னை மாநகராட்சி அதன் சட்டப்பூர்வமான அதிகாரங்களைப் பெறுகிறது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் 29.01.2016 அன்று முதல் சென்னை மாநகராட்சி "பெருநகர சென்னை மாநகராட்சி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகராட்சியுடன், 2011 ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதன் மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்து, நாட்டின் நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாகத் திகழ்கிறது. சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்னர்

இருந்த 155 வார்டுகள், 107 வார்டுகளாக மறுசீரமைக்கப்பட்டதுடன், புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப் பகுதிகள் 93 வார்டுகளாக வரையறுக்கப்பட்டு, தற்போது மொத்தம் 200 வார்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 3 வட்டாரங்களாக அதாவது, வடக்கு, மத்திய, தெற்கு வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டாரமும் 5 மண்டலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்டாரங்கள் துணை/இணை ஆணையர் நிலையில் உள்ள அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

தமிழக அரசு, மாநகராட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர் கூடுதல் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, மனிதவள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலாக 784 பணியிடங்களை உருவாக்கி அனுமதியளித்துள்ளது. இந்த நடவடிக்கை, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ளவும், பொதுமக்களின் குறைகளைக் களையவும் ஏதுவாக அமைந்துள்ளது.

### 3.1 அம்மா உணவகம்

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக்கூலிகள் மற்றும் ஆட்டோ ஓட்டுனர்கள் போன்றவர்கள் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் உணவு வழங்குவதற்காக அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 400 அம்மா

உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் 7 அம்மா உணவகங்களும் மொத்தம் 407 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. அம்மா உணவகங்களில் காலையில் இட்லி மற்றும் பொங்கல் மதியத்தில் சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம் மற்றும் தயிர் சாதம் ஆகியவையும், மாலையில் சப்பாத்தி பருப்பு கடைசலும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் (சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம்) ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில் இரண்டு சப்பாத்தி பருப்பு கடைசல் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை அம்மா உணவகங்களில் 61.72 கோடி இட்லிகளும், 20.93 கோடி பலவகை சாதங்களும், 28.46 கோடி சப்பாத்திகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் 3.5 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். "அம்மா உணவகத் திட்டம்" உலகின் மிகச்சிறந்த சமூக பாதுகாப்பு திட்டமாக கருதப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இது போன்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டடத் தொழிலாளர்களுக்கு மூன்று வேளை இலவச உணவு வழங்கும் திட்டம் கடந்த 04.03.2019முதல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 04.03.2019 முதல் 21.06.2019 வரை 25,484 கட்டுமான தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான செலவினங்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தால் வழங்கப்படுகிறது.

**3.2 அம்மா குடிநீர்**

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 13.02.2016 அன்று சென்னை பெருநகரில் எதிர்ச் சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்ற ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்கிணங்க விலையில்லா "அம்மா குடிநீர் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் 50 எதிர்ச் சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ₹5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு ஒரு நிலையத்தின் மூலம் 8,000 லிட்டர் வழங்கப்பட்டு 24.06.2019 வரை மொத்தம் 29.16 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### 3.3 தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம்

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுநாள் வரை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கு மட்டும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தற்போது மேற்கூறிய மருத்துவ சேவைகளுடன் கர்ப்பகால முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்புகள், குழந்தைகள் மருத்துவம் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு சோதனைகளும் ஒரே குடையின் கீழ் அளிக்கப் படுகின்றன. மேலும் 5 இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையம் என, (மண்டலத்திற்கு ஒன்று வீதம் படுக்கைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பகுப்பாய்வுக் கூட வசதியுடன்) தற்போது 15 நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது சென்னை நகர்ப்புற சுகாதார திட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்திலிருந்து 2018-19 வரை ₹ 278.54 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

34 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8 நகர சமுதாய நல மையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட முறையே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ₹75 இலட்சம் மற்றும் ஒரு சமுதாய நல மையத்திற்கு ₹9 கோடி வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 20 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 4 நகர சமுதாய நல மையங்களின் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டது. மீதமுள்ள 14 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 4 நகர சமுதாய நல மையங்களில் கட்டுமான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தாலும், அவை பழைய கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. கட்டடங்களை சீரமைக்கும் பணிக்காக ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ₹10 இலட்சம் வீதம், 100 நகர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 96 நிலையங்கள் சீரமைக்கப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 31 நீரிழிவு ரத்த சுத்திகரிப்பு அலகுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் 21 அலகுகள், தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின் கீழும், 10 அலகுகள் தொண்டு நிறுவனம் (ரோட்டரி இன்டர்நேஷனல்) மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

1,025 மகளிர் குழுக்கள் (மகிளா ஆரோக்கிய சமிதி), குடிசை வாழ் பகுதியில் வசிக்கும் பின்தங்கியுள்ள மக்களுக்குச் சுகாதாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்நோக்கு மருத்துவமனைகள் (Polyclinic), 36 சுகாதார மையங்களில் (நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற சமுதாய நல மையம், அவசரகால மகப்பேறு மருத்துவமனை மற்றும் மருத்துவ சேவை மையங்கள்) திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி முடிய செயல்படுகின்றன.

இங்கு கீழ்க்கண்ட சிறப்பு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

- பொது மருத்துவம்
- மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம்
- குழந்தை நலம்
- மனநல மருத்துவம்
- எலும்பு சார்ந்த நோய்
- பிசியோதெரபி
- பல் மருத்துவம்
- கண் மருத்துவம்
- தோல் மருத்துவம்
- காது/மூக்கு/தொண்டை மருத்துவம்

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் 5 மருத்துவ கூண்டு வண்டிகள் (Clinic in Caravan) அடித்தட்டு மற்றும் குடிசை வாழ் பகுதியில் வசிக்கும் பின் தங்கியுள்ள மக்களுக்கு அவர்கள் வாழ்விடத்திலேயே மருத்துவ சிகிச்சையினை அளித்திட ஒப்பளிக்கப்பட்டு ரூ.59.05 லட்சம் நிதி அளிக்கப்பட்டு, அதற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

### 3.4 ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா/ இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) மண்டலம் 4, 10 மற்றும் 13ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மாற்று மருத்துவ சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன. இதற்கென ஐந்து இந்திய மருத்துவர்களைக் கொண்டு ஐந்து வகையான இந்திய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் 2016 மார்ச் முதல் நாள் ஒன்றுக்கு சராசரியாக 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, இதுவரை 5,80,000 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

### 3.5 வீடற்றோருக்கான காப்பகங்கள்

சென்னை மாநகராட்சியில் தற்சமயம் 38 வீடற்றோருக்கான காப்பகங்களும் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்கான 13 சிறப்பு காப்பகங்களும் தன்னார்வத்

தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டு வருகின்றன.

### 3.5.1 சிறப்பு காப்பகங்கள் (மருத்துவமனை)

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 110 விதியின் கீழான அறிவிப்பின்படி பின்வரும் 7 அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்காக சிறப்பு காப்பகங்கள் கீழ்கண்டவாறு மாநகராட்சியால் துவக்கப்பட்டன.

| **அரசு மருத்துவமனையின் பெயர்** | **காப்பகங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| • ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை | 2 |
| • கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை | 2 |
| • அரசு தாய்சேய் நல மருத்துவமனை | 2 |
| • அரசு குழந்தைகள் நல மருத்துவமனை | 1 |
| • ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை | 2 |
| • ஸ்டான்லி அரசு மருத்துவமனை | 2 |
| • கஸ்தூரிபாய் காந்தி அரசு மருத்துவமனை | 2 |

### 3.5.2 இதர காப்பகங்களின் வகைகள்

மேற்குறிப்பிட்ட சிறப்பு காப்பங்கள் தவிர, சமுதாயத்தில் கீழ்த்தட்டில் உள்ள மக்களுக்கான காப்பகங்கள் கீழ்கண்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண். | காப்பகத்தின் வகை | மொத்தம் |
|---|---|---|
| 1 | சிறுமியர்கள் | 3 |
| 2 | சிறுவர்கள் | 5 |
| 3 | அறிவு திறன் குறைவுள்ள சிறுவர்கள் | 1 |
| 4 | பெண்கள் | 9 |
| 5 | ஆண்கள் | 12 |
| 6 | ஆண்கள் மற்றும் பெண்கள் | 1 |
| 7 | முதியோர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 2 |
| 8 | மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் | 1 |
| 9 | மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் | 2 |
| 10 | மாற்றுதிறனாளி பெண்கள் | 1 |
| 11 | திருநங்கைகள் | 1 |
| காப்பகங்களின் எண்ணிக்கை | | 38 |

இந்த காப்பகங்களின் மூலம் பயனடைந்த மொத்த வீடற்றோர்களின் எண்ணிக்கை 10,150 மற்றும் உள் நோயாளிகளுடன் வந்து பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 32,733 ஆகும். மேலும், தற்போது 1,879 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள்.

**பயனாளிகள் விவரம்**

| பயனாளிகள் வகைப்பாடு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| முதியோர் ஓய்வூதியம் பெற்ற பயனாளிகள் | 144 |
| வாக்காளர் அடையாள அட்டை பெற்ற பயனாளிகள் | 449 |
| ஆதார் அட்டை பெற்ற பயனாளிகள் | 328 |
| ஓட்டுநர் உரிமம் பெற்ற பயனாளிகள் | 16 |
| மாற்று திறனாளி ஓய்வூதியம் பெற்ற பயனாளிகள் | 34 |
| மாற்று திறனாளி அடையாள அட்டை பெற்ற பயனாளிகள் | 66 |
| பள்ளியில் சேர்ந்துள்ளவர்கள் | 435 |
| பிரிந்தவர்களை குடும்பத்தினருடன் சேர்த்து வைத்தல் | 3466 |
| மறுவாழ்வு செய்யப்பட்டவர்கள் | 1801 |

## 3.6. பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகள்

### 3.6.1 தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாட்டு மையங்களை நடத்தி வருகிறது.

சென்னை மாநகராட்சி கால்நடைப்பிரிவின் மூலம் பொதுமக்களின் புகார்களின் அடிப்படையிலும், சுயமாகவும் தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ள பகுதிகளில் உள்ள தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு, விலங்குகள் இன கட்டுப்பாட்டு விதிகளின்படி நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டு, அடையாளக் குறியிடப்பட்டு, அவைகள் பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் சிகிச்சைக்கு பிறகு விடப்படுகின்றன.

2018-19ம் நிதி ஆண்டில் 13,587 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தனியார் நாய் பிடிப்போர் தெரு நாய்களை பிடிப்பதற்கும், இனகட்டுபாட்டு அறுவை சிகிச்சைக்கு பிறகு திரும்ப கொண்டு போய் விடுவதற்குமான பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு முறை சிறப்பு திட்டமாக கணக்கெடுக்கப்பட்டுள்ள 57,336 தெரு நாய்களுக்கு ₹ 77.48 இலட்சம் செலவில் வெறி நோய் தடுப்பூசி போடும் பணி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

### 3.6.2 பூச்சி தடுப்பு நடவடிக்கைகள்

கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்கு முதிர்கொசு மற்றும் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளான கொசுப்புழுக் கொல்லி தெளித்தல் மற்றும் புகைபரப்புதல் போன்ற பணிகளை சென்னை மாநகராட்சி செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

வாகனத்தில் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் 39-ம், கையினால் எடுத்துச்செல்லும் புகைப்பரப்பும் இயந்திரங்கள் 246-ம், சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் 22-ம் புகைப்பரப்பும் பணியில் உபயோகப் படுத்தப்பட்டு முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 445 கைத்தெளிப்பான்கள் மற்றும் 15 அதிவேக திறன் கொண்ட கைத்தெளிப்பான்களை கொண்டு மழைநீர் வடிகால்வாய்களிலும் திறந்தவெளி கால்வாய்களிலும் கொசுப்புழு மருந்துகள் தெளிக்கப்பட்டு, கொசுபுழுக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதனுடன் கொசுப்புழுக்களை உண்ணும் கம்புஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், நீரிலும் நிலத்திலும் இயங்கும் உயர் தொழில்நுட்பம் கொண்ட வாகனம் (Amphibian vehicle) ஒன்று பின்லாந்து நாட்டிலிருந்து ₹ 4.44 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய் ஆகியவைகளில் தூர்வாரவும், ஆகாயத்தாமரை அகற்றும் பணி மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. இவ்விரண்டு கால்வாயிலிருந்து

ஆகாயத்தாமரைகளும் வண்டல் / உபரி மண் அகற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு, இந்த கால்வாய்களில் சீரான நீரோட்டம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்னை மாநகரில், குறிப்பாக ஆர்.கே. நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, வியாசர்பாடி, இராயபுரம், மைலாப்பூர் மற்றும் பிற பகுதிகளில் கொசுவின் தாக்கம் குறைந்துள்ளது. குறைந்த அகலம் கொண்ட சிறிய கால்வாய்களில் வண்டல்களை அகற்ற 3 எண்ணிக்கை ரோபோட்டிக் மண் தோண்டும் இயந்திரங்கள் (Robotic Excavator Machines) சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து ₹19.65 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து 30 சிறிய கால்வாய்களிலும் இந்த ரோபோட்டிக் மண்தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி முறையான கால இடைவெளியில் வண்டல்களையும் ஆகாயத்தாமரைகளையும் உபரி மண்ணையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2016-17ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரில் ஓடும் கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றவும் 11 ஃபைபர் படகுகள் ₹ 3.19 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டன. சென்னை மாநகரில் உள்ள கால்வாய்களில் உள்ள ஆகாயத்தாமரை செடிகள் மற்றும் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு நீரோட்டம் சீராக்கப்பட்டது.

### 3.7 பொதுசுகாதாரத் துறையின் இதர சேவைகள்

#### 3.7.1 இறைச்சிக்கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் 4 இறைச்சிக்கூடங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு ஆடுகள்/மாடுகள், கால்நடை உதவி மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனை செய்த பிறகு, வெட்டப்பட்டு இறைச்சி ஆய்வுசெய்யப்பட்டு, விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்த இறைச்சி கூடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

#### 3.7.2 பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் பிறப்பு இறப்பு பதிவாளர்களால் (சுகாதார ஆய்வாளர்கள்) அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பொதுமக்கள் முற்றிலும் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளும் வகையில் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு வருகிறது. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை இணைய தளம் மூலமாக வழங்கும் திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இந்நாள் வரை 1,99,53,409 பிறப்பு சான்றிதழ்களும் மற்றும் 48,41,541 இறப்பு

சான்றிதழ்களும் இணைய தளம் வழியாக பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 3.7.3 மயான பூமிகள்

பெருநகர சென்னை மநாகராட்சியில் மொத்தம் உள்ள 206 மயான பூமிகளில் 88 மயான பூமிகளை சென்னை மநாகராட்சி பராமரித்து வருகிறது. இவற்றில் நவீன முறையில் 32 எரிவாயு தகனமேடை மற்றும் 7 மின்சார தகனமேடை வசதிகள் பொது மக்களின் பயன்பாட்டுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### 3. 8 கல்வித்துறை

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித் துறையின் கீழ் 119 தொடக்கப்பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 281 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு அவற்றில் 12,705 குழந்தைகள் பயின்று வருகின்றனர். சென்னை பள்ளிகளில், 2018-2019 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 83,200 மாணவ மாணவியர் கல்வி பயின்றுள்ளனர்.

முழுமையான மற்றும் தரமான கல்வி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு குழந்தையையும் சென்று அடைய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு சென்னைப் பள்ளிகள்

செயல்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களில், பொறியியல் பட்டப்படிப்பில் 150 மாணவர்கள், கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பில் 150 மாணவர்கள், பட்டயப் படிப்பில் 50 மாணவர்கள், ஆசிரியப் படிப்பு மற்றும் செவிலியர் படிப்பில் 50 மாணவர்கள், சட்டப் படிப்பில் 15 மாணவர்கள் மற்றும் உயர்படிப்பு (Integrated Course) 10 மாணவர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்டு மேல்படிப்புகளைப் படிப்பதற்கு அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை ஊக்கத்தொகை பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருகின்றது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவச சீருடைகளும், சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ-மாணவியர்களுக்கும் இலவச சீருடை மற்றும் நோட்டுப்புத்தகங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ மாணவியருக்கு ஊட்டச்சத்தினை அதிகரிக்க தினமும் மாலை நேர சிறப்பு வகுப்பின்போது சுவையான 100 கிராம் "சுண்டல்" வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஓவியம், இசை மற்றும் நடனம் ஆகியவற்றிற்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்க கலை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் கற்றல் செயல்பாட்டில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபடுவதற்கு ஏதுவாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் 84 வள வகுப்பறைகள் (Smart Classes) நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தொடங்கப்பட்டு சிறந்த

முறையில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் மாணாக்கர்கள் தாங்களாகவே கணினியினை இயக்கி கடினமான பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. மேலும், 28 சென்னைப்பள்ளிகளில் 20 மேல்நிலைப்பள்ளிகள்
மற்றும் 8 நடுநிலைப்பள்ளிகள் மேம்படுத்தப்பட்ட வளவகுப்பறைகள் துவங்கப்பட்டுள்ளன. மேற்படி பள்ளிகளில் 40 கைக்கணினி (Tablets) வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவிகளின் பொது அறிவை வளர்க்கும் வகையில் அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள் வழங்கப்பட்டு செய்தித்தாள் படிக்கும் வழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.

70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கற்றல்-கற்பித்தல் தொய்வின்றி சிறந்து விளங்க மின்னாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆய்வகங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு கற்றல்-கற்பித்தல் சூழ்நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது.

Spark ஒருங்கிணைந்த திட்டம் (Spark Integrated Programme) என்ற மீத்திறன் வாய்ந்த மாணவர்களுக்கான சிறப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அம்மாணவர்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளில் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்புராயன் தெரு ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு அதிகபட்ச

மதிப்பெண்களுடன் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதற்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்று பல்வேறு தொழிற்பயிற்சி பிரிவுகளில் (Professional Courses) சேர்ந்து பயின்று வருகின்றனர். கடந்த கல்வியாண்டில் ஒரு மாணவர் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1177/1200 மதிப்பெண்கள் பெற்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகபட்ச மதிப்பெண்ணை பதிவு செய்து பெருமை சேர்த்தார். மேலும் 2017 – 2018 ஆம் ஆண்டில் 12-ம் வகுப்பு படித்த மாணவர்களில் 76 மாணவர்கள் பொறியியல், 141 மாணவர்கள் கலை மற்றும் அறிவியல், 19 மாணவர்கள் செவிலியர் பயிற்சி, 4 மாணவர்கள் சட்டப்படிப்பு மற்றும் 13 மாணவர்கள் தொழில் நுட்ப கல்லூரிகளில் சேர்ந்து மாநகராட்சியின் ஊக்கத் தொகை பெற்று பயின்று வருகின்றனர்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் மண்டலம்-9ல் தொழிற்பயிற்சி நிலையமானது இயங்கி வருகிறது. இதில் மத்திய அரசின் NCVT (National Council of Vocational Training) அனுமதியுடன் பல்வேறு பாடப்பிரிவுகளான கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர், குழாய் பொருத்துபவர், பிட்டர், கம்மியர் (மோட்டார் வாகனம்), மின் பணியாளர், கம்மியர் (மின்னணுவியல்) ஆகியவற்றில்

பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்து செல்லும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பல்வேறு தொழில் துறைகளில் வேலை வாய்ப்புகள் இத்தொழில் பயிற்சி நிலையம் மூலம் ஏற்படுத்தி தரப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து உணவு (SNF) @ School என்பது உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து உணவு ஊக்குவிப்பு திட்டம் ஆகும். இது FSSAI ஆல் மாநில உணவு பாதுகாப்பு துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 50 ஆசிரியர்கள் உடல் நலம் மற்றும் ஆரோக்கிய ஒருங்கிணைப்பாளராக பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வாயிலாக 281 சென்னைப் பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மற்றும் வேலூர் கிருத்துவ மருத்துவ கல்லூரி இணைந்து சென்னை பள்ளிகளில் மாணாக்கர்களின் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்ய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட 300 ஆசிரியர்கள் அப்பள்ளியின் “மாணவர் ஆலோசகர்கள்" (Students Counsellors) என்று அழைக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு கையேடு / வழிகாட்டி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு “+2விற்கு பிறகு ஓர் வழிகாட்டல்" என்ற நிகழ்ச்சி 18 பிப்ரவரி 2019, அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்மா அரங்கத்தில் நடத்தப்பட்டது. இதில் ஆயிரம் மாணவ மாணவியர்கள்

கலந்து கொண்டனர். அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் உயர்கல்விக்கான வழிகாட்டிப் புத்தகம் வழங்கப்பட்டது.

அக்ஷய பாத்திரா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் திருவான்மியூர், வேளச்சேரி மற்றும் அடையாறு பகுதியிலுள்ள சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களால் சென்னை மேல்நிலைப்பள்ளியில், (திருவான்மியூர்) 25.02.2019 அன்று சிறப்பாக துவக்கி வைக்கப் பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,000 குழந்தைகள் பயனுற்றனர். இத்திட்டமானது இக்கல்வியாண்டில் (2019-20) 5000 குழந்தைகளுக்கும், படிப்படியாக அனைத்து சென்னைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

"Wings to Fly" என்ற திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட அறிவியல் போட்டியில் சென்னைப் பள்ளி மாணவ-மாணவியர் கலந்து கொண்டு இறுதி சுற்றில் 32 மாணவ மாணவியர்கள் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவிற்காக சிங்கப்பூர் சென்று வந்தனர்.

இந்த ஆண்டு 2018-19 நடைபெற்ற அரசு 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 4,837 மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். இதில் மாணவர்கள் 1,797, மாணவியர்கள் 3,040 ஆவர். தேர்வு எழுதியோரில் 4,377 மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவர்கள் 1,534 மாணவியர்கள் 2,843 ஆவர். தேர்ச்சி சதவீதம் 90.49 ஆகும்.

இது கடந்த ஆண்டை விட 1.7 சதவீதம் அதிகமாகும். மேலும் 100 / 100 மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்கள் 4 நபர்கள், மொத்த மதிப்பெண்ணான 600க்கு 550க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 7 நபர்கள், 500க்கும் அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் 58 நபர்கள் ஆவர். சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 4 பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சி விழுக்காடு பெற்றுள்ளது.

சென்ற ஆண்டு 2018–19 நடைபெற்ற அரசு 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 5,730 மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். இதில் மாணவர்கள் 2,734 மாணவியர்கள் 2,996 ஆவர். தேர்வு எழுதியோரில் 5,297 மாணவ மாணவியர் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவர்கள் 2,431, மாணவியர்கள் 2,866 ஆவர். தேர்ச்சி சதவீதம் 92.44 ஆகும். அதில், ஒரு மாணவர் 100/100 மதிப்பெண் பெற்றுள்ளார். மொத்த மதிப்பெண்ணான 500க்கு 450க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 20 பேர், 400க்கு அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் 213 நபர்கள், சென்னை மேல்நிலை / உயர்நிலை பள்ளிகளில் 21 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்றுள்ளது.

### 3.9 பூங்கா மற்றும் விளையாட்டு திடல்கள்

#### 3.9.1 பூங்கா

பெருநகர சென்னை மாநகராட்சியில் 632 பூங்காக்கள், 99 சாலை மையத்தடுப்புக்கள், 99 போக்குவரத்து தீவுத்திட்டு பூங்காக்கள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

இப்பூங்காக்களின் மொத்தப் பரப்பில் 70% பசுமைக்கும், மீதமுள்ள 30% பூங்கா தொடர்பான பிறபணிகளுக்கும் பயன்படுத்தலாமென முக்கிய கொள்கை முடிவெடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் பசுமையை நல்ல முறையில் தொடர்ந்து பராமரிக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நீர் தெளிப்பு பாசன சாதனங்கள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ₹36.99 கோடி மதிப்பீட்டில் 30 புதிய பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அனைத்து பூங்கா பணிகளும் முடிவடைந்துள்ளது.

மேலும், சென்னை நகரில் உள்ள 4 பூங்காக்களில் சோதனை முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமானது, பூங்காவின் அருகில் இருக்கும் கழிவுநீர் குழாய்களில் உள்ள கழிவுநீரை சுத்திகரித்து பூங்காவில் இருக்கும் செடிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் கோடை காலத்தில் நிலத்தடி நீர் வீணாகாமலும், லாரிகளில் நீர் கொண்டு வந்து ஊற்றுவதை தவிர்க்கவும் உதவுகிறது.

இதன் தொடர்ச்சியாக, சீர்மிகு நகர திட்டத்தின் (Smart City Scheme) கீழ் தியாகராயநகர் பகுதியில் உள்ள 4 பூங்காக்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் 4 பூங்காக்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

(STP) அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

### 3.9.2 பசுமை போர்வையை உயர்த்துவதற்கு மரக்கன்றுகள் நடும் பணிகள்:

பெருநகர சென்னை மாநகராட்சியில் சென்னை மாநகரின் பசுமை போர்வையை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் திருவாளர்கள். கேர் எர்த் டிரஸ்ட் பிரைவேட் லிட்., அமைப்பை தொழில்நுட்ப ஆலோசகராக நியமிக்கப்பட்டு, பசுமை போர்வையை உயர்த்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், சென்னை மாநகரின் பசுமை போர்வையை உயர்த்துவதற்கான முறைகள் மற்றும் வழிமுறைகளுடன், மண்ணின் தன்மைக்கேற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கேற்ற வகையிலான பாரம்பரிய மர வகைகளை நடுவதற்கு தேர்வு செய்யப்பட்டது. இதன்படி 2018-19 ஆம் நிதியாண்டில் சென்னை முழுதும் ₹5.29 கோடி மதிப்பீட்டில் 23,000 மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டு, இதுநாள் வரை 20,800 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள மரக்கன்றுகள் விரைவில் நடவு செய்து முடிக்கப்படும்.

### 3.9.3 விளையாட்டு திடல்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத் துறையின் கீழ் 262 விளையாட்டுத் திடல்கள், 82 நவீன உடற்பயிற்சி கூடங்கள் (2 பெண்களுக்கான உடற்பயிற்சி கூடங்கள் உட்பட), 2 உள் விளையாட்டரங்கங்கள், 3 நீச்சல் குளங்கள், 37 டென்னிஸ் ஆடுகளங்கள், 16 ஸ்கேட்டிங் தளங்கள், 13 இறகுப்பந்து உள் அரங்கங்கள், 79 இறகுப்பந்து வெளி விளையாட்டு அரங்கங்கள், 53 கைப்பந்து திடல்கள், 34 கால்பந்து திடல்கள், 23 கூடைப்பந்து திடல்கள், 2 ஹாக்கி திடல்கள், 5 கபடி திடல்கள், 4 கிரிக்கெட் திடல்கள் மற்றும் 1 த்ரோ பால் திடல் போன்றவை செயல்பட்டு வருகின்றன. இவற்றினை நாளொன்றுக்கு சுமார் 10,000க்கு மேற்பட்ட பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக உள்ளூர் விளையாட்டு வீரர்கள் குறிப்பாக கால்பந்து, பளுதூக்குதல், உடற்கட்டமைப்பு, கைப்பந்து மற்றும் கூடைபந்து ஆகியவற்றில் சிறந்த பயிற்சி பெற்று தேசிய மற்றும் உலகளவில் சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாகி வருகிறார்கள். குறிப்பாக, மண்டலம்-10, கோட்டம்-136, தி.நகர், வெங்கட் நாராயணா சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கூடைப்பந்து மைதானத்தில் பயிற்சி பெற்ற உள்ளூர் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு சார்பாக தேசிய அளவிலும், இந்தியா சார்பில் தென்கிழக்கு ஆசிய விளையாட்டு போட்டி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். மேலும், பெருநகர

சென்னை மாநகராட்சி உடற்பயிற்சி கூடங்களில் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் பளுதூக்குதல், உடற்கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் உலகளவில் இந்தியா சார்பில் கலந்து கொண்டு பல பதக்கங்களைக் குவித்துள்ளனர்.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளான 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ன் மூலதன நிதியின் கீழ் ₹ 4.54 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 விளையாட்டு திடல்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.10 சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM)

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்த மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டமாகும். இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் (2011-16) தமிழக அரசினால் ₹ 1488 கோடி நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் 1,146.67 கி.மீ. நீளமுடைய சாலைகளும், 170.69 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால்களும், 238.83 கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், 12,952 எண்ணிக்கையிலான தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும் ₹ 1451.74 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் விரிவாக்கப்பட்ட சென்னை பகுதி மக்களின் நீண்ட

நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டது. சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணிகள் பின்வருமாறு :-

<u>சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம்</u>

| ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவீனத் தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 2011-12 | 1,367 | 344.53 | 331.06 |
| 2012-13 | 1,932 | 353.67 | 404.74 |
| 2013-14 | 1,215 | 254.80 | 388.05 |
| 2015-16 | 446 | 193.67 | 327.89 |
| | 4,960 | 1,146.67 | 1,451.74 |

### 3.11 சாலை பராமரிப்பு திட்டங்கள்

#### 3.11.1 பேருந்து தட சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தடசாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து சாலை பணிகள் யாவும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி (CMCDM) ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகிறது.

சாலைப் பணியினை ஆரம்பம் முதல் முடியும் வரை கண்காணிக்கவும், தரத்தினை உறுதி செய்யவும் புகழ் பெற்ற திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் (Project Management Consultant) நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்க அனைத்து பேருந்து சாலைகளின் மேற்பரப்பு அகழ்ந்தெடுத்து அமைக்கப்படுகிறது. அதிநவீன இயந்திரங்கள் கொண்டு சாலையின் மேற்பரப்பில் வாகனங்கள் இலகுவாக செல்ல சாலைகள் தளம் சரி செய்தல் (CAMBER), டி.பி.எம். (Dense Bituminous Macadam) மற்றும் பி.சி. (Bituminous Concrete) ஆகிய மூன்று அடுக்குகளாக அமைக்கப்படுகின்றன.

அனைத்து பேருந்து தட சாலைகளும் 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட மின்னனு உணரி பேவர் இயந்திரம் மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்து சாலைகளும் 5 அடுக்கு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

அனைத்து பேருந்து தட சாலைகளும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக்கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (Studs) அமைக்கப்படுகின்றன. மேலும், மரங்களை சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில் கான்கிரீட் ஜாலிகள், மழைநீர் செல்லும் வகையில் சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (Water table) அமைத்தல், வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டு பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான, சிறந்த தொழில் நுட்பத்தில் அனைத்து பேருந்து தட சாலைகளும் மற்றும் 18 எண்ணிக்கையிலான சிறிய பேருந்துகள் செல்லும் சாலைகளும் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது.

| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவினத் தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|---|
| TURIP | 2014-15 | 54 | 46.56 | 88.07 |
| CMCDM | 2015-16 | 198 | 152.56 | 285.19 |
| TURIP | 2015-16 | 92 | 76.61 | 117.36 |
| TURIP | 2013-14 Savings | 42 | 29.35 | 43.78 |
| SDRF | 2015-16 | 103 | 40.83 | 55.7 |
| TURIP | 2016-17 | 40 | 24.17 | 18.3 |
| TURIP | 2016-17 Savings | 8 | 4.43 | 4.31 |
| TURIP | 2017-18 | 7 | 5.68 | 9.70 |
| Total | | 544 | 380.19 | 622.41 |

நடை பெற்று வரும் திட்டங்கள் பின்வருமாறு:

| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| TURIP | 2018-19 | 18 | 9.54 | 13.73 | 15 சாலைகள் முடிக்கப்பட்டன. 2 சாலைகள் நடைபெற்று வருகின்றன. 1 பணி துவங்கப்படவேண்டும் |
| CMCDM | 2018-19 | 12 | 8.20 | 11.86 | 7 சாலைகள் முடிக்கப்பட்டன. 2 சாலைகள் நடைபெற்று வருகின்றன. 3 பணிகள் துவங்கப்படவேண்டும் |
| Total | | 30 | 17.74 | 25.59 | |

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள், 2015ஆம் ஆண்டு சென்னை மாநகர் கடந்த 100 ஆண்டுகளில் எப்போதும் கண்டிராத மழை மற்றும் வெள்ளத்திலும் சேதமடையவில்லை. மேலும், 2016 மற்றும் 2017 ஆம்

ஆண்டுகளில் பருவமழையின் போதும் எவ்வித சேதமும் அடையாமல் உள்ளன. சிறந்த முறையில் சாலைப்பணிகள் செய்ததற்கு இதுவே சான்றாகும்.

### 3.11.2 உட்புறச் சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 33,374 உட்புறசாலைகள் 5,525 கி.மீ நீளத்திற்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. உட்புறச்சாலை பணிகள் யாவும் மூலதன நிதி மற்றும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதி (TURIP), தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி (CMCDM) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறு திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உட்புறச் சாலைகள் மேம்படுத்துதல் பணிகள் தொடர்பான அட்டவணை:-

| உட்புறச்சாலைகள் பராமரித்தல் | | | | |
|---|---|---|---|---|
| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவினத் தொகை (₹ கோடியில்) |
| CMCDM | 2011-12 | 1,367 | 344.53 | 331.06 |
| | 2012-13 | 1,932 | 353.67 | 404.74 |
| | 2013-14 | 1,215 | 254.80 | 388.05 |
| | 2015-16 | 248 | 41.00 | 42.70 |

| உட்புறச்சாலைகள் பராமரித்தல் | | | | |
|---|---|---|---|---|
| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவினத் தொகை (₹ கோடியில்) |
| MIDF Phase I | 2015-16 | 3,807 | 624.98 | 373.53 |
| MIDF Phase II | 2015-16 | 1,615 | 257.44 | 168.68 |
| TURIP | 2016-17 | 1,643 | 294.94 | 157.21 |
| | 2017-18 | 2902 | 222 | 202.47 |
| Total | | 14,729 | 2,393.36 | 2,068.44 |
| GCC Capital Fund | 2011-12 | 896 | 176.23 | 39.40 |
| | 2012-13 | 1,174 | 240.40 | 81.37 |
| | 2013-14 | 2,224 | 295.09 | 166.34 |
| | 2014-15 | 7,510 | 1,180.41 | 923.94 |
| | 2015-16 | 1,010 | 267.87 | 228.94 |
| மொத்தம் | | 12,814 | 2,160.00 | 1,439.99 |
| ஆக மொத்தம் | | 27,543 | 4,553.36 | 3,508.43 |

நடை பெற்று வரும் திட்டங்கள் பின்வருமாறு:

| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (` கோடியில்) |
|---|---|---|---|---|
| CMCDM | 2018-19 | 1,835 | 314.72 | 177.71 |
| TURIP | 2018-19 | 1,947 | 277.18 | 143.14 |
| மொத்தம் | | 3,782 | 591.90 | 320.85 |

## 3.12 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டம் மற்றும் சாலை பாதுகாப்பு பணிகள்

### 3.12.1 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதல் முறையாக இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non – Motorised Transport) ஏற்று செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில் கொண்டு இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தினை (Non – Motorised Transport) ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை உலகத்தரத்திற்கு இணையாக 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படுகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, குறிப்பாக சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர் மற்றும் மாற்றுதிறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக

56 பேருந்து தட சாலைகளில் நடைபாதை மேம்பாட்டு பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டம் 2012-13 நிதியின் கீழ் ₹ 49.30 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2013-14ன் சேமிப்பு நிதியின் கீழ் 16.22 கி.மீ. நீளமுடைய 23 நடைபாதைகள் ₹22.01 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டு 19 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1 பணி நடைபெற்று வருகிறது. 3 பணிகள் கைவிடப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி 2018-19 ன் கீழ் 74.51 கி.மீ. நீளமுடைய 31 நடைபாதைகள் ₹46.86 கோடி மதிப்பீட்டில் பணிகள் பணி ஆணை வழங்கப்பட்டு 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 29 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 26.79 கி.மீ. நீளமுடைய 85 நடைபாதைகள் சீரமைப்பதற்கு ₹ 7.56 கோடி மதிப்பீட்டில் பணிகள் பணி ஆணை வழங்கப்பட்டு 68 நடைபாதை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, 10 நடைபாதை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகள் துவங்கப்படவுள்ளன.

முதன்முறையாக, 77 நடைபாதைகள் பாதசாரிகளும், மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் சக்கர நாற்காலிகளும் செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டது. சாலைகளின் சந்திப்புக்களில் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகிறது. அனைத்து கட்டடங்களின் முகப்பிலும்

வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகின்றன.

நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின் மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும் பொருட்டு கிரானைட் தடுப்பான்கள் நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள் பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாக செல்லும் வகையில் உள்ளதால் இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும் இவ்வகையான நடைபாதை பணிகளை மாற்று திறனாளிகளின் அமைப்பும் வரவேற்றுள்ளது.

மேலும், இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 5 தேசிய அளவிலான விருதுகள் மற்றும் ஒரு சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.

போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் பல்வேறு சாலைகளின் தன்மையை கருத்தில் கொண்டு வடிவமைப்புகளைத் தொகுத்துள்ளனர். சாலைகளில் வாகனம் செல்வதற்கான ஒவ்வொரு வழியின் (Lane) அகலம் 3.75மீ என நிர்ணயம் செய்தும் வாகனங்கள் நேராக செல்வதற்காக வழிவகை செய்தும் மற்றும் பாதசாரிகள் செல்வதற்கு நடைபாதையினை

அகலப்படுத்தியும், சாலைகளின் அகலம் அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு வழிவகை செய்தும் வடிவமைத்துள்ளார்கள். இந்த சாலை வடிவமைப்பு பேருந்து சாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

### 3.12.2 சாலை பாதுகாப்பு பணிகள் (Road Safety Works)

மாநகர சாலையில் பெருகிவரும் சாலை விபத்துகளை குறைக்க பெருநகர சென்னை மாநகராட்சி, சாலை பாதுகாப்பு கொள்கை மற்றும் செயல்முறைகளை உருவாக்கவும் அவைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்தவும், தனியாக சாலை பாதுகாப்பு குழுமம் (Road Safety Cell) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து 2017 - 2018 ஆம் ஆண்டு ₹3.49 கோடியும், 2018-19 ஆம் ஆண்டு ₹2.49 கோடியும் பல்வேறு சாலை பாதுகாப்பு பணிகளான பேருந்து தட சாலைகளில் வேகத்தடை அமைத்தல், வேகத் தடைகளுக்கு வர்ணம் பூசுதல், மையத்தடுப்பான்கள் கட்டுதல் பாதசாரிகள் சாலையை கடக்க வழிகள் அமைத்தல், தற்போது இருக்கின்ற பாதசாரிகள் சாலையை கடக்கும் பகுதிகளுக்கு வர்ணம் பூசுதல் சாலையை பயன்படுத்துபவர்களுக்காக சாலைகளை குறியிடுதல் மற்றும் போக்குவரத்து தீவுகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு வழங்கியுள்ளது.

### 3.13 மெரினா கடற்கரையைச் சீரமைக்கும் திட்டம்

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக, காமராஜர் சாலை மேற்கு பகுதியில் உள்ள

வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள் மற்றும் நடைபாதையை ஒரே மாதிரியாக சீரமைக்க திட்டமிடப்பட்டது. இதில் புதைந்த நிலையில் மற்றும் சேதமடைந்த கல்தூண்களை மாற்றி, புதிய கல்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கல்தூண்களுக்கிடையே கலைநயம் மிக்க துருபிடிக்காத, வார்த்தெடுக்கப்பட்ட இரும்பாலான கிரில்கள் அமைக்கப்பட்டன. இதற்காக மொத்தம் ₹ 33.10 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

### 3.14 சிறப்பு திட்டங்கள்

#### 3.14.1 சீர்மிகு நகரம் (Smart City)

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் (MoHUA), சீர்மிகு நகரமாக (Smart City) முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நகரங்களில் ஒன்றாக, சென்னை மாநகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சீர்மிகு நகரதிட்டத்தை செயல்படுத்த "சென்னை ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்" என்ற சிறப்பு நிறுவனம் (Special Purpose Vehicle) தமிழக அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து ₹ 1,000 கோடி நிதியில் சீர்மிகு நகர திட்டம் (Smart City Project) 5 ஆண்டு காலங்களில் (2015 - 20) முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சீர்மிகு நகர திட்டத்தின் கீழ், சென்னை மாநகராட்சியில் 40 திட்டப் பணிகள் ₹ 947.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரையில் ₹ 28.73 கோடி மதிப்பீட்டில், 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, இதில் முக்கியமாக சென்னை

மாநகர மக்கள், புகார்கள் தெரிவிப்பதை எளிதாக்கும் வகையில் "நம்ம சென்னை" என்ற கைபேசி செயலி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 28 பள்ளிகளில் மின்னணு வகுப்பறை, 8 பூங்காக்களை மறு வடிவமைக்கும் பணி, மாற்று திறனாளிகளுக்கான உணர்வு பூங்கா அமைக்கும் பணி, போக்குவரத்து குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்கும் பூங்கா அமைக்கும் பணி, கோபதி நாராயணா சாலையில் உள்ள மேம்பாலத் தூண்களை சுற்றி தோட்டம் ( vertical grating) அமைத்தல் போன்ற திட்டங்கள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

22 திட்டங்கள், ₹491.86 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. இதில் முக்கியமாக ஆளில்லா வானூர்தி மூலம் அனைத்து கட்டடங்கள், சாலைகளில் மேற்பரப்பில் அமைந்துள்ள அனைத்து துறைகளின் சேவை பயன்பாட்டுப் பொருட்களை புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன் வரைபடமாக தயாரிக்கும் பணி, தியாகராயா சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, 54 நீர் நிலைகள் மற்றும் 15 கோவில் குளங்களை மேம்படுத்தும் பணி, வில்லிவாக்கம் ஏரியை புனரமைக்கும் பணி, தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடங்களின் மேற்கூரைப் பரப்பில் சூரிய மின் உற்பத்தி அமைப்பு நிறுவும் பணி, வாகன நிறுத்த மேலாண்மை பணி, சாலைகளில் மிதி வண்டி பகிர்மானப்பணி ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 4 திட்டங்கள் ₹191.90 கோடி மதிப்பீட்டில் முக்கியமாக மாம்பலம் இரயில் நிலையம் முதல் தியாகராயநகர் பேருந்து நிலையம் வரை ஆகாய நடைபாதை அமைக்கும் பணி மற்றும் தியாகராயநகரில் மின்சார ஸ்மார்ட் மீட்டர் நிறுவும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

4 திட்டத்திற்கு ₹225.86 கோடி மதிப்பீட்டில் முக்கியமாக தியாகராயநகரில் தெற்கு உஸ்மான் சாலை வடக்கு உஸ்மான் சாலை மற்றும் தியாகராயா சாலை நடைபாதை வளாகத்திற்கான 14 அணுகு சாலைகளை மறு வடிவமைக்கும் பணி மற்றும் 10 நீர் நிலைகளை மேம்படுத்தும் பணிக்கு ஒப்பம் கோரப்பட உள்ளது. மேலும் ஒரு திட்டத்திற்கு ₹ 9 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 3.14.2 சென்னையில் விரிவான ஒருங்கிணைந்த வாகன நிறுத்துமிடம் மேலாண்மை திட்டம்

சென்னையில் விரிவான ஒருங்கிணைந்த வாகன நிறுத்துமிடம் மேலாண்மை திட்டம் மூலம் நிலத்தடியில் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் பல அடக்கு வாகனம் நிறுத்தம் மூலம் இரண்டு இலட்சம் எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனமும் மற்றும் இரண்டு இலட்சம் எண்ணிக்கையிலான இரு சக்கர வாகனமும் நிறுத்துவதற்கு ஏற்றவாறு திட்டமிடப்பட்டுள்ளது. சாத்தியமான இடங்கள் அடையாளம் கண்டறியப் பட்டுள்ளது. மேலும், இதற்காக ஒப்ப பணியினை

மேற்கொள்ள கலந்தாலோசகர் நியமனம் செய்யும் பணி நடை பெற்று வருகிறது.

### 3.14.3 அறிவார்ந்த போக்குவரத்து அமைப்பு திட்டம் (ITS) - JICA நிதி

சென்னை பெருநகர பகுதியில் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்பு மேம்படுத்தும் திட்டமானது ₹660 கோடியில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிதி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு நிதியின் உதவியுடன் முறையே ₹465 கோடி மற்றும் ₹195 கோடியில் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் போக்குவரத்து தகவல் அமைப்பு மேம்பாடு, போக்குவரத்து மேலாண்மை மற்றும் மின்னணு பேருந்து மேம்பாடு ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தின் நிர்வாக ஒப்புதல் தமிழக அரசின் அரசாணை எண். (2டி) எண்.89, ந.நி(ம)கு.வ.து (மா.ந.1) துறை மூலம் 27.11.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, ஒப்பம் மேலாண்மை, திட்ட செயல்பாடு மற்றும் திட்ட மேற்பார்வை ஆகியவற்றை கண்காணிப்பதற்கான கலந்தறிதற்குரியவரை தேர்ந்தெடுக்க ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

### 3.14.4 நிர்பயா நிதி

சென்னை மாநகர பெண்களின் பாதுகாப்பினை பொது இடங்களில் மேம்படுத்த "பாதுகாப்பான நகர திட்டம்" மொத்தம் ₹425.06 கோடி செலவில், மத்திய அரசின்

பங்களிப்பு ₹255.04 கோடியிலும் மற்றும் மாநில அரசின் பங்களிப்பு ₹170.02 கோடியிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் தமிழக அரசின் அரசாணை (இருபதாண்டு) எண். 86, ந.நி(ம)கு.வ.து (மா.ந.1) துறை, நாள் 20.11.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் சென்னையில் உள்ள பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதாகும்.

இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் அரசால் அமைக்கப்பட்ட மாநில அளவிலான குழு மற்றும் வழிகாட்டும் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஏற்கப்படின் அதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது. இப்பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, பெருநகர காவல் துறை, மாநகர போக்குவரத்து கழகம் மற்றும் சமூகநல ஆணையரகம் ஆகிய துறைகளின் மூலம் மேற்கொள்ளப்படும். தற்போது கொள்முதல் செய்வதற்கான ஒப்பப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 3.15 அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

பசுமை இடங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் திறந்தவெளிகளில் பசுமையை மேம்படுத்தி பராமரிப்பதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு பிரிவுகள் அமைத்து நகரங்களின் உன்னதமான மதிப்பை அதிகரிக்க செய்வது அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT SCHEME) ஒரு நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியானது 50 % இந்திய

அரசிடமிருந்தும், 20% தமிழ்நாடு அரசிடமிருந்தும் மீதமுள்ள 30% நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிடமிருந்தும் பெறப்படுகிறது..

இத்திட்டத்தின் கீழ், 2015-16, 2016-17, 2017-20 ஆம் நிதியாண்டுகளில் 51 பூங்காக்கள் அமைக்கும் பணி ₹34.74 கோடியில் அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி 2017-18ஆம் நிதி ஆண்டில் அம்ருத் திட்ட ஊக்க நிதியின் கீழ், ₹3 கோடி மதிப்பீட்டில், 4 பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**3.16 பாலங்கள்**

தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியால், ஆறுகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே உள்ள பாலங்கள், தரைமட்ட பாலங்கள் மற்றும் நடை பாலங்கள், பேருந்து சாலை சந்திப்புகளில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே உள்ள மேம்பாலங்கள் என மொத்தம் 280 பாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில், இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே 16 சுரங்கப்பாதைகளும் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 5 பாதசாரிகள் சுரங்கப்பாதைகளும் பராமாரிக்கப்பட்டு வருவதும் அடங்கும் .

2017-18 ஆம் ஆண்டில் ₹3.10 கோடி மதிப்பீட்டில், 8 பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. வடக்கு

வட்டாரம் (மண்டலம் 1-5), மத்திய வட்டாரம் (மண்டலம் 6-10) மற்றும் தெற்கு வட்டாரம் (மண்டலம் 11-15)ல் உள்ள பாலங்கள் / சுரங்கப்பாதைகள்/ பெட்டக வடிவ பாலங்கள் / நடைபாலங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் பணி, மாம்பலம் கால்வாயின் குறுக்கே ஒரு பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி, வேளச்சேரி ஏரியின் குறுக்கே தற்போதுள்ள கக்கன் பாலத்தினை மேம்படுத்தும் பணி மற்றும் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே ஸ்டரான்ஸ் சாலை, செங்கற்சூளை சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை மற்றும் குக்ஸ் சாலையை இணைக்கும் தற்போதுள்ள பாலத்தினை மேம்படுத்தும் பணி ஆகிய ஆறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டவர் சாலையில் ஒரு பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இரயில்வே காலனி 3வது தெருவில் ஒரு பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

2018-19 நிதி ஆண்டில் ₹13.16 கோடி மதிப்பீட்டில் 12 பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டன. அவற்றில் ஜி.என்.செட்டி சாலை மேம்பாலத் தூண்களில் செங்குத்து பூங்கா அமைக்கும் பணிகள் இரண்டும் (சீர்மிகு நகர நிதி), பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தினை அழகுபடுத்தும் பணி (சென்னை நதிகள் சீரமைக்கும் திட்டம்) ஆகிய மூன்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அடையாறு ஆற்றின் குறுக்கே தற்போதுள்ள திரு.வி.க.பாலம் மற்றும் ஆலந்தூர் சாலை பாலம் ஆகிய இரண்டு பாலங்களை அழகுபடுத்தும் பணி (சென்னை நதிகள் சீரமைக்கும் திட்டம்), கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் இரண்டு பெட்டக வடிவ

பாலம் அமைக்கும் பணி (தூய்மை இந்தியா திட்ட நிதி), விருகம்பாக்கம் அரும்பாக்கம் கால்வாயின் குறுக்கே காளியம்மன் கோவில் தெருவில் தற்போதுள்ள பாலத்தினை இடித்து விட்டு புதிய பாலம் அமைக்கும் பணி (தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்ட நிதி), வீரபாண்டியன் தெரு மற்றும் பிள்ளையார் கோவில் தெருவிற்கிடையே சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் கால்வாயின் குறுக்கே நடைப்பாலம் அமைக்கும் பணி (ச.ம.உ.மே.நிதி) மற்றும் வடக்கு வட்டாரம் (மண்டலம் 1 - 5), மத்திய வட்டாரம் (மண்டலம் 6 - 10) மற்றும் தெற்கு வட்டாரம் (மண்டலம் 11 - 15)ல் உள்ள பாலங்கள் / சுரங்கப்பாதைகள் / பெட்டக வடிவ பாலங்கள் / நடைபாலங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் பணி ஆகிய 9 பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.17 தெருவிளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி 2,85,828 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. இவை அனைத்தும் குறைந்த மின்சாரம் உபயோகிக்கும் எல்.இ.டி. தெரு விளக்குகளாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மகளிர், வயதானவர்கள் மற்றும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பு கருதி உட்புற மற்றும் பேருந்து சாலைகளில் சீரான வெளிச்சம் தரும் தெரு விளக்குகள் அமைக்கும் நோக்கத்துடன், மின் சக்தி சேமிக்கும் எல்.இ.டி தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மெட்டல் அலைடு விளக்குகளோடு

ஒப்பிடும்போது எல்.இ.டி தெரு விளக்குகள் 45% குறைவாக மின்சாரம் உபயோகிக்கும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 1,10,000 எண்ணிக்கையில் எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணி ₹401.79 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு விரைந்து முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் விடுபட்ட இடங்களில் 2018-19ஆம் ஆண்டில் 17,301 எண்ணிக்கையிலான புதிய தெரு மின் விளக்கு கம்பங்களுடன் கூடிய மின் சக்தி சேமிப்பு எல்.இ.டி விளக்குகள் ₹80.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2018-19ஆம் ஆண்டில் ₹141.35 கோடி மதிப்பீட்டில் 87,892 அனைத்து சோடியம் ஆவி விளக்குகள், உயர் கோபுர மின் விளக்குகள் மற்றும் பூங்கா மற்றும் விளையாட்டு திடலில் உள்ள விளக்குகள் அனைத்தையும் மாற்றி மின் சேமிப்பு வகை எல்.இ.டி.விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இப்பணிகள் மூலதன மானிய நிதி (CGF-Capital Grant Fund) மற்றும் பெரு நகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய அளவில் 100 சதவிகித தெரு விளக்குகளை எல்.இ.டி. மின் விளக்குகளாக மாற்றி அமைத்த வெகு சில மாநகராட்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியும் ஒன்றாகும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27.2.2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஒவ்வொரு மாதமும் தெருவிளக்கு மின்கட்டணமாக ₹6 கோடி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தி வந்தது. புதியதாக எல்.இ.டி விளக்குகளாக மாற்றி அமைத்ததால் மின்கட்டணம் செலுத்துவது மாதத்திற்கு ₹3.50 கோடியாக குறைந்துள்ளது. இதனால் மின்கட்டணம் செலுத்துவதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதத்திற்கு ₹ 2.50 கோடியும், வருடத்திற்கு ₹30 கோடியும் சேமிப்பாகிறது.

சூரிய ஒளி மின் சேமிப்பு தகடுகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் 662 கட்டிடங்களில் 3.064 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி செய்யும் வகையில் ₹ 24.03 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது, இப்பணிகள் விரைவில் முடிக்கப்படும். இந்த பணி சென்னை சீர்மிகு நகர நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.18 மழைநீர் வடிகால்**

பெருநகர சென்னை மாநகராட்சி, மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ள பெருக்கை தடுக்க 1,894 கி.மீ. நீளத்திற்கு 7,351 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் கட்டமைப்பை உருவாக்கி பராமரித்து வருகிறது. மேலும், 49 கி.மீ. நீளத்திற்கு 31 நீர்வழிக்கால்வாய்களையும் பராமரித்து வருகிறது. இதில் கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், பாடி குப்பம் கால்வாய் போன்ற சில கால்வாய்களும் அடங்கும்.

விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த சென்னை மாநகரின் கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான

வசதிகளை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கொள்கைப்படி, மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம், பாதுகாப்பாகச் சேகரித்து குளம் மற்றும் ஏரிகளில் சென்றடைய இணைப்புகள் ஏற்படுத்துதல், நிலத்தடி நீரை பாதுகாக்க மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான சுத்தமான சூழ்நிலைகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப்பகுதிகளில் 1,069.40 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை ஏற்படுத்த ₹4,034.30 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக அடையாறு மற்றும் கூவம் வடிநிலப்பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி ₹1261.70 கோடியில் தமிழ்நாடு நீடித்த நிலையான நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ், உலக வங்கி நிதியுதவியுடன் 405 கி.மீ. நீளத்திற்கு 39 சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், 35 சிப்பங்களில் 403 கி.மீ. நீளத்திற்கு (99 சதவிகிதம்) பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவ்வடிநில பகுதியில் உள்ள 4 நீர்வழி கால்வாய்கள் முறையே அம்பத்தூர் சிட்கோ கால்வாய், நொளம்பூர் கால்வாய், பாடிக்குப்பம் கால்வாய் மற்றும் நந்தம்பாக்கம் கால்வாய் ஆகிய நீர்வழி கால்வாய் பணிகளை விரைவாக முடிக்கும் பொருட்டு 29 சிறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. தற்போது வரை 93 சதவிகிதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் முடியும் தருவாயில் உள்ளது. இதனால் அம்பத்தூர், வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் பகுதிகளில் மழைநீர் தேங்காமல் உடனடியாக வடியும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது..

கோவளம் வடிநிலப்பகுதியில் 360 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுவதற்கு ₹1243.15 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கே.எப்.டபிள்யூ (KfW) என்ற ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதி உதவியால் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த வடிநிலப்பகுதி முழுவதும் 3 துணை வடிநிலங்களாக M1, M2 மற்றும் M3 என திட்டக்கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் M3 திட்டக்கூறுபணிகளுக்கு (பாலவாக்கம், கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், கானத்தூர், உத்தண்டி) KfW வங்கி மூலம் நியமிக்கப்பட்ட திருவாளர்கள். காக்ஸ் கன்ஸல்ட்டண்ட்ஸ் என்ற ஜெர்மன் நாட்டினை சேர்ந்த கலந்தாலோசகர், திட்ட அறிக்கையினை மேம்படுத்தி 52 கி.மீ. நீளத்திற்கு ₹270.38 கோடி மதிப்பில் பணிகளுக்கான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, KfW ஒப்பம் கோர தடையின்மை சான்று வழங்கியது. ஒப்பம் 14.11.2018 அன்று கோரப்பட்டு 01.02.2019 அன்று திறக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

மேலும், கோவளம் வடிநிலப்பகுதியில் (M1) மற்றும் (M2) திட்டக்கூறுகளுக்கு KfW மூலம் திருத்திய விரிவான

திட்ட அறிக்கையினை அளிக்க கலந்தாலோசகரை நியமித்து விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில், ₹2518 கோடி மதிப்பில் 763 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க திருத்திய விரிவான திட்ட அறிக்கையினை தயாரிக்கப்பட்டு இப்பணிக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் நிதி உதவி பெறுவதற்காக நிதிதுறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் பரிசீலனை செய்து, மேலும் ஒப்புதலுக்கு பொருளாதார விவகார துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு 22.01.2019 அன்று நடைபெற்ற 96வது வழிகாட்டும் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2016 மற்றும் 2017 பருவ மழைக் காலங்களில் 15 மண்டலங்களில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட 15 இ.ஆ.ப. அதிகாரிகள் மழைக் காலத்திற்கு முன்பும் மழைக் காலத்திலும் கண்காணித்து குறுகிய கால மற்றும் நீண்ட காலத்திற்கான வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரைக்க நியமிக்கப்பட்டனர். அனைத்து அதிகாரிகளும் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளாக மழைநீர் வடிகால்களில் இணைப்பு துண்டிக்கப்பட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கவும், புதிய மழைநீர் வடிகால் கட்டவும் பல இடங்களில் அறிவுறுத்தினர் இதனால் அவ்விடங்கள் வெள்ள பாதிப்பிலிருந்து முற்றும்

தடுக்கப்படும் என்று வலியுறுத்தினர். மேலும் TNUIFSL மூலம் ஒரு கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு, அவர்கள் ஆய்வு மேற்கொண்டு மண்டல அதிகாரிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் நல சங்கங்களை கலந்து ஆலோசித்து பாதிக்கப்பட்ட இடங்களை அடையாளம் கண்டு, துண்டிக்கப்பட்ட கால்வாய்களில் இணைப்பை ஏற்படுத்தவும், சுரங்கபாதையை சுற்றிவுள்ள இடங்களில் கால்வாய் அமைக்கவும் ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பித்தனர்.

இந்த மொத்த பணிகளுக்கான மதிப்பீடு சுமார் ₹440 கோடியில் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 340 இடங்களில் ₹290 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சீர்மிகு நகர நிதியின் கீழ் 114 இடங்களில் ₹150 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 85% பணிகள் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

சீர்மிகு நகர நிதியின் கீழ், இணைப்பு வடிகால் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 29 இடங்களில் ₹80 கோடியில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 85 இடங்களில் ₹55 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெறவுள்ளது. அனைத்து பணகளும் மழைநீர் வெளியேற்றும் பகுதியிலிருந்து தொடங்கப்பட்டதால் மழைநீர் தங்கு தடையின்றி செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2017 பருவ மழைக் காலத்தில், ஸ்டீபன்சன் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை மற்றும் சுற்று புற பகுதிகளில் மழைநீர் பல நாட்கள் தேங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட இரட்டை வடிகால் (ஏகாங்கிபுரம் நீர்வழி கால்வாய்) சிதலமடைந்தும் மற்றும் 370 ஆக்கிரமிப்பாளர்கள் வடிகால் மீது தங்கி இருந்ததும் அதற்கான காரணங்களாக கண்டறியப்பட்டு, சிதலமடைந்த வடிகால்வாய்களை புதுப்பிக்க மற்றும் கால்வாய் புணர்ப்பித்து இணைப்பு ஏற்படுத்தவும் மொத்த 4180 மீ நீளத்தில் வடிகால் அமைக்க தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதியின் கீழ் ₹25 கோடியில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 370 ஆக்கிரமிப்பாளர்களை ஒக்கியம் துரைப்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் மாற்று வீடுகள் கொடுத்து, இதுவரை 85% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நீர் ஆதாரங்களை புனரமைத்து புத்துயிர் அளிப்பதோடு, நிலத்தடி நீர்தேக்கங்களை மேம்படுத்த இத்திட்டம் தொடங்கப்பட்டது. மழைநீர் சேகரிப்புத் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டப்பேரவையில், தமிழகத்தில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் மற்றும் கோவில் குளங்களை

புனரமைக்கவும், “நீடித்த நிலையான நீர் பாதுகாப்பு திட்டம்” 2015ல் அறிவித்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 210 குளம் மற்றும் ஏரிகள் உள்ளது. இதில் 5 குளங்களை சீரமைக்கும் பணி மூலதன நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ₹5.95 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை சீர்மிகு நகர நிதியில் வில்லிவாக்கம் – சிட்கோ நகர் பகுதியில் உள்ள 25.5 ஏக்கர் பரப்பளவுள்ள வில்லிவாக்கம் குளம், ₹16 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் நிறைவடையும் போது, இந்த குளம் வில்லிவாக்கம் பகுதியில் பிரதான நீர்நிலையாக திகழ்வதோடுமட்டுமல்லாமல், நிலத்தடி நீர்மட்டமும் உயர்வதோடு, சிட்கோ நகர் பகுதியில் மழைநீர் தேங்குவது முற்றிலும் தவிர்க்கப்படும். மேலும் இந்த புனரமைப்பு பணியில் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களும் மேற்கொள்ளப்படவுள்ளது.

சென்னை சீர்மிகு நகர நிதியில் 52 பணிகள் ₹18.20 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது விரைவில் முடிக்கப்படவுள்ளது. மேலும் ₹25.29 கோடி மதிப்பீட்டில், 2 பெரிய குளங்களை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் உள்ள 55 குளங்களை புனரமைக்கும் பணிக்கு, விரிவான திட்ட

அறிக்கை ₹45.66 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தயாரிக்கப்பட்டுள்ளது.

சமூக பொறுப்பு நிதியின் கீழ் 38 நீர் நிலை சீரமைக்கும் பணிகளுக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வருகிறது. மேலும், 57 குளங்கள் புனரமைப்பு பணிகளுக்கு ₹ 50.51 கோடிக்கு மதிப்பீடு TWIC நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் நிறைவுறும்போது, பெருநகர சென்னை மாநகராட்சி சுற்றியுள்ள பகுதிகளில் 1 டி.எம்.சி. அளவு கூடுதலாக மழைநீரை தேக்கி வைக்க முடிவதோடு, நிலத்தடி நீர்மட்டமும் உயர வழிவகுக்கும். மேலும் அருகாமையில் உள்ள பகுதிகள் மழைநீர் தேங்குவதிலிருந்து தவிர்க்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 16 பெரிய கால்வாய்கள் 29 கி.மீ. நீளத்திற்கும் 15 சிறிய கால்வாய்கள் 20 கி.மீ. நீளத்திற்கும் ஆக மொத்தம் 49 கி.மீ. நீளத்திற்கான கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் பெரிய கால்வாய்களை ஒரு ஆம்பிபியன் இயந்திரம் கொண்டும் சிறிய கால்வாய்களை மூன்று ரோபோட்டிக் இயந்திரம் கொண்டும், ஆகாய தாமரை அகற்றும் பணியும், தூர் வாரும் பணியும் மேற்கொள்ளப்பட்டு அனைத்து கால்வாய்களும் வருடத்தில் இரு முறை சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இது போன்ற பெரிய கால்வாய்களை தூர்வாரும் நவீன இயந்திரங்கள் முன்பு நடைமுறையில் இல்லை. தற்பொழுது பெருநகர மும்பை மாநகராட்சியை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் மட்டுமே இது

போன்ற நவீன இயந்திரங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, இக்கால்வாய்களில் உள்ள ஆகாய தாமரைகள் மட்டுமின்றி, பிற இயந்திரங்கள் மற்றும் ஆட்கள் மூலம் தூர் வார இயலாத சகதிகள் மற்றும் வண்டல்கள் ஆகியவை அனைத்து கால்வாய்களில் இருந்தும் அகற்றப்பட்டு வருகிறது. இதனால், இந்த கால்வாய்களின் ஆழமும் அகலமும் அதிகப்படுத்தப்பட்டு இந்த கால்வாய்களின் வெள்ள நீர் கடத்தும் திறன் பல மட,ங்கு கூடியுள்ளது.

மேலும், இக்கால்வாய்களை வருடத்திற்கு மூன்று முறை சுத்தம் செய்வதற்கு ஏதுவாக கூடுதலாக ஒரு ஆம்பிபியன் இயந்திரம் மற்றும் ஒரு ரோபோட்டிக் இயந்திரம் கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### 3.18.1 மழைநீர் வடிகால்களில் மிதக்கும் கழிவுகளை தடுக்கும் வலைகளை அமைத்தல்

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை சீர் செய்ய தற்போதைய தலைமுறையினால் அடிக்கடி பேசப்படும் வார்த்தை நீர்நிலையை மீட்டெடுத்தல் மற்றும் புனரமைத்தல் ஆகும். ஆகவே, நீர்நிலைகளில் குப்பைகள் மற்றும் மிதக்கும் கழிவுப்பொருட்கள் இல்லாமல் தூய்மையாக பராமரிப்பதும் அத்தகைய கழிவு பொருட்கள் கடலில் கலந்து கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். எனவே பெருநகர சென்னை மாநகராட்சியால் இனங்காணப்பட்ட பல்வேறு 200

இடங்களில் குப்பைகளை தடுக்கும் வலைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை துவக்கியுள்ளது. இதுவரை 67 இடங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பான்கள் மிதக்கும் கழிவுகள் மற்றும் ஆகாய தாமரைகள் மழைநீர் வடிகால்கள் மூலம் நீர்நிலைகள் மற்றும் கடலில் சென்றடைவதை தடுக்கும்.

**3.19 திடக்கழிவு மேலாண்மை**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தினந்தோறும் 5,250 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் கையாளப்பட்டு வருவது பிரதான குடிமை பொறுப்புகளில் ஒன்றாகும்.

15 மண்டலங்களைக் கொண்ட இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் 12 மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டும், இதர 3 மண்டலங்களின் திடக்கழிவு மேலாண்மை தனியார் நிறுவனம் மூலமும் கையாளப்படுகிறது.

பின்வரும் வழிமுறைகளில் திடக்கழிவுகள் நிர்வாகம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்பட்டு வருகிறது:

**3.19.1 முதல்நிலை திடக்கழிவு சேகரம்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது முதல்நிலை திடக்கழிவு சேகர செயல்பாட்டில் திடக்கழிவுகள் உருவாகும் இடமான வீடுகள் தோறும் சென்று 5,218 மூன்று சக்கர மிதிவண்டிகள் மூலம் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணியை அன்றாடம் செவ்வனே மேற்கொள்ளும் பொருட்டு சுமார் 19,196 மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவன துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பணியாளர்களின் வருகைப் பதிவினை பயோமெட்ரிக் எனும் கைவிரல் ரேகை பதிக்கும் மின்னணு இயந்திரம் மூலம் பதியப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

மேலும் இம் முதல் நிலை திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாக செய்திட கனரக / இலகுரக காம்ப்பாக்டர் வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் திடக்கழிவு சேகரத்துக்காக செல்லும் வழித்தடங்களுக்கான வரைபடம் தயாரித்து, செயல்பாடுகள் சிறப்பாக கண்காணித்தும், செயல்படுத்தப்பட்டும் வருகிறது. துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு மூக்குக்கவசம், கையுறை மற்றும் இரவில் ஒளிரும் மேலாடை மற்றும் இதர நலப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

திட்டக்கூறு -1 மண்டலம் 1, 2 , 3, 7 மற்றும் திட்டகூறு -2 மண்டலம் 11, 12, 14, 15-லிருந்து உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் பணியினை தனியார் மயமாக்குதல் மற்றும் மண்டலம்- 9, 10, 13 ல் ஏற்கனவே நடைபெற்று வரும் தனியார் மயமாக்கப்பட்ட பணியான திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் பணி செப்டம்பர் 2019-ல் முடிவுறும் நிலையில் உள்ளதால் இப்பணிக்கு புதிய

ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்க திட்டக்கூறு -5 மண்டலம் 9, 10, 13 லிருந்து உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. மொத்தமுள்ள 3 திட்டக்கூறுகளுக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளன.

### 3.19.2 திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியானது திடக்கழிவுகளை தரம் பிரித்து கையாள்வதில் தனிச் சிறப்பு கவனம் கொண்டு செயல்படுத்தி வருகிறது. பொது மக்கள் இதற்கான விழிப்புணர்வையும், உள்நோக்கத்தினைப் புரிந்து செயல்படவும், மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு நிகழ்வாக, உலக சுற்றுச் சூழல் தினம் ஜீன் 5 அன்று பொது மக்களை இவ்விழிப்புணர்வு சேருகின்ற வகையிலும், ஈரமான மக்கும் திடக்கழிவுகள் பச்சை நிற தொட்டிகளிலும் உலர்ந்த மக்காத திடக்கழிவுகளை நீல நிற தொட்டிகளிலும் சேகரிப்பது குறித்து விளக்கப் பட்டுவருகிறது.

மாநகராட்சியில் உருவாகும் திடக்கழிவுகளை குறைக்கும் நோக்கத்துடன், அடிப்படை கொள்கைகளான உருவாகும் குப்பைகளை குறைத்தல், மறு பயன்பாட்டிற்கு கொண்டு செல்லுதல் மற்றும் மறு சுழற்சிக்கு கொண்டு செல்லுதல் ஆகிய அனைத்தும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-க்கு இணங்க குப்பையை உருவாக்கும் ஒவ்வொருவரும் திடக்கழிவுகளை கையாளுவதற்கு.

02.10.2017 மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று பெருமை சேர்க்கும் வகையில் அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் புதன்கிழமைதோறும் மக்காத திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் போன்ற உலர் திடக்கழிவுகளைத் தனியாக பிரித்துகையாளப்பட்டு வருகிறது.

### 3.19.3 இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகரமும், போக்குவரத்தும்

இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகர நிலையில், திடக்கழிவு சேகர தொட்டிகளிலிருந்து 135 கனரக குப்பை நெருக்கும் இயந்திரங்கள், 159 இலகுரக குப்பை நெருக்கும் இயந்திரங்கள், 22 ஹாலேஜ் டிப்பர் டிரக்குகள், 114 கனரக டிப்பர்கள் மற்றும் 31 இலகுரக டிப்பர் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பேருந்து தடச்சாலைகள் மற்றும் இதர முக்கிய சாலைகளை 16 எண்ணிக்கையிலான இயந்திரப் பெருக்கிகள் மூலம் சுத்தப்படுத்தப்படுகின்றன. 71 சக்கர தடை வாகனங்கள் மற்றும் 22 முன் பின் பளு தூக்கிகள் ஆகியவற்றை பயன்படுத்தி திடக்கழிவுகள் மற்றும் கட்டுமான மற்றும் இடிபாட்டு கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. போக்குவரத்து தட வரைபடத்தின்படி திடக்கழிவுகள் குப்பை மாற்று வளாகங்களுக்கும் பின்பு கொடுங்கையூர், பெருங்குடி வளாகங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு களையப்பட்டு வருகிறது.

இப்பணிக்காக 2011-12 முதல் 2015-16 ஆண்டு வரை நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள்,

இயந்திரப் பெருக்கிகள், சக்கரத்தடை வாகனங்கள், முன்பின் பளு தூக்கிகள், ஹைட்ராலிக் எக்ஸ்வேட்டர்கள் மற்றும் புல்டோசர்கள் என மொத்தம் 295 வாகனங்கள் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் மூலமும் ₹62.25 கோடி செலவில் கொள்முதல் செயப்பட்டுள்ளன. 2014-15 முதல் 2017-18 வரை உள்ள நிதி ஆண்டில் 8,253 காம்பாக்டர் குப்பை தொட்டிகள் ₹14.56 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட மெரீனா கடற்கரை மற்றும் எலியட்ஸ் கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், காகிதக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள், உடைந்த பாட்டில்கள், ஓடுகள் ஆகியவற்றை கடற்கரை மணலை சலிப்பதன் மூலம் அகற்றி தூய்மை செய்யும் திறனுள்ள டிராக்டர் மூலம் இயக்கப்படும் மணல் சலிக்கும் இயந்திரங்கள், 8 எண்ணிக்கையில் ₹6.78 கோடி செலவில் ஸ்வதேஷ் தர்ஷன் திட்ட நிதியின் கீழ் வெளிநாட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ₹7.40 கோடி மதிப்பில் 411 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கரவாகனங்கள் கொள்முதல் செய்யப்பட ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் 160 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கரவாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 9 மண்டலங்களில் வாகன இயக்கவூர்தி நிலையங்கள் இயங்கி வரும் நிலையில், 2017-18ல் நிதி ஆண்டில் மேலும் இரண்டு வாகன இயக்கவூர்தி நிலையங்கள் மணலி மற்றும் சோழிங்கநல்லூரில் ₹7.59 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் மண்டலம் 1ல் வாகன இயக்க ஊர்தி நிலையம் அமைக்கும் பணி ₹7.40 கோடி மதிப்பீட்டில் 2018-19 நிதி ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

### 3.19.4 பரவலாக்கப்பட்ட திடக்கழிவு பதனிடுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு கொட்டும் வளாகங்களில் சேகரமாகும் குப்பையை குறைக்கும் பொருட்டு மாநகரின் மண்டலங்களில் சிறிய அளவிலான பதனிடுதல் திட்டங்களாக மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் கிடங்குகள் மற்றும் உயிரி எரிவாயு கலன்கள் செயல்பட்டு வருகின்றன.

### 3.19.4.1 மக்கும் குப்பை

நாள்தோறும் சராசரியாக பெறப்படும் 384 மெட்ரிக்டன் எடை கொண்ட மக்கும் கழிவுகளை வாகனங்கள் மூலமாக கீழ்கண்ட குப்பை பதனிடும் நிலையம் / அமைப்புகள் மூலம் பதனிடப்பட்டு வருகிறது.

- 148 உரம் தயாரிக்கும் கிடங்குகள்.
- 2 மண் புழு உரம் தயாரிக்கும் கிடங்குகள்.

- 33 மீத்தேன் எரிவாயு தயரிக்கும் கலன்கள்.
- 7 BARC தொழில்நுட்ப அடிப்படையில் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் கலன்கள்.
- 443 உரக்கிணறுகள்.
- 175 பயன்படுத்தப்படாத சிண்டக்ஸ் தொட்டிகளில் உரம் தயாரித்தல்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து பூங்காக்களிலும் 537 மூங்கில் தொட்டிகள் மற்றும் 21 மண் குழிகள் மூலம் நாள்தோறும் சுமார் 37 மெட்ரிக் டன் தோட்டக்கழிவுகள் கையாளப்பட்டு வருகிறது.

### 3.19.4.2 மக்காத கழிவுகள்

- சேகரிக்கப்படும் மக்காத கழிவுகள் நேரடியாக அருகில் உள்ள 64 குப்பை தரம் பிரிக்கும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு மறு சுழற்சிக் குள்ளாக்கப்படும். அவ்வாறு பிரிக்கப்பட்ட கழிவுகள் மறு சுழற்சியாளர்களுக்கு அனுப்பபப்படுகிறது.
- 02.10.2017 முதல் ஒவ்வொரு புதன்கிழமையும் திடக்கழிவு மேலாண்மை துறை சட்டவிதிகள் 2016ன் படி மக்காத குப்பை பெறப்பட்டுவருகிறது.

### 3.19.5 திடக்கழிவுகளைக் களைதல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 7 குப்பை மாற்று வளாகங்களும், 2 குப்பை கொட்டி நிரவும்

வளாகங்களான 269 ஏக்கர் பரப்பளவு கொண்ட கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் மற்றும் 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் திடக்கழிவுகளை களைதலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3.19.6 உயிரி அகழ்வு (BIO-MINING)**

- மண்டலம்-1, சாத்தாங்காட்டில் பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 1,25,635.28 cu.m திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணியின் மதிப்பீட்டு தொகை ₹ 9.98 கோடி.
- மண்டலம்-7, அத்திப்பட்டில் பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 86,121.63 cu.m திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணியின் மதிப்பீட்டு தொகை ₹ 5.69 கோடி.
- மண்டலம்-14, பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு, குவிந்துள்ள 37,509.81 cu.m திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து பயனுள்ள பொருட்களை பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணியின் மதிப்பீட்டு தொகை ₹ 2.48 கோடி.

மேற்கண்ட உயிரி அகழ்வு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்ற பிறகு மொத்தம் 37.89 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படவுள்ளது.

### 3.19.7 ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியும் பிளாஸ்டிக்கிற்கு தடை

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒருமுறை உபயோகித்து தூக்கி எறியும் பிளாஸ்டிக்குகளை அரசாணை எண்.84 நாள் 25.06.2018-ன்படி தடை செய்வது 01.01.2019 முதல் அமல்படுத்தப்பட்டு, இதுநாள் வரை 240 மெட்ரிக்டன் பிளாஸ்டிக்குகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதனை அப்புறப்படுத்தி அழிக்கும் விதமாக ஸ்ரீபெரும்பதூரில் உள்ள எரிபொருள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு பெயரளவான கட்டணம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.20 தூய்மை இந்தியா திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சி "திறந்த வெளி மலம் கழித்தலற்ற" மாநகராட்சியாக அறிவிக்கப் பட்டுள்ளது. மாநகராட்சியில் 1,166 சமுதாய கழிவறை இருக்கைகள் ₹18.93 கோடி செலவிலும் மற்றும் கழிப்பறை வசதி இல்லாதவர்களுக்கு 6,636 தனி நபர் கழிப்பறைகள் ₹4.68 கோடி செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 07.03.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு திறந்த வெளிமலம் கழித்தலற்ற மாநகராட்சி என மறு சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்திட தூய்மை இந்தியா திட்டத்தில் 2,305 மூன்று சக்கர மிதிவண்டிகளும், 31,406 மூன்று சக்கர மிதி வண்டிகளுக்கான குப்பை தொட்டிகளும், 13,183 காம்ப்பாக்டர் குப்பைத் தொட்டிகளும், 2,775 ரோட்டோ மோல்டு குப்பைத் தொட்டிகளும், ₹25.80 கோடி செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டன.

தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ், 4 இயந்திர பெருக்கி வாகனங்கள் 7 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியுடன் ₹ 5.60 கோடி முதலீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பரவலாக்கப் பட்ட முறைப்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ₹ 14.01 கோடி மதிப்பீட்டில் 3 மண் புழு உரம் தயாரிக்கும் உரக்கிடங்குகளும், 69 சாதாரண உரம் தயாரிக்கும் கிடங்குகளும், 9 உயிரி எரிவாயு தயாரிக்கும் கலன்கள், 47 வளங்கள் மீட்பு மையங்கள், மற்றும் 3 திடக்கழிவுகளை நொறுக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 16 வளங்கள் மீட்பு மையங்கள் மற்றும் 4 உரக்கிடங்குகள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ₹ 2.95 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

இந்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் “ஸ்வச்சத்தா செயலி" உருவாக்கப்பட்டு அந்த செயலியின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதார

சம்பந்தப்பட்ட குறைகள் தீர்வு செய்யப்பட்டு வருகிறது. இது வரை பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட 11,235 முறையீடுகள் நிர்ணயிக்கப்பட்ட 12 மணி நேரத்திற்குள் திறம்பட தீர்க்கப்பட்டுள்ளன. மேலும், இச்செயல்பாடு பெருநகர சென்னை மாநகராட்சியால் கண் காணிக்கப்பட்டு வருகிறது.

## 4. பேரூராட்சிகளின் இயக்ககம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 243Q -ன் படி பேரூராட்சிகள் என்ற வகைப்பாடு கொண்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். பெரும்பாலான பேரூராட்சிகள் இயல்பாகவே சுற்றுலா, வழிபாடு மற்றும் புராதன நகரங்களாக நூற்றாண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளுக்கான இயக்ககம் 07.05.1981 முதல் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 528 பேரூராட்சிகள் உள்ளன. பேரூராட்சிகள் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

பேரூராட்சிகள் இயக்ககம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் 2 இணை இயக்குநர்கள் மற்றும் மண்டல அளவில் 17 உதவி இயக்குநர்களை கொண்டும் இயங்கி வருகிறது.

பேரூராட்சிகளின் இயக்ககம் 17 மண்டல அலுவலகங்கள் மற்றும் 528 பேரூராட்சிகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது. ஆண்டு வருவாய் அடிப்படையில், பேரூராட்சிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| பேரூராட்சிகளின் நிலை | ஆண்டு வருவாய் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிறப்பு நிலை | ₹ 200 இலட்சத்திற்கு மேல் | 64 |
| தேர்வுநிலை | ₹ 100 இலட்சத்திற்கு மேல் ₹ 200 இலட்சம் வரை | 202 |
| முதல்நிலை | ₹ 50 இலட்சத்திற்கு மேல் ₹ 100 இலட்சம் வரை | 200 |
| இரண்டாம் நிலை | ₹ 50 இலட்சத்திற்கு கீழ் | 62 |
| | மொத்தம் | 528 |

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் பேரூராட்சிகளின் நிர்வாகம் செயல்பட்டு வருகின்றன.

### 4.1 **செயல்பாடுகள் முக்கிய சேவைகள்**

குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள், இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல் போன்ற சேவைகளை

பேரூராட்சிகள் பொது மக்களுக்கு வழங்குகின்றன. இது தவிர பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், வணிக உரிமம் வழங்குதல், வரி மற்றும் கட்டணங்கள் விதித்தல் மற்றும் வசூலித்தல், கட்டட அனுமதி அளித்தல் போன்றவைகள் பேரூராட்சிகளின் சட்டபூர்வமான பிற செயல்பாடுகளாகும்.

4.2 **வருவாய்**

சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணங்கள், குத்தகை, வாடகை மற்றும் உபயோகிப்பாளர் கட்டணங்கள் ஆகியவை பேரூராட்சிகளின் முதன்மை வருவாய் ஆதாரங்களாகும். முத்திரை தாள் மேல் வரி, மாநில நிதி ஆணையம் (பகிர்வு மானியம்) மற்றும் மத்திய நிதி ஆணைய மானியம் ஆகியவை பேரூராட்சிகளின் பிற முக்கிய வருவாய் ஆதாரங்களாகும்.

4.3 **உட்கட்டமைப்பு மேம்பாடு**

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்தல், உட்கட்டமைப்பு உருவாக்கி தொடர்ந்து பராமரிப்பு செய்தல் அனைத்து அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ளுதல் பேரூராட்சியின் முக்கிய பணியாகும். அரசு, தரம் வாய்ந்த உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கிறது. பேரூராட்சிகளில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள மத்திய மற்றும் மாநில அரசின் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

### 4.4 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM)

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள் மற்றும் தெருக்கள், குடிநீர், கழிவுநீர் மற்றும் சுத்திகரிப்பு, மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையம் மற்றும் வாகனம் நிறுத்துமிடங்களின் மேம்பாடு ஆகிய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), 2011- ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய 6992 பணிகளை மேற்கொள்வதற்கு ₹ 1309.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2018-19 ஆம் நிதியாண்டில் மீண்டும் இத்திட்டத்தின் கீழ் சாலை பணிகள், குடிநீர் மேம்பாடு, மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய 252 பணிகள் ₹149.78 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 54 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 198 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.5 குடிநீர் வழங்கல்

அனைத்து பேரூராட்சிகளிலும் நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் அளவான 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. அதன்படி 70 லிட்டர்

குடிநீர் வழங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | LPCD | பேரூராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 70 லிட்டருக்கு குறைவாக | ஏதும் இல்லை |
| 2 | 70 முதல் 89 லிட்டர் வரை | 381 |
| 3 | 90 லிட்டருக்கு மேல் | 147 |
| மொத்தம் | | 528 |

பேரூராட்சிகள் மூலம் 51 தனி குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 335 பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. தற்போது 31 கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு, குடிநீர் வழங்கலை மேம்படுத்திட பல்வேறு குடிநீர் திட்டப் பணிகளுக்கு, பல்வேறு அரசு திட்டங்களான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், மூலதன மானிய நிதி, இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி உதவி அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011-12 முதல் 2016-17 வரை 5164 எண்ணிக்கையிலான புதிய ஆழ்துளை கிணறுகள்

கைபம்புகளுடன் அமைத்தல் மற்றும் சிறு மின்விசை பம்புகள் அமைத்தல் பணிகள், கைபம்புகள் பராமரிப்பதற்கான உதிரிபாகங்கள் வாங்குதல், ஆழ்துளை கிணறுகள் / நீர் உறிஞ்சு கிணறுகள் புனரமைப்பு செய்தல், கை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளை சிறுமின்விசை பம்புகளாக மாற்றியமைத்தல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், HDPE தொட்டிகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளைத் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த மோட்டார்களை மாற்றம் செய்தல் ஆகிய குடிநீர் பணிகள் ₹452.78 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 5155 பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய 9 பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பேரூராட்சிகள் இயக்கக செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் குடிநீர் வழங்கல் தொடர்பாக உட்கட்டமைப்பு மேம்பாட்டில் உள்ள இடைவெளியினை கண்டறிந்ததோடு மட்டுமல்லாமல் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவினை மேம்படுத்திடவும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கோடை கால மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில், பல்வேறு குடிநீர் திட்டப்பணிகள் தற்போது எடுத்துக்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2017-18 | | 2018-19 | |
|---|---|---|---|---|---|
| | | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ லட்சத்தில்) | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ லட்சத்தில்) |
| 1 | மூலதன மானிய நிதி | 16 | 2253.00 | 11 | 692.80 |
| 2 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 9 | 253.00 | 8 | 480.00 |
| 3 | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் | - | - | 8 | 614.00 |
| 4 | வறட்சி நிவாரண நிதி | 1515 | 1638.05 | 10 | 352.00 |
| 5 | பொது நிதி | 1951 | 2644.00 | 374 | 2438.74 |
| 6 | காலாவதியான கூட்டு குடிநீர் திட்டங்களை புனரமைத்தல் | 23 | 5585.72 | - | - |
| 7 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 13 | 103.00 | 16 | 55.20 |
| 8 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 265 | 747.63 | 77 | 283.50 |
| 9 | சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம் | 56 | 647.80 | 32 | 304.10 |
| | மொத்தம் | 3848 | 13872.20 | 536 | 5220.34 |

மேற்படி திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலின் அளவு அதிகரித்து

இருப்பதோடு தனிநபர்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவும் அதிகரித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வருடம் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | குடிநீர் தேவை (மில்லியன் லிட்டரில்) நிர்ணயிக்கப்பட்ட அலகு | குடிநீர் விநியோகம் (மில்லியன் லிட்டரில்) | கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2017-18 | 528 | 611 | 728 | 117 |
| 2 | 2018-19 | 528 | 616 | 745 | 129 |

**4.6 சுகாதாரம்**

**4.6.1 பாதாள சாக்கடைத் திட்டம்**

14 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் ₹ 503.45 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிவுற்ற திட்டங்கள்

| வ.. எண் | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சியின் பெயர் | மதிப்பீடு (₹ கோடியில்) | சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு (மில்லியன் லிட்டர்) | வழங்கப்பட்ட மொத்த வீட்டு இணைப்புஎண்ணிக்கை | வரத்து (மில்லியன் லிட்டர்) | வெளியேற்றம் (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | மாமல்லபுரம் | 8.72 | 2.34 | 368 | 0.78 | 0.78 |
| 2 | தஞ்சாவூர் | ஒரத்தநாடு | 18.25 | 2.30 | 1108 | 0.90 | 0.90 |
| 3 | தூத்துக்குடி | திருச்செந்தூர் | 14.48 | 3.90 | 86 | 1.00 | 1.00 |
| | | மொத்தம் | 41.45 | 8.54 | 1562 | 2.68 | 2.68 |

## செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சியின் பெயர் | மதிப்பீடு (₹கோடியில்) | சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு (மில்லியன் லிட்டர்) |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திருமழிசை | 40.60 | 3.00 |
| 2 | தேனி | பழனிசெட்டிபட்டி | 35.61 | 2.80 |
| 3 | விழுப்புரம் | உளுந்தூர்பேட்டை | 39.54 | 3.15 |
| 4 | காஞ்சிபுரம் | ஸ்ரீபெரும்புதூர் | 77.11 | 8.50 |
| 5 | நாகப்பட்டினம் | வேளாங்கண்ணி | 33.51 | 2.33 |
| 6 | காஞ்சிபுரம் | திருப்போரூர் | 42.00 | 4.02 |
| 7 | திருவள்ளூர் | பொன்னேரி | 54.78 | 6.52 |
| 8 | திருச்சி | மண்ணச்சநல்லூர் | 30.11 | 6.41 |
| 9 | திருச்சி | ச.கண்ணனூர் | 19.45 | |
| 10 | தஞ்சாவூர் | வல்லம் | 34.51 | 2.35 |
| 11 | ஈரோடு | பெருந்துறை | 54.78 | 3.14 |
| | | மொத்தம் | 462.00 | 42.22 |

**மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியை போடிநாயக்கனூர் நகராட்சியுடன் இணைத்து ₹ 45.00 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்ட கருத்துருவினை**

செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.6.2 கசடு கழிவு மேலாண்மை

பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான முதலீடு மற்றும் அதன் தொடர்ச்சியாக பராமரிப்பதில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு ஏற்படும் நிதிச்சுமை, செயல்படுத்திட ஏற்படும் காலதாமதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பாதாள சாக்கடை திட்டத்திற்கு மாற்று திட்டமாக தமிழக அரசால் கழிவு கசடு அகற்றும் மேலாண்மை திட்டம் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ3) துறை, நாள்.01.09.2014 ன்படி வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து ஆணையிடப்பட்டுள்ளது.

முன்னோடி திட்டமாக ₹ 5.18 கோடி மதிப்பிட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டப்பணி முடிக்கப்பட்டு தற்போது வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

மேற்படி, திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். 12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.01.2019-ன்படி குன்னத்தூர், குரும்பலூர், பெண்ணாடம், ஆலங்காயம், சேத்தூர், முதுகுளத்தூர், ஜலகண்டபுரம், பென்னகரம், காவேரிப்பாக்கம், ஆலம்பாளையம் மற்றும் செங்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் ₹31.17 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி

திட்டத்தின் கீழ் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், 58 பேரூராட்சிகளில் 52 நகராட்சிகளுடன் ஒருங்கிணைத்து கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

கீழ்க்காணும் பேரூராட்சிகளில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொகுப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ள பேரூராட்சியின் பெயர் |
|---|---|---|
| 1 | மதுரை | அ.வெள்ளாளப்பட்டி |
| 2 | கரூர் | மருதூர் |
| 3 | அரியலூர் | உடையார்பாளையம் |
| 4 | கன்னியாகுமரி | ரீத்தாபுரம் |
| 5 | கன்னியாகுமரி | கள்ளுகூட்டம் |
| 6 | கன்னியாகுமரி | பாலபள்ளம் |
| 7 | கன்னியாகுமரி | மண்டைக்காடு |
| 8 | கன்னியாகுமரி | திங்கள்நகர் |
| 9 | கன்னியாகுமரி | கருங்கல் |
| 10 | கன்னியாகுமரி | நெய்யூர் |
| 11 | கன்னியாகுமரி | மணவாளக்குறிச்சி |
| 12 | கன்னியாகுமரி | கப்பியறை |
| 13 | திருநெல்வேலி | இலஞ்சி |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொகுப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமையவுள்ள பேரூராட்சியின் பெயர் |
|---|---|---|
| 14 | திருநெல்வேலி | புதூர் |
| 15 | திருநெல்வேலி | குற்றாலம் |
| 16 | திருநெல்வேலி | ஆழ்வார்குறிச்சி |
| 17 | திருப்பூர் | கொளத்துப்பாளையம் |
| 18 | வேலூர் | அம்மூர் |
| 19 | தேனி | புதுப்பட்டி |
| 20 | தேனி | காமயகவுண்டன்பட்டி |
| 21 | நாகப்பட்டினம் | வைத்தீஸ்வரன்கோவில் |
| 22 | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி |
| 23 | திருநெல்வேலி | மணிமுத்தாறு |
| 24 | திருநெல்வேலி | மேலகரம் |
| 25 | திருநெல்வேலி | பண்பொழி |
| 26 | திருநெல்வேலி | அச்சன்புதூர் |
| 27 | திருநெல்வேலி | ஆய்குடி |
| 28 | திருநெல்வேலி | வடகரை கீழ்ப்பிடாகை |

மீதமுள்ள கருத்துருக்கள் ஒப்பந்தபுள்ளி நிலையில் உள்ளது.

கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ₹ 2.02 கோடி மதிப்பீட்டில் பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் பவுண்டேசன் (BMGF) என்ற தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில்

எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

### 4.6.3 தூய்மை இந்தியா இயக்கம்

தமிழகத்தை சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக மாற்றுவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சுகாதாரத்தினை மேம்படுத்தி, மக்களின் ஆற்றலையும், திறனையும் அதிகபடுத்திட துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு தூய்மை இந்தியா திட்டத்துடன் இணைந்து 2,26,907 புதிய தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடங்களை சுகாதாரமான கழிப்பிடங்களாக மாற்றி கட்டுதல் மற்றும் 13,041 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகியவைகள் பேரூராட்சிகளில், திட்ட இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டது. பணி முன்னேற்றம் கீழ்வருமாறு.

| வ. எண் | பணிகளின் விபரம் | மொத்த இலக்கீடு | முடிவுற்றவை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | தனிநபர் குடியிருப்பு கழிப்பிடம் கட்டுதல் | 226907 | 226907 | 100 |
| 2 | சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் | 7794 | 7794 | 100 |
| 3 | சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் (இருக்கைகள்) | 13041 | 11724 | 89 |

திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக அறிவிக்கை செய்திட மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திற்கு 528 பேரூராட்சிகளிலிருந்தும் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. அதில், இதுவரை 525 பேரூராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக அறிவிக்கை செய்யப்பட்டுவிட்டன. மீதமுள்ள 3 பேரூராட்சிகளையும் மத்திய அரசு தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### 4.6.4 தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு நிலையங்கள்

பேரூராட்சிகளில் பயனுள்ள தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும், திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லா நகரமாக மாற்றிடவும், சேகரமாகும் கழிவுகளை உயிரி கழிவுகள் மற்றும் மறுசுழற்சி கழிவுகளாக பிரித்து திறம்பட கையாளவும், தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம் 1382 பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டு விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர். மேலும் பரப்புரையாளர்களின் திறனை மேம்படுத்திட அனைத்து பரப்புரையாளர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி பேரூராட்சிகளின் இயக்ககம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 4.7 சாலைகள்

பேரூராட்சிகளில் பல்வேறு வகையிலான சாலைகள் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ.எண் | வகைப்பாடு | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 15536 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 5828 |
| 3 | சிமெண்ட் கற்சாலைகள் (Paver block) | 1119 |
| 4 | கருங்கல் ஜல்லி சாலை | 539 |
| 5 | செம்மண் சாலை | 230 |
| 6 | மண் சாலை | 2054 |
| | மொத்தம் | 25306 |

பேரூராட்சிகளில் 2011-12 முதல் 2018-19 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் கீழ் ₹2353.83 கோடி ஒதுக்கீட்டில் 6982 சாலைப் பணிகள் 7595 கி.மீ நீளத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 6685 கி.மீ நீளத்திற்கான 6427 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சிய 555 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.7.1 நபார்டு - தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) -ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)**

நபார்டு வங்கியால் சாலைகள், பாலங்கள் மற்றும் சுகாதார வளாகங்கள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணி முன்னேற்றம் பின்வருமாறு.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (₹ கோடியில்) | நீளம் (கி.மீ) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 | 2459 | 761.51 | 1922.21 | அனைத்து பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன. |
| 2 | 2017 - 2018 | 167 | 130.00 | 268.28 | 167 பணிகளில் 166 பணிகள் முடிவுற்று எஞ்சிய 1 பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | 2018-19 | 258 | 200.00 | 416.89 | 258 பணிகளில் 121 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. எஞ்சிய 137 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| மொத்தம் | | 2884 | 1091.51 | 2607.38 | |

### 4.7.2 தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

நகர்ப்புற சாலைகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம் 2011-12ஆம் ஆண்டிலிருந்து, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் முன்னேற்ற பணிகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (₹ கோடியில்) | நீளம் (கி.மீ) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2017-18 | 1771 | 469.16 | 1767.10 | அனைத்து பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன. |
| 2 | 2018-19 | 276 | 253.74 | 458.79 | 191 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 85 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| மொத்தம் | | 2047 | 722.90 | 2225.89 | |

### 4.8 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவுகளை முறையற்ற வகையில் கையாளுவதன் காரணமாக சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் பருவநிலை மாற்றத்திற்கு வழிவகுத்து மனித இனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, திடக்கழிவு மேலாண்மை 2016 விதிகளின்படி முறையாக கழிவுகளை கையாளுவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதோடு, மனித ஆரோக்கியத்தின் தரத்திற்கான அளவுகோலும் முன்னேற்றம் அடைகிறது. எனவே, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்படி உபவிதிகள் உருவாக்கப்பட்டு, முன்னுரிமை அளித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை உபவிதிகளில் பயனீட்டாளர் கட்டணம் மற்றும் அபராதத் தொகையினை உள்ளடக்கிய செயல்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், கழிவுகள் உருவாகும் இடத்திலேயே கழிவுகள் பிரித்தாளும் முறையினை செயல்படுத்தும் வகையில் அனைத்து பேரூராட்சிகளிலும் நெகிழி உள்ளிட்ட உலர் கழிவுகள் தனியாக சேகரிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திடக்கழிவு மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடைமுறையினால் வீடு வீடாக சென்று கழிவு சேகரிப்பதில் 90 சதவீதம், கழிவு உருவாகும் இடத்திலேயே கழிவுகள் பிரித்து எடுத்தல் 86 சதவிகிதம் இலக்கு எட்டப்பட்டுள்ளது.

528 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 2100 மெட்ரிக் டன் குப்பைகள் தினசரி உருவாகிறது. இவற்றில், மக்கும் குப்பைகள் 1032 மெட்ரிக் டன், மக்காத குப்பைகள் 850 மெட்ரிக் டன், வடிகால் மற்றும் இதர மண் கழிவுகள் 218 மெட்ரிக் டன் ஆகும். நாளொன்றுக்கு 5 மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக கழிவுகள் உருவாகும் 86 பேரூராட்சிகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தடையின்மை சான்று பெற்றுள்ளது.

12,086 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கழிவுகளை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும் மற்றும் 7006 துப்புரவு பணியாளர்கள், தெருக்களை சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு பேரூராட்சிகளில், திடக்கழிவு மேலாண்மை சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது.

### 4.8.1. வீடுகளிலேயே உரமாக்குதல்

பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் உருவாகும் கழிவுகளை குடியிருப்பாளர்களே பிரித்து உரமாக்கப்படுவதை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் நாளது வரை 10216 குடியிருப்புகளில் கழிவுகள் பிரிக்கப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஏனைய குடியிருப்புகளுக்கு உயர்த்திட பேரூராட்சிகள் மூலம் பல்வேறு பயிற்சிகள் மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் ஆர்வமுடைய குடியிருப்புவாசிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், வீடுகளில் உள்ள மாடியில் மாடித்தோட்டம் (Roof Top Garden) அமைப்பதற்கு

ஊக்குவிக்கும் விதமாக பேரூராட்சி மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.8.2 இயற்கை / மண்புழு உரமாக்குதல்

528 பேரூராட்சிகளிலும் சேகரிக்கப்பட்ட மக்கும் கழிவுகள், உயிரி உரம் மற்றும் பரவலாக்கப்பட்ட உரமாக்குதல் முறையிலும் இயற்கை உரமாக தயாரிக்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் 110 மெட்ரிக் டன் அளவிற்கு இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. மண்புழு உரம் தயாரிக்கும் பணி 249 பேரூராட்சிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் 17 மெட்ரிக் டன் அளவிற்கு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. உயிரி/ மண்புழு உரத்தினை விற்பதன் மூலம் பேரூராட்சிகளில் ஆண்டொன்றுக்கு சராசரியாக ₹ 40.34 லட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது.

### 4.8.3 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்

2013-14ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆண்டு வரை ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், பேரூராட்சிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல், உரமாக்குதல் மற்றும் பொது சுகாதார பணியாளர்கள், சுயஉதவி குழு மற்றும் பரப்புரையாளர்களுக்கு தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 4828 பணிகள் ₹330.02 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### 4.8.4 உயிரி எரிவாயு

உயிரி எரிவாயு என்பது காற்று புகாத கொள்கலன்களில் மக்கும் கழிவுகளையிட்டு நுண்ணுயிரிகளின் செயல்பாடுகளால் பக்குவபடுத்தப்பட்டு நிலையான படிமமாக மாற்றப்பட்டு, அதிலிருந்து மீத்தேன் என்ற உயிரி எரிவாயு உருவாகிறது. இந்த உயிரி எரிவாயு புதுப்பிக்கத்தக்க சக்தியாக மின்சாரம் தயாரிக்க பயன்படுகிறது. இதில் உருவாகும் திட படிமம் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இப்புதுமை திட்டமானது மகாபலிபுரம், சோளிங்கர், செங்கம், பெரியநாயக்கன்பாளையம் மற்றும் உத்தமபாளையம் ஆகிய 5 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உருவாக்கப்பட்ட ஆற்றலானது தெரு விளக்குகள் எரிவதற்கும், அங்கன்வாடி மையத்தின் சமையல் பயன்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. கீழ்க்கண்ட 11 பேரூராட்சிகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பேரூராட்சிகள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | பாப்பாரப்பட்டி | தர்மபுரி மாவட்டம் |
| 2 | கண்ணங்குறிச்சி | சேலம் மாவட்டம் |
| 3 | முசிறி | திருச்சி மாவட்டம் |
| 4 | சிறுகமணி, | திருச்சி மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 5 | புலியூர் | கரூர் மாவட்டம் |
| 6 | புஞ்சை தோட்டக்குறிச்சி | கரூர் மாவட்டம் |
| 7 | புஞ்சை புகளூர் | கரூர் மாவட்டம் |
| 8 | சோழவந்தான் | மதுரை மாவட்டம் |
| 9 | உத்தமபாளையம் | தேனி மாவட்டம் |
| 10 | பெரியநாயக்கன்பாளைய ம், | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 11 | சின்னாளப்பட்டி, | திண்டுக்கல் மாவட்டம் |

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உயிரி எரிவாயு, சுய உதவி குழுவினராலும், அங்கன்வாடி மையங்களிலும் சமையல் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகிறது. பெரியநாயக்கன்பாளையம் மற்றும் வத்தலகுண்டு ஆகிய பேரூராட்சிகளில் உயிரி எரிவாயுவிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த மின்சாரம் மயானம் மற்றும் குடிநீர் விநியோக பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

### 4.8.5 உயிரி அகழ்வு முறை

பேரூராட்சிகளில் மரபு சார்ந்த கழிவுகளை கணக்கெடுப்பு செய்து துவக்கமாக 25 பேரூராட்சிகளை தேர்ந்தெடுத்து உயிரி அகழ்வு முறையில் 2018-19-ல் ₹ 1630.00 இலட்சத்தில் தூய்மை இந்தியா இயக்கம் / சென்னை நதி மறு சீரமைப்பு அறக்கட்டளை மூலம் நிலத்தை மீட்டெடுத்தல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.9 சீர்மிகு வார்டு /பேரூராட்சி

ஒவ்வொரு பேரூராட்சியிலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் சிறப்பான செயல்பாடு, அடிப்படை வசதிகளின் கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், திட்ட செயல்பாடுகளில் பொது மக்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் இரு வார்டுகள், அப்பேரூராட்சியில் உள்ள இதர வார்டுகளுக்கு முன்மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த சீர்மிகு வார்டுகளின் சிறந்த செயல்பாடுகளினால், இதர வார்டுகளில் உள்ள மக்களும் ஊக்குவிக்கப்பட்டு அந்த வார்டுகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கும், அடிப்படை வசதிகளின் கட்டமைப்பிற்கும் தங்களின் பங்களிப்பினை அளிக்க முன்வருவார்கள்.

பொன்னம்பட்டி, உத்திரமேரூர் மற்றும் மதுக்கரை பேரூராட்சிகள் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டில் சீர்மிகு பேரூராட்சிகளாக கண்டறியப்பட்டுள்ளன. மேலும், வருங்காலங்களில் அதிக எண்ணிக்கையிலான பேரூராட்சிகளை சீர்மிகு பேரூராட்சிகளாக உருவாக்கிட செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## 4.10 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி/மூலதன மானிய நிதி

உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம் அமைத்தல், பேருந்து நிலையம் மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர் திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல், பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பணி முன்னேற்றம் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 | 805 | 327.30 | அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளன. |
| 2 | 2017-18 | 79 | 176.67 | 77 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 2 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 3 | 2018-19 | 104 | 105.66 | அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. |
| | மொத்தம் | 988 | 609.63 | |

## 4.11 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பணி முன்னேற்றம் பின் வருமாறு.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 | 603 | 125.74 | அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளன. |
| 2 | 2017-18 | 91 | 58.89 | 87 பணிகள் முடிக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 4 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. |
| 3 | 2018-19 | 79 | 35.87 | அனைத்துப்பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. |
| | **மொத்தம்** | **773** | **220.50** | |

## 4.12. பதினான்காவது மத்திய நிதி குழு மானியம்

பேரூராட்சிகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை பதினான்காவது நிதி குழு

மானியம் ஆண்டு தோறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். 2017-18 ஆம் ஆண்டில் அடிப்படை மானியம் முதல் தவணை தொகை ₹ 183.27 கோடி மற்றும் 2-ஆம் தவணையாக ₹ 208.55 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2018-19 ஆம் ஆண்டில் அடிப்படை மான்யத்தில் முதல் தவணைத் தொகை ₹226.64 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மானியத் தொகை குடிநீர் திட்ட பங்குத் தொகை, மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்துதல், குடிநீர் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகள், சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் மற்றும் பூங்கா புதுப்பித்தல் ஆகியவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 4.13 துணை கோள் நகரம்

திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப்பணிகள் ₹123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 80 சதவீதம் மத்திய அரசு மானியம், 10 சதவீதம் மாநில அரசு மற்றும் 10 சதவீதம் பேரூராட்சி பங்குத் தொகை ஆகும். சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் செயலாக்க முகமையாகவும், TUFIDCO நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்பாட்டில் உள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | பணிகளின் முன்னேற்ற நிலை |
|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள் | 4.44 | பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2. | ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் | 42.20 | பணிகள் செப்டம்பர் 2019க்குள் முடிக்கப்படும் |
| 3. | ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் | 77.11 | |
| | மொத்தம் | 123.75 | |

**4.14 அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் (நகர்ப்புறம்)**

குடிசை பகுதிகளிலுள்ள அனைவருக்கும் தரமான பாதுகாப்பான கான்கிரீட் வீடுகள் வழங்குவதன் மூலம் நகர்ப்புற பகுதிகளில் குடிசைகள் இல்லாத சூழலை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அம்மா அவர்களால் தொலைநோக்கு திட்டம் 2023ன் கீழ் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேரூராட்சி பகுதிகளிலுள்ள பொருளாதார ரீதியாக நலிவுற்ற ஏழை எளிய மக்கள் தாங்கள் வாழும் குடிசை / மண் வீடுகளை பசுமை வீடுகளாக மாற்ற பசுமை வீடுகள் திட்டம் வடிவமைக்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் (நகர்புறம்) பயனாளிகள் தாமாக வீடுகளை கட்டுதல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு தலா ₹ 2.10 இலட்சம் நிதியுதவியுடன் (மத்திய அரசு மானியம் ₹ 1.50 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம் ₹ 0.60 இலட்சம்) வீதம் நாளது தேதி வரை 1,43,971 தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு மத்திய கண்காணிப்பு மற்றும் ஒப்புதல் அளிக்கும் குழுவினால் ₹ 3023.39 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினை மாநில அளவிலான திட்ட முகமையாக கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் நாளது வரை 28,611 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 1,15,360 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திலிருந்து நாளது தேதி வரை விடுவிக்கப்பட்ட தொகை ₹ 1108.27 கோடி Geo-tagging பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

**4.15 தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM)**

தீன் தயாள் அந்யோதயா யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தினை பேரூராட்சிகளில் செயல்படுத்திடும் விதமாக 2017–2018ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் வீரவநல்லூர் பேரூராட்சியில் வீடற்ற நகர்ப்புற ஏழைகள் தங்குமிடமும், சிட்லபாக்கம், பொன்னேரி, நாட்றாம்பள்ளி, போளூர், பர்கூர், தேன்கனிக்கோட்டை மற்றும் ஊத்தங்கரை ஆகிய 7 பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனைகளில்

உள்நோயாளிகளுக்கான உதவியாளர்கள் தங்குவதற்கு சிறப்பு தங்குமிடங்களும் ஆகமொத்தம் 8 பணிகள் ₹ 5.31 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2018-19 ஆம் ஆண்டில், 27 பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுக்கான உதவியாளர்கள் தங்குவதற்கு சிறப்பு தங்குமிடங்களும் ஆகமொத்தம் 27 பணிகள் ₹ 8.29 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்புதல் பெறப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.16 தெரு விளக்குகள்

பேரூராட்சிகளில், 1725 உயர்கோபுர விளக்குகள், 1134 மெர்க்குரி விளக்குகள், 30,249 சோடியம் விளக்குகள், 2,39,512 குழல் விளக்குகள், 1,11,738 சி.எப்.எல் விளக்குகள் 2331 சோலார் விளக்குகள் மற்றும் 54,975 ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகள் (எல்.இ.டி) உள்ளிட்ட 4,41,664 தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல் மிகு மின்விளக்குகளாக (எல்.இ.டி) படிப்படியாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.17 பேரிடர் மேலாண்மை திட்டம்

அனைத்து பேரூராட்சிகளிலும் பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பருவ மழை தொடங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள், சிறுபாலங்கள் மற்றும் நீர்

நிலைகளுக்கு செல்லும் வாய்க்கால்கள் ஆகியவை தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்களும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். 31 மாவட்டங்களில் (சென்னை நீங்கலாக) 1300 பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கிய 48 மீட்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பாதிக்கப்படும் பகுதிகளில் எந்த நேரத்திலும் பணியாற்ற தயார் நிலையில் உள்ளனர்.

### 4.18 கஜா புயல்

"கஜா" புயலின் போது வீசிய அதிவேக காற்று மற்றும் கனமழையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராம்பட்டினம், அம்மாபேட்டை, மதுக்கூர், மேலதிருப்பூந்துருத்தி, ஒரத்தநாடு, பாபநாசம், பேராவூரணி, பெருமகளூர், சுவாமிமலை, வல்லம் ஆகிய 10 பேரூராட்சிகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், தலைஞாயிறு, திட்டச்சேரி, வேளாங்கண்ணி ஆகிய 4 பேரூராட்சிகளும், திருவாரூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை, நன்னிலம், நீடாமங்கலம் ஆகிய 3 பேரூராட்சிகளும், திருச்சி மாவட்டத்தில் கூத்தப்பார், பொன்னம்பட்டி ஆகிய 2 பேரூராட்சிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, அன்னவாசல், அரிமளம், இலுப்பூர், கீரமங்கலம், கீரனூர், கறம்பக்குடி, பொன்னமராவதி ஆகிய 8 பேரூராட்சிகளும்ஆக மொத்தம் 27 பேரூராட்சிகள் மிக அதிக அளவில் பாதிப்படைந்தன.

அதிவேக காற்று மற்றும் கனமழையால் பேரூராட்சி பகுதிகளிலுள்ள சாலைகள், வடிகால்கள், சிறுபாலங்கள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளில் பெரும் சேதம் ஏற்பட்டதை சரி செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

புயலினால் பாதிக்கப்பட்ட 27 பேரூராட்சிப் பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் பிற மாவட்டங்களிலிருந்து 1000க்கும் அதிகமான அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்தி, பாதிப்பு ஏற்பட்ட 72 மணி நேரத்திற்குள் இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொண்ட நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் பொது மக்களால் வெகுவாக பாராட்டப்பட்டது.

பேரூராட்சிப் பகுதிகளில் உட்கட்டமைப்பு பணிகளில் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைத்திட ஏதுவாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹5.00 கோடியை தற்காலிக மீட்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி கஜா புயலினால் பாதிக்கப்பட்ட 27 பேரூராட்சிகளுக்கும் விடுவிக்கப்பட்டு முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**4.19 சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் (Swadesh Dharshan)**

மத்திய அரசு நிதி உதவியுடன் சுற்றுலா மேம்பாட்டு (“ஸ்வதேஷ் தர்ஷன்) திட்டத்தின் கீழ் 13 பணிகள் கன்னியாகுமரி மற்றும் கணபதிபுரம் பேரூராட்சியில் ₹ 11.21 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 10 பணிகள்

முடிக்கப்பட்டன. எஞ்சிய 3 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.20 சென்னை நதி மறு சீரமைப்பு அறக்கட்டளை**

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்குட்பட்ட பகுதியில் செல்லும் அடையாறு நீர்நிலையில் மாசுபடுவதை தடுக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை, நாள்.12.07.2017-ன்படி குன்றத்தூர், பெருங்களத்தூர் மற்றும் திருநீர்மலை பேரூராட்சிகளுக்கு ₹ 41.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.21 புராதான நகர மேம்பாட்டு திட்டம் (HRIDAY)**

மத்திய அரசின் நிதி உதவியுடன் 2015 ஆம் ஆண்டு புரதான நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் ₹ 20.00 கோடி மதிப்பீட்டிலான விளம்பர பலகை, சாலை வசதி மற்றும் குடிநீர் வசதிகள் போன்ற 22 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 19 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.22 நெகிழி ஒழிப்பு**

சுற்றுச்சூழல் மாசடைவதற்கு மூலஆதாரமாக நெகிழிகள் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகளால் ஏற்படும்

கேடுகளிலிருந்து சுற்றுப்புறசூழலை பாதுகாக்கவும், மக்களின் மனப்பான்மை மற்றும் பழக்க வழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 05.06.2018 அன்று சட்டப் பேரவை விதி 110-ன் கீழ், தடிமன் பாகுபாடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகளை முற்றிலும் தடைசெய்வதற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண். 84, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, நாள். 25.06.2018ல், 01.01.2019 முதல் தடை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, அரசாணைக்கிணங்க, 528 பேரூராட்சிகளிலும் தடிமன் பாகுபடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழிகளை 01.01.2019 முதல் தடை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மாநில மற்றும் மண்டல அளவிலும் நெகிழிகளை திறம்பட ஒழிப்பது குறித்து பல்வேறு நிலைகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும், 528 பேரூராட்சிகளிலும் மொத்தமுள்ள 1382 பரப்புரையாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்குதல், வீடு வீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பேரூராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் தெரு நாடகங்கள், பொம்மலாட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டன. மேலும், 14 வகையான தடை

செய்யப்பட்ட நெகிழி பொருட்களின் விவரம் குறித்து பரந்த அளவில் விளம்பரப்படுத்தப்பட்டன.

பேரூராட்சி செயல் அலுவலர்களால், குடியிருப்புச் சங்கங்கள், வியாபார சங்கங்கள், உணவக உரிமையாளர்கள், திருமண மண்டபங்கள் மற்றும் வணிக நிறுவன உரிமையாளர்களுடன் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், நெகிழி உபயோகத் தடை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி கல்லூரிகளில் விவாதங்கள், பேரணிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன. பேரூராட்சி பணியாளர்கள், சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளி கல்லூரி மாணவர்களுடன் உறுதிமொழிகள் எடுக்கப்பட்டன.

அனைத்து பேரூராட்சிகளிலும் நெகிழி கழிவு மேலாண்மை உப விதிகள் இயற்றப்பட்டு அரசிதழிலும் வெளியிடப்பட்டது. அரசால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 306(28A), 308(A)-ஐ திருத்தம் செய்யப்பட்டு நெகிழி பயன்பாட்டு தடையினை மீறுபவர்களுக்கு அபராதம் நிர்ணயம் செய்து அரசிதழ் எண்.75, நாள் : 21.2.2019-ல் ஆணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் அனைத்து பேரூராட்சிகளிலும் உரிய நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகிறது.

பேரூராட்சிகளில் நெகிழி ஒழிப்பு குறித்த 2,40,764 எண்ணிக்கையிலான அறிவிப்புகள் பொது மக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு, 57.42 மெட்ரிக் டன் அளவில் தடைசெய்யப்பட்ட நெகிழிகள்

பறிமுதல் செய்யப்பட்டதோடு, அவற்றை பயன்படுத்தியவர்களிடமிருந்து ₹ 24.91 இலட்சம் அபராத தொகையும் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட முனைப்பான செயல்பாடுகளால் அனைத்து பேரூராட்சிகளும் “நெகிழிகளற்ற பேரூராட்சிகள்" என்ற இலக்கை நோக்கி வெற்றி நடைபோடுகின்றன.

**4.23 நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கு**

நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பு நாட்டின் ஒருமித்த நீடித்த நிலையான வளர்ச்சியினை எய்திட ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஒருமித்த நீடித்த நிலையான வளர்ச்சியினை 2030 ஆண்டிற்குள் எய்துவதற்கு முதல் முன்னுரிமை அளித்துள்ளது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை எய்துவதற்கு அரசாணை (நிலை) எண்.15, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு செயலாக்கத் துறை, நாள் 21.3.2017ன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலக்கு, கீழ்காணும் இனங்களை உள்ளடக்கியதாகும்.

1. அனைவருக்கும் சமச்சீரான மற்றும் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதாரம் அளித்தல்.
2. அனைவருக்கும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துதல்
3. திறந்தவெளியில் மலம் கழித்தலை ஒழித்தல்.

4. நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதற்கு முன் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்தல்

மேற்கண்ட இலக்குகளை அடைய பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. பாதுகாக்கப்பட்ட குடிநீரினை நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. சுகாதாரத்தினை பொறுத்தவரையில் 89 சதவீதம் தனிநபர் வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளது. மீதமுள்ள இடவசதி இல்லாத 11 சதவீத குடியிருப்புகளுக்கு சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்தி முழுமையாக கழிவறைகளை பயன்படுத்திட பரப்புரையாளர்கள் மூலம் தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

3. 528 பேரூராட்சிகளில், 525 பேரூராட்சிகளில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லா நகரமாக அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 பேரூராட்சிகளில் மத்திய அரசின் தரக்கட்டுபாட்டு அலுவலர்களால் ஆய்வு செய்யப்படவுள்ளது.

4. கழிவுநீரை சுத்திரிப்பு செய்து மறு உபயோகத்திற்கு பயன்படும் வகையில் தேவைப்படும் இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.24 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த பேரூராட்சிக்கான விருது

பேரூராட்சிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சிறந்த முதல் மூன்று பேரூராட்சிகளுக்கு முறையே ₹ 10.00 இலட்சம், ₹ 5.00 இலட்சம் மற்றும் ₹ 3.00 இலட்சம் பரிசுத் தொகை வழங்கிட 2012-13ஆம் ஆண்டு "மாண்புமிகு முதலமைச்சர் விருது" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டிற்கான முதல் மூன்று பரிசுகள் முறையே சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி மற்றும் தருமபுரி மாவட்டம் பாலகோடு பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2018 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, மேற்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசு தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கினார்.

## 4.25 தேசிய விருதுகள்

### 4.25.1 தேசிய நீர் ஆதார விருதுகள் 2018

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடி பேரூராட்சி மற்றும் மணல்மேடு பேரூராட்சி செயல்

அலுவலர்களுக்கு நீர்நிலைகள் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கு 25.02.2019 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய நீர் ஆதார மற்றும் கங்கை நதி புனரமைப்பு, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

### 4.25.2 மத்திய அரசின் விருதுகள்

2018ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் தூய்மையான நகரத்திற்கான சுவச் சர்வக்ஷன் விருது, 06.03.2019 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி அவர்களால் ஐந்து பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், ஈரோடு மாவட்டம் கூகலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் ஆகிய பேரூராட்சிகளுக்கு "வேகமாக வளர்ந்து வரும் நகரம்" என்ற தலைப்பின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், அகரம் பேரூராட்சிக்கு "தென் மண்டலத்தில் புதுமை மற்றும் சிறந்த செயல்பாட்டிற்காக" விருது வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம் மேலதிருப்பூந்துருத்தி பேரூராட்சிக்கு "திடக்கழிவு மேலாண்மையில் சிறந்த நகரம்" என்ற தலைப்பின் கீழ் விருது வழங்கப்பட்டது.

## 5. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சென்னை குடிநீர் வாரிய சட்டத்தின்படி, இவ்வாரியமானது, சென்னை பெருநகர் பகுதியின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று சேவைகளை செய்து வருகின்றது. இந்த சேவையினை, தற்போதுள்ள உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், தற்கால மற்றும் எதிர்காலத் தேவைக்கேற்ப உட்கட்டமைப்புகளை திட்டமிட்டு உருவாக்குதல், இயக்குதல் மற்றும் தொலைநோக்கு பார்வையோடு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்சமயம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தனது சேவைகளை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் 74.38 இலட்சம் மக்களுக்கும் (2011 கணக்கெடுப்பின் மக்கள் தொகையான 67.27 இலட்சத்தின் நீட்டிப்பு), மேலும் சில அருகாமையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் பெரு நுகர்வு தொழிற்சாலைகளுக்கும் தனது குடிநீர் வழங்கல் சேவையை வழங்கி வருகிறது.

## 5.1 சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

நில மேற்பரப்பு நீர் தேக்கங்கள், கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் ஆகிய நீர் ஆதாரங்கள் மூலம் சென்னை மாநகரின் குடிநீர் தேவையானது பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

### 5.1.1 நில மேற்பரப்பு நீர் ஆதாரங்கள்

சென்னைக்கு அருகாமையிலுள்ள பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்கள் 2004-ஆம் ஆண்டு முதல் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து வழங்கக்கூடிய, கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் முதன்மையான நில மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும்.

ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி, சென்னையின் குடிநீர் தேவைக்கு ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கனஅடி பெறப்பட வேண்டும்.

## சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்

| வ. எண் | நீர்த்தேக்கங்கள் | மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 1 | பூண்டி | 3,231 |
| 2 | செங்குன்றம் (புழல்) | 3,300 |
| 3 | செம்பரம்பாக்கம் | 3,645 |
| 4 | சோழவரம் | 1,081 |
| 5 | வீராணம் | 1,465 |
| மொத்தம் | | 12,722 |

## சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு

| வருடம் | மழையின் அளவு (மி.மீ) | | வித்தியாசம் (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| | இயல்பான அளவு (30 வருட சராசரி) | பெய்த அளவு | |
| 2012 | 1293.42 | 981.80 | -24.09 |
| 2013 | 1297.50 | 1064.87 | -17.93 |
| 2014 | 1286.21 | 1025.80 | -20.25 |
| 2015 | 1273.17 | 2155.23 | +69.28 |
| 2016 | 1308.05 | 837.00 | -36.03 |
| 2017 | 1305.82 | 1388.00 | +6.30 |
| 2018 | 1313.85 | 880.00 | - 33.01 |

### 5.1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

சென்னை மாநகரம் தனது நில மேற்பரப்பு நீர் சேகரிப்பிற்கு பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை பொய்க்கும்பொழுது நீர்த்தேக்கங்களுக்கு கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்படுவதனால், சென்னை நகரில் வசிக்கும் மக்களுக்கு வழங்கும் குடிநீரின் அளவு பாதிக்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய 2003-04 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்கு பார்வை கொண்டு, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) அறிவித்தார்கள். அதன்படி, அரசு முதலில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மீஞ்சூரில் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு நிலையத்தினை நெம்மேலியில் நிறுவி, இயக்கி வருவதன் மூலம், இந்நிலையங்கள் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

### 5.1.2.1 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் - மீஞ்சூர்

மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) ஜூலை 2010 முதல் இயங்கி வருவதன் மூலம் வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் உள்ள சுமார் 12 இலட்சம் மக்கள் பயன்பெறுகிறார்கள்.

### 5.1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் – நெம்மேலி

நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ₹ 805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 22.02.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 2017-18ஆம் ஆண்டில் இந்நிலையத்தின் சுத்திகரிப்பு திறன் உயர்த்தப்பட்டு, நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தென்சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு,

பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளிலுள்ள சுமார் 7 இலட்சம் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

2012-14, 2016-17, 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத நிலையில் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன், நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தன.

### 5.1.3 நிலத்தடி நீர்

தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நிலத்தடி நீராதாரங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 35 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் எடுக்கப்படுகின்றது.

### 5.1.4 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியம் கீழ்ப்பாக்கம், செங்குன்றம் (புழல்), செம்பரம்பாக்கம், சூரப்பட்டு மற்றும் வடக்குத்து ஆகிய ஐந்து இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களின் மூலம் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கி வருகிறது. தற்பொழுது இருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 1504 மில்லியன் லிட்டராகும்.

1978ல் வாரியம் துவங்கப்பட்ட பொழுது, பயன்பாட்டில் இருந்த குடிநீர் வழங்குதல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளன. இதன் விளைவாக 1978ல் இருந்த நுகர்வோரின் எண்ணிக்கையான 1,16,000 தற்பொழுது 7,37,776 ஆக உயர்ந்துள்ளது.

2018-19ஆம் ஆண்டில் 13,547 வீட்டு குடிநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டுள்ளன.

**5.2 குடிநீர் வழங்கல் - புதிய திட்டங்கள்**

சென்னை குடிநீர் வாரியமானது, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு, சிறப்பு கவனம் செலுத்தி குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு குடிநீர் வழங்கிட பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அதன்படி, திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர், மீனம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், நந்தம்பாக்கம், நொளம்பூர், காரம்பாக்கம் மற்றும் உள்ளகரம்- புழுதிவாக்கம் ஆகிய இணைந்த 13 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், ராமாபுரம், மணப்பாக்கம், முகலிவாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம்,

மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், உத்தண்டி மற்றும் நெற்குன்றம் (மீதமுள்ள பணிகள்) ஆகிய இணைந்த 27 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5.2.1 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி:**

சட்டப் பேரவையில், விதி எண் 110ன் கீழ், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் நெம்மேலியில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் அதன் திட்ட மதிப்பீடான ₹1259.38 கோடியை அம்ரூட் திட்டத்தின் கீழ் (AMRUT) மானியமாகவும் மற்றும் ஜெர்மானிய நிதி நிறுவனத்திடமிருந்து (KfW) கடனுதவியாகவும் பெற்று செயல்படுத்தப்பட உள்ளது,

இத்திட்டத்திற்கான பணி ஆணை 27.05.2019 அன்று வழங்கப்பட்டது. இந்நிலையத்திற்கு 27.06.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரால், தென்சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை,

சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்ப பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**5.2.2 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி:**

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், தென்சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று விதி எண் 110ன் கீழ் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) அக்டோபர் 2017ல் இத்திட்டத்திற்கு ₹6078.40 கோடி மதிப்பில் திருத்திய மதிப்பீடு அளித்துள்ளது. இத்தொகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ₹4267.70 கோடி மதிப்பிற்கு நிதியுதவி வழங்க இசைவளித்துள்ளது. மீதித் தொகை தமிழக அரசின் மூலம் தகுந்த நிதி ஆதாரம் பெற்று செயல்படுத்தப்படும். இந்நிலையத்தை செயல்படுத்த, கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையின்மை சான்றிதழை, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவமாற்றங்களுக்கான அமைச்சகம் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீர், சென்னை மற்றும் சுற்றியுள்ள தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கண்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டாங்கொளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 22.67 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**5.2.3 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதிக்கும் பணி:**

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ₹43.75 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜூலை 2020க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.2.4 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் குடிநீர் திட்டப் பணிகள்:**

புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் சிறப்பு கண்ணோட்டத்துடன்

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 2011-12ஆம் ஆண்டு ₹56.50 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் மற்றும் அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன.

2012-13ஆம் ஆண்டு ₹66.86 கோடி திட்ட மதிப்பீட்டில் நொளம்பூர், காரம்பாக்கம், நந்தம்பாக்கம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் போன்ற பகுதிகளில் பணிகள் முடிவுற்றன மற்றும் இராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்-துரைபாக்கம் சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் ₹125.16 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்பட உள்ளது.

சடையன்குப்பம், இடையான்சாவடி, கடப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், கொட்டிவாக்கம், பெருங்குடி, பாலவாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை மற்றும் முகலிவாக்கம் ஆகிய பகுதிகளில் ₹335.34 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று

வருகின்றன. அனைத்து பணிகளும் மார்ச் 2020 க்குள் முடிக்கப்படும்.

## 5.2.5 உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் (I&AF) கீழ் சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம்:

பிரதான சென்னை நகரில் 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான குடிநீர் குழாய்கள் 914 கிலோமீட்டர் நீளத்திற்கு கண்டறியப்பட்டுள்ளன. இக்குடிநீர் குழாய்கள் பல்வேறு திட்டத்தின் கீழ் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால், பழைய குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள் என 310 கி.மீ. நீளத்திற்கு ₹116.04 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 31.08.2019-ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.3 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னை மாநகரில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில்

வெளியேற்றுதல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் செய்து வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மொத்த சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

சென்னை மாநகரின் கழிவுநீர் கட்டமைப்பு, 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, 3529 கி.மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் கொண்டதாகும். இதன் மூலம் குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு 266 கழிவுநீரேற்றும் நிலையங்களின் மூலம் 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது மறு பயன்பாட்டிற்கும், மீதமுள்ள சுத்திகரிக்கப்பட்ட நீர் பாதுகாப்பாகவும் வெளியேற்றப்படுகிறது.

### 5.3.1 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

சென்னை குடிநீர் வாரியம், நெசப்பாக்கம் (3 அலகுகள்), கொடுங்கையூர் (3 அலகுகள்) கோயம்பேடு (3 அலகுகள்) மற்றும் பெருங்குடி (3 அலகுகள்) ஆகிய இடங்களில் மொத்தமாக நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைக் கொண்டுள்ளது.

### 5.3.2 கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

திருவொற்றியூர், சோழிங்கநல்லூர்-I மற்றும் சோழிங்கநல்லூர்-II ஆகிய இடங்களில் ₹126.01 கோடி திட்ட

மதிப்பீட்டில் மொத்தமாக நாளொன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.3.3 கழிவுநீரகற்றும் சேவையில் வளர்ந்து வரும் நுகர்வோர்கள்

1978ல் வாரியம் துவங்கப்பட்ட பொழுது, பயன்பாட்டில் இருந்த கழிவு நீரகற்றல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக 1978ல் இருந்த நுகர்வோரின் எண்ணிக்கையான 1,14,000 தற்பொழுது 9,72,833 ஆக உயர்ந்துள்ளது. 2018-19ஆம் ஆண்டில் 13,520 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

### 5.4 கழிவுநீர் அகற்றுதல் - புதிய திட்டங்கள்

சென்னை மாநகருக்கு இணையாக, சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத்தரம், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றினை மேம்படுத்த, பாதாள சாக்கடை திட்டங்களை சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள, சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், மீனம்பாக்கம், மதுரவாயல், நொளம்பூர், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு மற்றும் உள்ளகரம்-புழுதிவாக்கம் ஆகிய 10 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன.
- இணைந்த 15 பகுதிகளான திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், போரூர், பள்ளிக்கரணை, ராமாபுரம், பெருங்குடி, சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம் மற்றும் காரம்பாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், ஆகிய 3 பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத்திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இணைந்த 14 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஜல்லடம்பேட்டை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 5.4.1 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் கழிவு நீரகற்று பணிகள்:

இத்திட்டத்தின் கீழ், 2011-12 ஆம் ஆண்டில் ₹96.05 கோடி திட்ட மதிப்பீட்டில் கழிவு நீரேற்று நிலையங்களுக்கு உந்து குழாய் பதித்தல், பிரதான கழிவுநீரேற்று நிலையங்களுக்கு உந்து குழாய்களை பெரிதாக்குதல், முகப்பேரில் பாதாள சாக்கடை கட்டமைப்பில் நுழைவு வாயில்கள் அமைத்தல், நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய சாலையோர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல், தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல், கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல், 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. வேளச்சேரி பகுதியில் பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் அதன் தொடர்புப் பணிகள் ₹36.55 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

2012-13ஆம் ஆண்டு ₹15.20 கோடி திட்ட மதிப்பீட்டில் கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளன. மேலும், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் மற்றும் இராமாபுரம் ஆகிய பகுதிகளில் ₹245.55 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்ட பணிகள்

மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) மற்றும் நொளம்பூர் பகுதியில் ₹34.52 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. சூரப்பட்டு, புத்தகரம் மற்றும் கதிர்வேடு ஆகிய பகுதிகளில் ₹95.00 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. முகலிவாக்கம் பகுதிக்கு ₹77.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.4.2 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III - (TNUDP-III) திட்டப்பணிகள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-IIIன் கீழ் மாதவரம், அம்பத்தூர் (பகுதி -I) ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் ₹115.97 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளன. திருவொற்றியூர்-பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் ₹67.63 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் 31.08.2019-ல் முடிக்கப்பட உள்ளன.

### 5.4.3 தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள்

சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மேலும் ஒரு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம், விரிவாக்கம்

செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து பெறப்படும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ₹65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில்நுட்பத்துடன் மின்சாரம் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.4.4 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திர மயமாக்குதல்

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை ஒழித்திட, சென்னை மாநகரில் உள்ள கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பை சுத்தம் செய்யும் பணிகளை இயந்திரமயமாக்குதலுக்குத் தேவையான 123 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 245 தூர் வாரும் இயந்திரங்கள், 30 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 54 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு, கழிவு நீர் அமைப்பினை சிறந்த முறையில் பராமரித்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 5.4.5 கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள்

சென்னை குடிநீர் வாரியம், நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 9,72,833 கழிவுநீரகற்று இணைப்புள்ள 3529 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் சேகரிக்கும் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை நகரில் பெறப்படும்

கழிவுநீரை பாதுகாப்பான முறையில் அகற்ற, சென்னை குடிநீர் வாரியம் கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதை நடைமுறைபடுத்தியுள்ளது. பெறப்படும் புகார்களின் அடிப்படையில் கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது. மேற்கண்ட முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

### 5.4.6 நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் பணிகள்

2012-13 ஆம் ஆண்டில், சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை தடுக்க ₹300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் மற்றும் கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றவும் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக, நகர நீர் வழி பாதையில் மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகளுக்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து (I&A FUND) ₹ 150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 87 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும்,

பணிகள் காலதாமதமாக நடைபெற்றதால், ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, சமரச தீர்வு ஏற்பட்டவுடன், மீதமுள்ள பணிகளுக்காக மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது கட்டமாக, சென்னை நகரின் நீர் வழித் தடங்களில் மீதமுள்ள 158 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் 7 சிப்பங்களாக மேற்கொள்ள ₹163 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்கண்ட 7 சிப்பங்களில், 3 சிப்பங்களில் பணிகள் முடிவுற்றன. மீதம் உள்ள 4 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஏப்ரல் 2020ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.4.7 சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற் சாலைகளுக்கு மறுபயன்பாட்டிற்கு அளிக்கும் பணிகள்:**

கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை நாளொன்றுக்கு 28.53 மில்லியன் லிட்டர் அளவிற்கு சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் சென்னை உரத்தொழிற்சாலை லிமிடெட் ஆகிய தொழிற் சாலைகளுக்கு 1989-ஆம் ஆண்டு முதலும் மற்றும் மணலி பெட்ரோ இரசாயன பொருட்கள் தொழிற்சாலைக்கு 2005 ஆம் ஆண்டு முதலும் வழங்கி வருகிறது. இதன்மூலம் வாரியத்திற்கு 2018-19-ஆம் ஆண்டில் ₹19.39 கோடி வருமானம் கிடைத்துள்ளது.

### 5.4.7.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

இந்தியாவிலேயே சென்னை மாநகரம் கழிவுநீர் மறுசுழற்சியில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. கழிவுநீர் மறுசுழற்சி என்பது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, வேளாண்மை இயற்கைப் பாசனம், தொழில் துறை செயல்பாடுகள், கழிப்பறை சுத்திகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டம் போன்ற நன்மை பயக்கும் நோக்கங்களுக்காக பயன்படுத்துதலாகும். கழிவுநீர் மறுசுழற்சி செய்வதால் நிதி சேமிப்பு கூடுவதோடு நீர் வளமும் பெருகும். தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்கு பதிலாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி மூலம் பயன்படுத்தும் திட்டத்தினை மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள்.

#### 5.4.7.1.1 கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO) அமைத்தல்:

இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்கும் பொருட்டு, கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) அமைப்பதற்கு முடிவு

செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ₹486.21 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, இத்தொகையில் தமிழ்நாடு மேம்பாட்டு முதலீட்டு திட்டத்தின் (TNIPP) கீழ் ₹ 231.50 கோடியை தமிழக அரசின் மானியமாகவும், ₹208.82 கோடியை அம்ருத் திட்த்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பாகவும் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 31.07.2019ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**5.4.7.1.2 கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களுக்கு மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ₹330 கோடி மதிப்பீட்டில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்ட நிதியின் (TNSUDP) கீழ் ₹153.00 கோடியை கடனாகவும், ₹76.50 கோடி மானியமாகவும், மேலும் ₹118.67 கோடியை அம்ருத் (AMRUT) திட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பாகவும் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று

வருகின்றன. இப்பணிகள் 31.07.2019ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இவ்விரு நிலையங்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, சென்னை மாநகரில் மொத்தமாக உருவாகும் கழிவுநீரில் 20 சதவீதம் அளவிற்கு மறுசுழற்சி செய்யப்படும். இதன் மூலம் நாட்டிலேயே அதிகப்பட்சமாக கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் முதன்மை நகரங்களுள் ஒன்றாக சென்னை திகழும்.**

### 5.5 நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

சென்னை நகருக்கு தொடர்ந்து குடிநீர் கிடைக்க, நீர் மேலாண்மையில் நீடித்த செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காக நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தை மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் பெரு வளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி, அதன் மூலம் மழைநீரை சேமித்தல், மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்தல் மற்றும் மறுசுழற்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு பயன் படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன. நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்து, நீர்நிலைகளின் நீராதாரங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நோக்கமானது, நீர்மேலாண்மையில் நல்ல செயல்முறைகளை சோதனை முறையில் செயல்படுத்துவதன் வாயிலாக பொதுமக்களையும்

தங்களது இருப்பிடங்களில் இவற்றை செயல்படுத்த முன் மாதிரியாக அமையும்.

## 5.6 மழை நீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு என்பது மழைநீர் வீணாகுவதை தடுத்து, அதனை சேகரித்து உரிய முறையில் சேமித்தலாகும். அதன்படி, கட்டிட மேற்கூரைகள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியிலிருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்து பூமியில் ஆழமான குழி அமைத்தோ அல்லது குழாயை பதித்தோ அல்லது கிணற்றிற்கோ அனுப்பச் செய்து சேமித்தலாகும். இவ்வாறு சேமிக்கப்பட்ட நீர் தோட்டங்களுக்கான நீர் பாசனத்திற்கும், குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு அமைப்பினை புதிய மற்றும் பழைய கட்டிடங்களில் கட்டாயமாக செயல்படுத்துவதில், இந்தியாவிலுள்ள மாநிலங்களுள் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. சென்னை நகரின் வெற்றி சரிதம் நாடெங்கும் பிரதிபலித்து வருகிறது.

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணைப்படி, 2002-ஆம் ஆண்டு மழை நீர் சேகரிப்புத் திட்டம் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு, சென்னை மாநகர் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக உள்ளது. சென்னை குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை, ஒவ்வொரு ஆண்டும் பருவமழைகாலத்தில்

அதிகபட்ச பயன்பாட்டை பெற, சென்னை நகர மக்களிடையே கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியவை மூலம் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சீரான முறையில் பராமரிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீருக்கான புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த, அனைத்து கட்டடங்களுக்கும் கட்டிடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 8,05,200 கட்டிடங்களில், மொத்தம் 8,75,672 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2018-19 ஆம் ஆண்டில் 13,500 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் புதிய குடிநீர்/கழிவு நீர் இணைப்புகள் பெறும் போதும், இணைப்புகளை புதுப்பிக்கும் போதும் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம் பெறப்படும் நன்மைகள் நகரின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தேர்வு செய்யப்பட்ட 145 கண்காணிப்பு கிணறுகளின் மூலம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டமும், தரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீர் சேகரிப்பு திட்டம் நிறைவேற்றப்பட்டதனால், நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீர்தன்மை ஒவ்வொரு வருடமும், குறிப்பாக பருவமழை காலங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மூலம் நிலநீர் செறிவூட்டு திறன்

2.80 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

**5.7 வறட்சி நிவாரணப் பணிகள்**

2018-ஆம் ஆண்டு பருவ மழை பொய்த்ததின் காரணமாக 01.01.2019 முதல் 31.05.2019 வரை குடிநீர் விநியோகத்தை மறு சீரமைத்து நாளொன்றுக்கு சராசரியாக 550 மில்லியன் லிட்டராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 01.06.2019 முதல் 30.11.2019 வரை குடிநீர் விநியோகம் நாளொன்றுக்கு 525 மில்லியன் லிட்டராக மாற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் அவசர கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் புதிய IM-II பம்புகள் நிறுவுதல் மற்றும் புனரமைத்தல், புதிய குடிநீர் தொட்டிகள் நிறுவுதல் மற்றும் புனரமைத்தல், பொது குழாய்களை புனரமைத்தல், மின் மோட்டாருடன் கூடிய புதிய ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்தல் மற்றும் புதிய குடிநீர் நிரப்பும் அமைப்புகளை அமைத்தல் ஆகிய பணிகள் ₹121.90 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவுற்றன.

### 5.7.1 நீராதாரங்களை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழக அரசு புதிய குடிநீர் ஆதாரங்களை தொடர்ந்து கண்டறிந்து வருகிறது. 2017-ஆம் ஆண்டின் போது கல்குவாரிகள் மூலம் நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் அளவுக்கான புதிய நீராதாரம் கண்டறியப்பட்டது. தொடர்ந்து 2018-19-ஆம் ஆண்டில் கல்குவாரிகள், ஏரிகள் மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி உள்ளிட்டவற்றில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டருக்கான புதிய நீர் ஆதாரங்கள் கண்டறியப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன,

மேலும், எதிர் வரும் வடகிழக்கு பருவமழை காலமான நவம்பர் மாதம் வரை சீரான குடிநீர் வழங்க கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- ❖ சென்னைக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு, மேட்டூர் அணையிலிருந்து வீராணம் ஏரியின் முழுக் கொள்ளளவான 1465 மில்லியன் கன அடியானது நிரப்பப்பட்டு, தற்பொழுது நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ நெய்வேலி நீர் படுகையில் கூடுதலாக 9 புதிய ஆழ்துளை கிணறுகள் நிறுவும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கும் பணிகள் மற்றும்

நெய்வேலி சுரங்கம், பரவனாறு ஆற்றில் இருந்து நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்கு ₹6.67 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொண்ட பணிகள் முடிவுற்றன.

- ❖ பூண்டி, தாமரைப்பாக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயக் கிணறுகள் மூலம் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ❖ சிக்கராயபுரம் கல்குவாரியில் இருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்க ₹11 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டு, இக்குடிநீர் 2019 பிப்ரவரி மாதத்திலிருந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.
- ❖ எருமையூர் கல்குவாரியில் இருந்து நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் குடிநீர் ஆதாரம் பெற, ₹19.17 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.
- ❖ இரட்டைஏரி, பெரும்பாக்கம், அயனம்பாக்கம் ஆகிய ஏரிகளிலிருந்து நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து குடிநீர் வழங்க ₹ 53 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இரட்டை ஏரியில் பணிகள் முடிக்கப்பட்டு நீர் பெறுவதற்கான பணி துவங்கப்பட்டுள்ளது.

- பெருங்குடியில் நாள் ஒன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் உடைய மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ஒன்று ₹42.78 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நெசப்பாக்கத்தில் நாள் ஒன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் உடைய மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ஒன்று ₹41 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து கிடைக்கும் சுத்திகரிக்கப் பட்ட நீர் மறு சுழற்சி செய்வதன் மூலம் வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
- 850 குடிநீர் ஊர்திகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்த குடிநீர் ஊர்திகளை, 1080 குடிநீர் ஊர்திகளாக அதிகரித்து, நடைகளின் எண்ணிக்கை 11,360 ஆக அதிகரிக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லாத அதிகபட்ச அளவாகும்.
- குடிநீர் ஊர்திகள் செல்ல இயலாத குறுகலான தெருக்களுக்கு, குடிநீர் விநியோகம் செய்ய 121 இரண்டு அடுக்கு குடிநீர் தொட்டிகள் கொண்ட சிறிய ஊர்திகள் அனுப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

❖ மேலும், புதிய முயற்சியாக, குறுகிய தெருக்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் ஊர்திகளில் நீண்ட குழாய் (Hose Pipe) பொருத்தப்பட்டு, வீட்டின் அருகிலேயே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

❖ சென்னை குடிநீர் வாரியத்தில் முதல் முறையாக குறுகிய தெருக்களுக்கு எளிதில் செல்லும் வகையில் 2000 மற்றும் 3000 லிட்டர் கொள்ளவு கொண்ட சிறிய ஊர்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 112 எண்ணிக்கை 2000 லிட்டர் கொள்ளவு மற்றும் 136 எண்ணிக்கை 3000 லிட்டர் கொள்ளவு கொண்ட சிறிய ஊர்திகள் வாயிலாக, குறுகிய தெருக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

❖ மேலும், 10,907 எண்ணிக்கையாக இருந்த HDPE குடிநீர் தொட்டிகள், 12,129 எண்ணிக்கையாக அதிகரிக்கப்பட்டு தெருக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. **இது சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மற்றும் ஒரு சாதனையாகும்.**

**5.8 நிதி நிலைமை**

2018-19 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி, மொத்த வருவாய் செலவினமானது ₹1252.60 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் ₹1017.33 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ₹340.39 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம்

₹399.16 கோடியும், இதர வருவாய் ₹64.29 கோடியும் ஆகும். மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும், இயக்குதல் & பராமரிப்பு செலவு மற்றும் இதர செலவினங்களுக்காகவும், குடிநீர் வாரியத்திற்கு ₹213.50 கோடி நிதியினை (2018-19 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் படி) தமிழக அரசு மானியமாக வழங்கியது.

### 5.9 குறைத்தீர்ப்பு நடவடிக்கைகள்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோரின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

#### 5.9.1 24x7 புகார்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 24 மணி நேர குறைகள் களையும் பிரிவு வாரத்தின் எல்லா நாட்களிலும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ, நுகர்வோர் தங்களது புகார்களையும்/ குறைகளையும் பதிவு செய்யலாம். தற்போதுள்ள தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 10 லிருந்து 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி

இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு, உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

புகார் பிரிவில் சாராசரியாக ஒரு நாளைக்கு 320 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைநிவர்த்தி அமைப்பு பொதுமக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. தனியாக நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு ஒன்று தலைமை அலுவலத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

### 5.9.2 இணையதளம் மூலம் புகார்களைப் பெற்று தீர்வு காணுதல்

நுகர்வோர் தங்களின் புகார்களை சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதளமான www.chennaimetrowater.tn.nic.in மூலமாக பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களை, நிவர்த்தி செய்யும் பொருட்டு, சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைக்குள் தீர்வு காணப்படுகிறது.

### 5.9.3 “மெட்ரோ வாட்டர்” கைப்பேசி செயலி

நுகர்வோர்களின் பயன்பாட்டிற்காக ‘Metro Water’ என்ற புதிய கைப்பேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொது மக்கள்/ நுகர்வோர் தங்களது குடிநீர் வழங்குதல் சம்பந்தமான புகார்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உடனுக்குடன்

எந்த இடத்திலிருந்தும், எந்த நேரத்திலும் கைப்பேசி மூலமாக தெரிவிக்கும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து "Metro Water" என தட்டச்சு செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், பொது மக்கள் தங்கள் பெயர், கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களை ஒரு முறை பதிவு செய்வதன் மூலம், குடிநீர் புகார் சம்பந்தமாக படங்கள்/ புகைப் படங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் கைப்பேசி (Smart Mobile Phone) மூலமாகவே பதிவேற்றம் செய்து நிலைமையை தெரிவித்து கொள்ளலாம். குடிநீர் சம்பந்தப்பட்ட புகார்களை பதிவு செய்யும் போது, கேட்கப்படும் விவரங்களை அளிக்கும்படி நுகர்வோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பின்னர் ஒரு பிரத்தியேக புகார் பதிவு எண் உருவாக்கப்பட்டு, அந்த எண் குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். பொது மக்கள் தங்களது புகார் மீதான நடவடிக்கை விவரங்கள் மற்றும் அப்போதைய நிலை பற்றிய விவரங்களை செயலி மூலமாகவே அறிந்துகொள்ளலாம்.

### 5.9.4 திறந்தவெளி குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம் படுத்துவதற்காக, திறந்தவெளி குறைதீர்ப்பு கூட்டங்கள் (Open House Meetings) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை வாரியத்தின் மூத்த அதிகாரிகள் தலைமையில்

நடத்தப்படுகிறது. இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள்/குறைகள்/ஆலோசனைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**5.9.5 சென்னை சீர்மிகு நகரம் - குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் மேம்பாட்டு பணிகள்**

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சகம், இந்தியா முழுவதிலுமிருந்து 99 நகரங்களை சீர்மிகு நகரங்களாக மாற்றுவதற்காக தேர்ந்தெடுத்துள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில், சென்னை நகரமும் ஒன்றாகும். சென்னை சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், பகுதி சார்ந்த மேம்பாட்டு பணிகளுக்காக சென்னை நகரில் தியாகராயநகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான தேனாம்பேட்டை, ஆயிரம்விளக்கு, நந்தனம், மேற்கு மாம்பலம் மற்றும் CIT நகர் ஆகிய பகுதிகளில் உள்ள 425 தெருக்கள் தெரிவு செய்யப்பட்டு குடிநீர் வழங்கல் மேம்பாட்டு பணிகள் கீழ்கண்டவாறு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1. வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் (24X7) குடிநீர் வழங்குதல் மற்றும் 100 சதவிகிதம் குடிநீர் அளவுமானி பொருத்தி குடிநீர் வழங்கும் பணிகளை மேம்படுத்தல்.
2. தற்போதுள்ள குடிநீர் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

3. குடிநீரின் தரம், அழுத்தம் மற்றும் குடிநீர் அளவு முதலியவற்றை முற்றிலும் கணினிமயமாக்கி வலைதளம் மூலம் கண்காணித்து மேம்படுத்துதல்.

4. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு (TWIC) ₹4.72 கோடிக்கு ஆய்வு பணி மற்றும் திட்ட மதிப்பீடு செய்ய பணி ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன.

5. இப்பணிக்கு 5 ஆண்டுகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியை உள்ளடக்கி ₹107.10 கோடிக்கு திட்ட மதிப்பீடு அனுமதி அளிக்கப்பட்டு, ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, விரைவில் பணி ஆணை வழங்கப்பட உள்ளது.

இது தவிர, சென்னை மாநகரத்திலுள்ள அனைத்து 200 பணிமனைகளிலும் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்:

1) கணிப்பொறி தீர்வுகள் மற்றும் குடிமக்களின் சேவைகளை மேம்படுத்த ₹ 16 கோடியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்த நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளது.

2) சென்னை மாநகரத்திலுள்ள வணிக வளாகம் மற்றும் குடிநீர் அதிக அளவில் பயன்படுத்தும் வளாகங்களில் 12,708 AMR குடிநீர் அளவுமானிகள் பொருத்தும் பணிகளுக்காக ₹9.50 கோடி

மதிப்பீட்டிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

3) சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள குடிநீர் லாரிகளில் நீர் நிரப்பும் 41 நிலையங்களில் உள்ள 191 குடிநீர் நிரப்பும் அமைப்புகளில் கட்டுப்பாட்டு கருவி பொருத்தி, மிடுக்கு அட்டைகள் (SMART CARD) பயன்படுத்தி, வலைதளம் மூலம் கண்காணிக்கும் பணிக்காக ₹11.75 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளன.

### 5.9.6 லாரிகள் மூலம் கழிவுநீர் தொட்டியில் இருந்து கழிவுநீர் அகற்றும் பணி

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நுகர்வோர், தங்கள் வீடுகளில் உள்ள கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்ற சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் கழிவுநீர் அகற்றும் லாரியை குறைவான கட்டணத்தில் பதிவு செய்து கழிவுநீர் அகற்றப்படும் என்ற அறிவிப்பிற்கேற்ப, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் “Dial for Septic Tank Clearance” என்ற சிறப்பான திட்டத்தை தொடங்கியுள்ளது.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில், புதிதாக இணைக்கப்பட்ட திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர்,

பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள நுகர்வோர் www.chennaimetrowater.tn.nic.in என்ற இணைய தளத்திலோ அல்லது 044-4567 4567 என்ற சென்னைக் குடிநீர் வாரிய அழைப்பு மையத்தின் தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு ₹650/- கட்டணத்தில் தங்கள் வீட்டில் உள்ள கழிவுநீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்றிக் கொள்ள பதிவு செய்து கொள்ளலாம்.

இத்திட்டம் 15.05.2018 முதல் நடைமுறைக்கு வந்து பொது மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது.

## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை நீங்கலாக, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்கில் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள் ஒரு சட்டபூர்வ அமைப்பாக சட்டமன்றத்தின் சட்டவடிவின் மூலம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. நீர் வடிகால் வாரியதமிழ்நாடு குடிம் தொழில்நுட்பம், நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகளுடன், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை தலைவராகவும், மேலாண்மை இயக்குநரை தலைமை நிர்வாகியாகவும் கொண்டுள்ளது. வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களை தலைமையிடமாகக் கொண்டு, நான்கு தலைமைப் பொறியாளர்கள் உள்ளனர்.

### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்

அ. குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

ஆ. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்

இ. குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

ஈ. குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கான செயல்பாடுகள்

உ. பயிற்சி

## 6.2 குடிநீர் வழங்கல் திட்டம்

ஊரக குடியிருப்புகள் மற்றும் நகரங்களுக்கான குடிநீர் திட்டங்கள், ஊரக தனி மின்விசைத்திட்டம் மற்றும் ஒற்றை பயனாளியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு நகரக தனி குடிநீர் திட்டங்களாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட ஊரக குடியிருப்புகள் மற்றும் நகரங்களை பயனாளிகளாக கொண்ட குடிநீர் திட்டங்களுக்கு ஒரே நீராதாரத்தை கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டங்களாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

முடிக்கப்பட்ட குடிநீர் திட்டங்களின் பயனாளி தனிப்பட்ட உள்ளாட்சி அமைப்பாக இருப்பின் அத்திட்டத்தின் பராமரிப்பு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமே ஒப்படைக்கப்படுகிறதுபயனாளிகள் . ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளாக இருப்பின் அத்திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் பராமரிக்கின்றது.

தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்ட வழிகாட்டுதல்களின்படி, ஊரக குடிநீர் வழங்கலுக்கான அளவீடு ,நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவிலிருந்து 55 லிட்டராக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாட்டில் 01.04.2018 நிலவரப்படி 1,00,018 ஊரக குடியிருப்புகள் உள்ளன இவற்றில் .95,691 குடியிருப்புகள் முழு அளவான நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாகவும்,

4,327 குடியிருப்புகள், பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாகவும் உள்ளன.

2018-19 ஆம் ஆண்டில், 2310 பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள், முழு அளவு குடிநீர் வசதி பெறுவதற்கான திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில்1642 , குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டது .மீதமுள்ள குடியிருப்புகளுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

2019-20ஆம் ஆண்டில், 655 பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கு, செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் தனி மின்விசைத் திட்டங்கள் மூலம் முழு அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்க இலக்கிடப்பட்டுள்ளதுமேலும் ., 5 மாவட்டங்களிலுள்ள 455 (திறந்தவெளி மலம் கழித்தல் அற்றபகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கு ( மின்விசைத் திட்டங்களின் மூலமும் மற்றும் புதிய தனி கரூர் மாவட்டத்தில்உள்ள 282 பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கு 2 கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலமும் முழு அளவு குடிநீர் வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**6.2.1 ஊரக தனிமின் விசைத்திட்டங்கள்**

2018-19 ஆம் ஆண்டில், 8 மாவட்டங்களிலுள்ள 223 பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட, ₹31.04 கோடி மதிப்பீட்டிலான, 223 தனி மின்விசைத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில்

முன்னேற்றத்தில் உள்ளன .இத்திட்டங்கள் 2019-20ல் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில், தனி மின்விசைத் திட்டங்கள் மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர் திட்டம் மற்றும் மாநில அரசின் ஈடான பங்குத் தொகை ஆகிய நிதிகளின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன .

**6.2.2 நகர்ப்புற தனி குடிநீர் திட்டங்கள்**

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டப் பணிகளை நடைமுறைபடுத்தும் அமைப்பாக ,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுகிறது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், பராமரிப்பிற்காக சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

2 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் உள்ள 4.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 5 நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்கள் ₹142.29 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 41.43 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் 2018-19ஆம் நிதி ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன .

மேலும், 2 மாநகராட்சிகள், 9 நகராட்சிகளில் உள்ள 20.22 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹984.19 கோடி மதிப்பீட்டில், 11 நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளனஇத்திட்டங்கள் முடிவுறும் . குதருவாயில் நாளொன்றுக்236.86 மில்லியன் லிட்டர்

குடிநீர் வழங்கப்படும் .இது தவிர 2 நகராட்சிகளில் உள்ள 0.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தனி குடிநீர்த் திட்டங்கள் ₹103.97 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள், மாநில அரசின் குறைந்தபட்ச தேவை திட்டம் (MNP), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III (TNUDP-III), சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (UIDSSMT) , ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (Kfw), தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

**நகர்ப்புற தனி குடிநீர் திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு-:**

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2018 - 19 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள் | | | | |
| 1. | தேனி | தேனிஅல்லிநகரம் - நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 68.83 | 1.66 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2. | நீலகிரி | உதகமண்டலம் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 27.20 | 1.37 |
| 3. | திருச்சி | முசிறி பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 21.07 | 0.40 |
| 4. | தேனி | ஆண்டிப்பட்டி பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 14.59 | 0.56 |
| 5. | நீலகிரி | கோத்தகிரி பேரூராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 10.60 | 0.33 |
| | | **உப மொத்தம்** - I | 142.29 | 4.32 |
| **செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்** | | | | |
| 1. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 230.00 | 6.88 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2. | நாமக்கல் | நாமக்கல் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 185.24 | 1.84 |
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம் பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய 3 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 108.16 | 3.59 |
| 4. | நீலகிரி | குன்னூர் நகராட்சி, வெலிங்டன் இராணுவ நிலையம் மற்றும் இந்திய பாஸ்டர் தொழில் நுட்ப நிலையம் ஆகியவற்றிற்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 95.30 | 0.59 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 5. | தூத்துக்குடி | கோவில்பட்டி நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 81.82 | 1.40 |
| 6. | நாமக்கல் | திருச்செங்கோடு நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 81.22 | 1.50 |
| 7. | தேனி | போடிநாயக்கனூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 76.15 | 0.76 |
| 8. | விழுப்புரம் | திண்டிவனம் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 52.45 | 0.92 |
| 9. | திண்டுக்கல் | கொடைக்கானல் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 46.31 | 0.57 |

| வ.எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 10. | கரூர் | இனாம் கரூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 18.57 | 1.45 |
| 11. | மதுரை | ஆனையூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 8.97 | 0.72 |
| | | **உப மொத்தம்** - II | 984.19 | 20.22 |
| **ஒப்பந்த நிலையில் உள்ளவை** | | | | |
| 1. | மதுரை | உசிலம்பட்டி நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 73.03 | 0.64 |
| 2. | கன்னியாகுமரி | குழித்துறை நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 30.94 | 0.31 |
| | | **உப மொத்தம்** - III | 103.97 | 0.95 |
| | | **மொத்தம்** | 1230.45 | 25.49 |

**6.2.3 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் :**

2018 - 19 ஆம் ஆண்டில், 3 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 12.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் , ₹498.34 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 53.04 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளனமேலும் ., 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 33.38 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹1940.48 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளனஇத்திட்டங்கள் முடி .வுறும் தருவாயில், நாளொன்றுக்கு 233.14 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும் .இத்திட்டங்கள் குறைந்த பட்ச தேவை திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரக குடிநீர் திட்டம், மாநில அரசின் ஈடான பங்குத் தொகை, நகர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு, வைப்புத் தொகை, உலக வங்கி தமிழ்நாடு நீடித்த)நகர்ப்புற வளர்ச்சித்திட்டம்(, அம்ரூத், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம், மற்றும் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி உதவி ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கத்தில் உள்ளன.

**பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு-:**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **2018 - 19 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள்** | | | |
| 1. | சேலம் மாவட்டம், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்களைச் சார்ந்த 698 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சிகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 158.64 | 3.42 |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டம், குடிநீர்த்தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 105.70 | 3.39 |
| 3. | விருதுநகர் மாவட்டம், 755 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 234.00 | 5.98 |
| | **உப மொத்தம் -I** | 498.34 | 12.79 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | | | |
| 1. | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 543.20 | 6.20 |
| 2. | நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஆலம்பாளையம், படவீடு பேரூராட்சிகள் ,திருச்செங்கோடு, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 669 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள சங்ககிரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 399.46 | 6.61 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 3. | கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அன்னூர், மூப்பேரிபாளையம் பேரூராட்சிகள், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி பேரூராட்சி, சூலூர் விமானபடைதளம் மற்றும் பல்லடம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். | 241.00 | 4.20 |
| 4. | ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் | 224.00 | 5.47 |
| 5. | கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பத்மநாபபுரம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் அபிவிருத்தித் திட்டம். | 174.00 | 3.44 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 6. | திருச்சி மாவட்டம், முசிறி, தாத்தையங்கார்பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 140.22 | 1.68 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டம், அழகியபாண்டியபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 109.80 | 2.96 |
| 8. | திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த கீரனூர் மற்றும் நெய்காரப்பட்டி பேரூராட்சிகள், 253 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 108.80 | 2.82 |
| | **உபமொத்தம்** -II | 1940.48 | 33.38 |
| | **பெரு மொத்தம்** | 2438.82 | 46.17 |

### 6.2.4 இதர கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

2018-19 ஆம் ஆண்டில், 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 3.76 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹87.49 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 14.69 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன .

மேலும், 26 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 19.35 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில்₹ 748.57 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளனஇத்திட்டங்கள் முடிவுறும் தருவாயில் . நாளொன்றுக்கு93.49 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும் மேலும் . 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 1.68 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹ 110.01 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம் மற்றும் மாநில அரசின் இணைபங்கு, நகர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு, வைப்புத் தொகை ஆகிய நிதி உதவிகளுடன் செயலாக்கப்படுகின்றன.

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு -:

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2018 - 19 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள் | | | |
| 1. | தேனி மாவட்டம் வடுகபட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரகக் குடியிருப்புகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மேலும், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 45.70 | 1.10 |
| 2. | திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்வேடசந்தூர் ) (கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் | 8.96 | 0.95 |
| 3. | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த கண்டமனூர் மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம். | 5.50 | 0.14 |

| வஎண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4. | திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்)த் திட்டத்தின் கீழ்( | 4.11 | 0.47 |
| 5. | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்)த் திட்டத்தின் கீழ்( | 4.08 | 0.65 |
| 6. | கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 17 தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 69 வழியோர குடியிருப்புகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தின் கொடியம்பாளையம் குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 19.14 | 0.45 |
| | **உப மொத்தம்**-I | 87.49 | 3.76 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்** | | | |
| 1. | திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 155 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 99.24 | 2.94 |
| 2. | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டப்பிடாரம் (பகுதி), விளாத்திகுளம் மற்றும் (பகுதி) ஒன்றியங்களைச் (பகுதி) புதூர் சார்ந்த248 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் . | 94.04 | 1.50 |
| 3. | திருப்பூர் மாவட்டம் 5 பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 85.75 | 4.06 |

| வஎண் . | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4. | கரூர் மாவட்டம் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 274 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 81.41 | 0.86 |
| 5. | கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 52.75 | 0.91 |
| 6. | திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 46.55 | 2.00 |
| 7. | திருச்சி மாவட்டம் ,மருங்காபுரி மற்றும் வையம்பட்டி ஒன்றியங்களில் உள்ள 135 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்) .நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில்( | 46.32 | 0.33 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 8. | திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் (பகுதி) பாளையங்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 32.40 | 1.45 |
| 9. | திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங் களைச் சார்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் அபிவிருத்தித் திட்டம் | 31.32 | 1.85 |
| 10. | திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ரெட்டியார்பட்டி மற்றும் 63 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 28.71 | 0.57 |
| 11. | நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 25.85 | 0.32 |

| வஎண் . | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக் கள் தொகை (இலட் சத்தில்) |
|---|---|---|---|
| 12. | திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 53 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 20.34 | 0.23 |
| 13. | திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 17.74 | 0.20 |
| 14. | தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் மற்றும் (பகுதி) (பகுதி) தூத்துக்குடி ஒன்றியங்களைச் சார்ந்த90 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 17.17 | 0.58 |
| 15. | திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 84 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 12.77 | 0.42 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 16. | திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 38 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 11.55 | 0.19 |
| 17. | சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 51 ஊரகக் குடியிருப்புகளுக்கு பயன்பாட்டில் உள்ள 327 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்து தலைமை இடம், நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர்உந்து நிலையங்கள் மூலம் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 9.50 | 0.11 |
| 18. | ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், மாத்துர் ஊராட்சிக்குட்பட்ட 28 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 5.52 | 0.08 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 19. | தூத்துக்குடி மாவட்டம் சிப்காட் தொழிற்சாலை வளாகத்தைச் சுற்றியுள்ள 8 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 6.40 | 0.08 |
| 20. | ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம் பட்லூர் ஊராட்சிக்குட்பட்ட 30 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 6.21 | 0.11 |
| 21. | ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், மைலம்பாடி ஊராட்சியிலுள்ள 54 குடியிருப்புகளுக்கு கூட்டு குடிநீர்த் அபிவிருத்தித் திட்டம் | 5.25 | 0.09 |
| 22. | கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேவேரிபள்ளி மற்றும் 23 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 4.58 | 0.12 |
| 23. | திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 20 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 3.62 | 0.04 |

| வஎண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 24. | தேனி மாவட்டம், தேனி ஒன்றியத்தைச் சார்ந்த அரண்மனைப்புதூர் மற்றும் 4 இதர குடியிருப்புகளுக்கான குடிநீர்த் அபிவிருத்தித் திட்டம் | 1.67 | 0.15 |
| 25. | தேனி மாவட்டம், மஞ்சநாயக்கன் பட்டி ஊராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 0.98 | 0.05 |
| 26. | தேனி மாவட்டம், போடி ஒன்றியத்தைச் சார்ந்த கோடங்கிப்பட்டி மற்றும் 3 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த் அபிவிருத்தித் திட்டம் | 0.93 | 0.11 |
| | **உப மொத்தம்-II** | 748.57 | 19.35 |
| **ஒப்பந்த நிலையில் உள்ளவை** | | | |
| 1. | திருச்சி மாவட்டம் தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 49.95 | 0.64 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ₹)கோடியில்( | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2. | கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளபள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 31.82 | 0.41 |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 28.24 | 0.63 |
| | **உப மொத்தம்**- III | 110.01 | 1.68 |
| | **பெரு மொத்தம்** | 946.07 | 24.79 |

**6.2.5 அம்ரூத் திட்டங்கள்** :

அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் 3 கட்டங்களாக 2015-16, 2016-17 மற்றும் 2017-20 ஆகிய காலப் பிரிவில் எடுத்து செயல்படுத்தப்படுகின்றன.

மொத்தத்தில் 9 குடிநீர்த் திட்டங்கள் ₹2556.39 கோடி மதிப்பீட்டில் 89.92 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், 5 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹ 813.47 கோடி மதிப்பீட்டில் 9.82 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் செயலாக்கத்தில் உள்ளன .

இத்திட்டங்கள் மத்திய அரசின் அம்ரூத் திட்ட நிதி உதவி மற்றும் இதர நிதி ஆதாரங்களான மாநில அரசு, உள்ளாட்சி, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ,ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

இத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | அம்ரூத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஈரோடு மாநகராட்சி தனி குடிநீர் திட்டம் | 484.45 | 9.05 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவு படுத்தப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 395.41 | 9.22 |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | அம்ருத் தொகை (₹கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 3. | நாகர்கோவில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 223.44 | 3.90 |
| 4. | திருப்பூர் மாநகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 250.00 | 19.50 |
| 5. | வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 234.93 | 9.20 |
| 6. | இராஜபாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 180.05 | 2.15 |
| 7. | ஓசூர் மாநகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் -பகுதி) I( | 87.91 | 2.29 |
| 8. | வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டம் | 50.90 | 1.82 |
| 9. | புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன் விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் பில்லூர்-III | 649.30 | 32.79 |
| | **மொத்தம்** | **2556.39** | **89.92** |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | அம்ருத் தொகை (₹கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் | 442.00 | 5.17 |
| 2. | இராஜபாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 178.75 | 2.20 |
| 3. | ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 129.07 | 1.83 |
| 4. | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 40.33 | 0.43 |
| 5. | நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 23.32 | 0.19 |
| | **மொத்தம்** | **813.47** | **9.82** |

### 6.3 கூட்டுக் குடிநீர்த் திட்டம் -இயக்குதல் மற்றும் பராமரிப்பு

அரசு ஆணை .எண் (நிலை)84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.03.1994-ன்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன .

தற்போது, 9 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 347 பேரூராட்சிகள், 48,948 ஊரக குடியிருப்புகள் மற்றும் 541 தொழிற்சாலைகள் /நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் 4.23 கோடி மக்களை பயனாளிகளாக கொண்ட 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படுகின்றன .

மேற்கண்ட 556 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் சராசரியாக மார்ச் 2019 வரை நாளொன்றுக்கு 1,869 மில்லியன் லிட்டர் குடிநீர் உள்ளாட்சி அமைப்புகள் , தொழிற்சாலைகள் மற்றம் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது .அதன் விவரம் வருமாறு.

| வ.எண் . | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | வடிவமைக்கப்பட்ட படி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (டி.எல்.எம்) | தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு மார்ச் 2019 வரை (டி.எல்.எம்) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 9 | 267 | 212 |
| 2 | நகராட்சிகள் | 66 | 266 | 221 |
| 3 | பேரூராட்சிகள் | 347 | 358 | 309 |
| 4 | ஊரகக் குடியிருப்புகள் | 48,948 | 1,107 | 1,021 |
| 5 | தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் / வணிக நிறுவனங்கள் | 541 | 148 | 106 |
| | **மொத்தம்** | 49,911 | 2,146 | 1,869 (87 %( |

- நீண்ட காலத்திற்கு முன் செயல்படுத்தப்பட்டு வாரியப் பராமரிப்பிலுள்ள 99 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் அதன் முழு திறனுடன் மேலும் 15 ஆண்டுகளுக்கு செயல்பட வைக்கும் பொருட்டு ₹ 244.09 கோடி மதிப்பீட்டில் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் அனைத்தும் 2019-20 நிதியாண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு கோடை கால குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க 2017-18 ஆம் நிதியாண்டின் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 41 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 79 பணிகளை ₹7.24 கோடி ரூபாயில் செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டு, 50 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டின் கோடைகால குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க 2018-19 ஆம் நிதியாண்டின் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 118 கூட்டுக்குடிநீர் திட்டங்களில் 246 பணிகளை ₹20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டு, 111 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலமும், அணைகளில் உள்ள நீரின் அளவை பொருத்தும் ஆகஸ்ட் மாதம் 2019 வரை குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 1,800 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிட இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவைக் கண்காணிக்கவும் மற்றும் குடிநீர் வீணாவதை

குறைக்கவும் ₹27 கோடி மதிப்பீட்டில் தானியங்கி குடிநீர் அளவு மதிப்பிடும் கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

கோடைக் காலங்களில் மின் தடை ஏற்படும் பட்சத்தில் அதனைச் சமாளிக்க வாரியத்தில் 371 டீசல் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**6.4 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, சென்னையில், மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக் கூடம், மாவட்ட அளவிலான 31 குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 56 உப மாவட்ட ஆய்வகங்கள் அமைத்துள்ளது .இந்த ஆய்வகங்களில், ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்களில் இயற்பியல், இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள வசதிகள் உள்ளன . சென்னையில்உள்ள மாநில அளவிலான குடிநீர் தர பரிசோதனைக் கூடம் மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது .

2018-19ஆம் நிதியாண்டில் 30,000 குடிநீர் மாதிரிகள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில், மாநில அரசின் நிதி உதவியுடன், தர பரிசோதனை செய்யப்பட்டுள்ளனசென்னையில் உள்ள .

மாநில அளவிலான நீர்பரிசோதனைக் கூடம் National] [ibration LaboratoriesAccreditation Board for testing and Cal )NABL) அங்கீகாரம் பெற்றுள்ளது.

2019-20ஆம் நிதியாண்டில், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தில், குடிநீரின் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பின் கீழ் 5,100 நீர் மாதிரிகள் மாநில ஆய்வகம் மூலமும், 1.02 இலட்சம் நீர் மாதிரிகள் 31 மாவட்ட ஆய்வகங்கள் மூலமும் மற்றும் 1.68 இலட்சம் நீர் மாதிரிகள் 56 உப மாவட்ட ஆய்வகங்கள் மூலமும் பரிசோதனை செய்யப்பட உள்ளது.

2019-20 ஆம் நிதியாண்டில், 1,500 கள நீர் பரிசோதனைப் பெட்டிகள் )FTKதயாரிக்கப்பட்டு அதன் ( உபயோகம் குறித்து பள்ளி மாணவர்களிடையே வ ிழிப்புணர்வு முகாம் நடத்தப்பட உள்ளது.

### 6.5 நீர் புவியியல் செயல்பாடுகள்

அறிவியல் ரீதியாக நீராதாரம் கண்டறியும் பணிகளில், வாரியத்தால் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கு நீராதாரம் கண்டறியவும் மற்றும் நீடித்த நீர் நிலைத்தன்மைப் பிரிவின்கீழ் நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கான இடம் தேர்வு செய்யவும், தொலையுணர்வு நுட்பம் மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன .

மத்திய அரசின் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சக நிதி ஆதாரத்தின் மூலம் நிலத்தடி நீர்

வளங்களை குறிக்கும் வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து மாவட்டங்களில் உள்ள ஒன்றியங்களின் நிலத்தடி நீர்வளங்களை குறிக்கும் வரைபடங்கள் அச்சிடப்பட்டு, நிலத்தடி நீர்வளங்களை குறிக்கும் வரைபடங்கள் மென் நகல்) மற்றும் அச்சுநகல்மற்றும் குடிநீர் தரம் சார்ந்த ( ஆகியவை அனைத்து (மென் நகல்) வரைபடங்கள் துறைகளுக்கும் அவற்றின் களபயன்பாட்டிற்காக பகிர்ந்துகொள்ள தயாராக உள்ளன .எதிர்கால குடிநீர்த் தேவைக்கு குடிநீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்றில், மத்திய அரசின் நிதி உதவியுடன், ஒரு ஆய்வு மற்றும் வளர்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியத்தைச் சார்ந்த லாகம்பாளையம் கிராம ஊராட்சிக்கு) 24 x 7) குடிநீர் வழங்க, மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் பயன்பாட்டோடு இணைந்த மழைநீர் சேகரிப்பு திட்டத்தை முன்மாதிரி திட்டமாக செயல்படுத்த மாநில திட்டக்குழு) SPCஒப்புதல் ( ஒவ்வொரு இத்திட்டத்தின் மூலமாக .அளித்துள்ளது வீட்டிற்கும் குடிநீர் அளவீட்டுக்கருவியுடன் கூடிய வீட்டிணைப்புவழங்கப்படவுள்ளதுநிலைத்த . பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க உறுதி செய்யும்விதமாக கிராம மக்களுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை பயன்படுத்தி நிலையான நீர் பாதுகாப்பு உறுதி செய்யும் பொருட்டு₹ ,20 கோடி மதிப்பீட்டில், நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தை Water Security bleSustaina ) MissionSuWa SeM(, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளதுஇத்திட்டத்தினை செயல்படுத்த . தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை, ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்க, இத்திட்டத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகிய துறைகள் செயல்படுத்தும்.

குடிநீர் ஆதாரம், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, பள்ளி மற்றும் அங்கன்வாடி குடிநீர் திட்டம் ஆகிய குடிநீர் சொத்துக்களை IMIS இணையதளத்தில் புவி இடகுறிப்பு )Geo Tagging) ஏற்படுத்தும் பணி மார்ச் 2017 முதல் எடுத்துக்கொள்ளப்பட்டு ,31.03.2019 முடிய ,4,16,352 புள்ளிகளுக்கு புவி இடகுறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2019-20 ஆம் ஆண்டில் 63,093 புள்ளிகளுக்குஆதாரங்கள் ) மற்றும் வழங்கல் இடங்கள ்( புவி இடகுறிப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

### 6.6 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

அரசின் முடிவின்படி முன்னுரிமை மற்றும் தேவையின் அடிப்படையில் மாவட்ட தலைநகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்கள் அல்லாத பிற முக்கிய நகரங்களுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்துகிறது .

தமிழக அரசின் குறிக்கோளான அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் படிப்படியாக பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்ற 5 மாநகராட்சிகள், 115 நகராட்சிகள் மற்றும் 516 பேரூராட்சிகளுக்கு ₹ 20,820 கோடி மதிப்பீட்டில் 636 விரிவான திட்ட மதிப்பீடுகள் 2011-12ஆம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளன .

### 6.6.1 செயலாக்கத்தில் உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

2018-19 ஆம் ஆண்டில், போடிநாயக்கனூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான பாதாளசாக்கடைத் திட்டங்கள் 1.88 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹98.95 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 19.73 மில்லியன் லிட்டர் கழிவுநீர், மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், 21 பாதாளச்சாக்கடைத் திட்டங்கள், 18.40 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹1345.21 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 166.99 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில் பல்வேறு நிலைகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளன.

**திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு -:**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **2018 - 19 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள்** | | | |
| 1. | போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 71.10 | 0.95 |
| 2. | விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 27.85 | 0.93 |
| | **மொத்தம்** | 98.95 | 1.88 |
| | **செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்** | | |
| 1. | தூத்துக்குடி மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 85.00 | 3.00 |
| 2. | நாகர்கோவில் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 110.51 | 1.81 |
| 3. | சிவகங்கை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 31.30 | 0.82 |
| 4. | மேட்டூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 73.09 | 0.70 |
| 5. | அரக்கோணம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 95.52 | 1.09 |
| 6. | திருப்பத்தூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 104.01 | 1.15 |
| 7. | ராசிபுரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 55.42 | 0.69 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 8. | காரைக்குடி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 112.53 | 1.76 |
| 9. | சிதம்பரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 75.62 | 0.91 |
| 10. | சாத்தூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 37.66 | 0.40 |
| 11. | சத்தியமங்கலம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 54.26 | 0.54 |
| 12. | பொள்ளாச்சி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 109.62 | 1.08 |
| 13. | பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 34.67 | 0.46 |
| 14. | உளுந்தூர்பேட்டை பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 38.67 | 0.37 |
| 15. | பெருந்துறை பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 54.78 | 0.45 |
| 16. | மேட்டுப்பாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 91.70 | 0.84 |
| 17. | திருப்போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 42.00 | 0.63 |
| 18. | பொன்னேரி பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 54.78 | 0.83 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 19. | வல்லம் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 34.51 | 0.23 |
| 20. | மணச்சநல்லூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 30.11 | 0.43 |
| 21. | எஸ்பேரூராட்சி கண்ணனூர். பாதாள சாக்கடைத் திட்டம் | 19.45 | 0.21 |
| | மொத்தம் | 1345.21 | 18.40 |

### 6.6.2 நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் உள்ள விடுபட்ட இடங்களுக்கு ₹1442.92 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்ட மதிப்பீடுகள் ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 6.7 ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

### 6.7.1 குடிநீர்த் திட்டங்கள்

2018-19 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோயம்புத்தூர் மாநகராட்சி,

18 நகராட்சிகள், 66 பேரூராட்சிகள் மற்றும் 21,710 ஊரகக் குடியிருப்புகளில் 154.15 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹17,931.12 கோடி மதிப்பீட்டில் 42 குடிநீர் திட்டங்களுக்கு ஆய்வு பணிகள் மற்றும் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 42 திட்டங்களின் தற்போதைய நிலை பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது .

| வ. எண் | விபரம் | குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகள் | மக்கள் தொகை (இலட்சத்தில்) | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நிர்வாக ஒப்புதல் பெற்ற திட்டங்கள் | 14 | 1 மாநகராட்சி, 4 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 1421 ஊரகக் குடியிருப்புகள் | 35 | 1,464.51 |
| 2 | நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள் | 11 | 6 நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 2119 ஊரகக் குடியிருப்புகள் | 16 | 2,315.05 |
| 3 | ஆய்வு/ விரிவான திட்ட | 17 | 8 நகராட்சிகள், 47 பேரூராட்சிகள் | 102 | 14,151.56 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு தயாரிக்கும் பணியில் உள்ள திட்டங்கள் | | மற்றும் 18,170 ஊரகக் குடியிருப்புகள் | | |
| | மொத்தம் | 42 | 1 **மாநகராட்சி**, 18 நகராட்சிகள், 66 பேரூராட்சிகள் மற்றும் 21710 ஊரகக் குடியிருப்புகள் | 154 | 17,931.12 |

### 6.7.2 கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள்

தமிழக அரசின் அறிவிப்பின் அடிப்படையில் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு அனைத்து காலங்களிலும் நிரந்தரமாக குடிநீர் கிடைக்கும் வகையில், குடிநீர் வழங்கல் அளவினை உயர்த்தி வழங்குவதற்கு கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்க ,முன் சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குதிரைமொழியிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆலந்தலையிலும் நாளொன்றுக்கு தலா 60 மில்லியன் லிட்டர் திறனுடைய கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்க, ₹1,355 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது .இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 3.03 இலட்சம் மக்களும் தூத்துக்குடி மாவட்டத்தில் 6.88 இலட்சம் மக்களும் பயன்பெறுவர் .

இத்திட்டத்திற்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பு 2011-ன் படி அனுமதி பெறுவதற்கான கருத்துரு தேசிய கடலோர மண்டல மேலாண்மை ஆணைக்குழு / சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் /மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது இராமநாதபுரம் மாவட்டம் குதிரைமொழியில் அமைக்கப்படவுள்ள கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு திருத்திய விரிவான திட்டமதிப்பீடு ₹ 670 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, நிதியாதாரம் இறுதியாக்கத்தில் உள்ளது.

மேலும், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்திற்கு அருகில், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சிகள், மரக்காணம் மற்றும் விக்கிரவாண்டி பேரூராட்சிகள் மற்றும் விக்கிரவாண்டி, மைலம், மரக்காணம், வானூர் மற்றும் காணை ஒன்றியங்களைச் சார்ந்த ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 98 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைத்து குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 6.8 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் 2018-19ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, சென்னையில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில்

ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்கள் .

இதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம், சிறப்பு மையமாக செயல்பட உருவாக்கப்பட்டது . இந்த மையம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்கிறது .

- ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம் திறன்மேம்பாடு, வளர்ச்சி மற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்தும்பொருட்டு ஒரு பயிற்சி மையத்தை சென்னையிலுள்ள தலைமையிடத்திலும், மூன்று துணை பயிற்சி மையங்களை கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரையிலும் கொண்டுள்ளது .
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னையிலுள்ள முதன்மை நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), அண்ணா மேலாண்மை நிறுவனம் (Anna Institute of Management) ஆகியவற்றுடன் இணைந்து, தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை திறன்களை மேம்படுத்தவும் Water Gem, Sewer Gem மற்றும் STAAD-Pro போன்ற மென்பொருள்களை கையாளவும் பயிற்சி அளித்து வருகிறது.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தரும் பயிற்சிகள் தவிர, ஒடிசா மற்றும்

அருணாச்சலப்பிரதேச மாநிலங்களில் உள்ள பொது சுகாதார பொறியாளர்களுக்கு சிறப்பு தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 60,000 லிட்டர் வரையிலான சிறிய கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான முறைப்படுத்தப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மூலம் சரிபார்க்கப்பட்டு, இதனைப் பயன்படுத்தும் பொருட்டு கள பொறியாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- பல்வேறு கூறுகள் கொண்ட கசடு மேலாண்மை திட்டத்திற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 12 பேரூராட்சிகளின் கசடு மேலாண்மைத் திட்டங்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.
- பழைய குழாய் கொள்கை (Existing Pipe Policy) மறு ஆய்வு செய்யப்பட்டு, குழாய்கள் மற்றும் குழாய் பொருட்கள் தேர்ந்தெடுப்பதற்கான புது வழிகாட்டிற்கு (new guidelines) வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு கள பொறியாளர்களுக்கு இனி தயாரிக்கப்படும் விரிவான திட்ட மதிப்பீடுகளில் பயன்படுத்த அனுப்பப்பட்டுள்ளது.
- மின் மோட்டார்கள் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டி தயாரிப்பில் உள்ளது.

- Water Gem, Sewer Gem மற்றும் STAAD-Pro போன்ற மென்பொருட்கள் வாங்கப்பட்டு அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மூலம் களப் பொறியாளர்களுக்கு மேற்காணும் மென்பொருள் பயிற்சி அளிக்கப்பட்டது.
- தமிழ்நாடு பொதுப் பணித் துறையின் வேண்டுகோளுக்கிணங்க, கொசஸ்தலையார் ஆற்றில் மழைக்காலங்களில் கிடைக்கப்பெறும் உபரி நீரை திருவள்ளூர், வீரராகவ பெருமாள் கோயில் குளத்திற்கு கொண்டு செல்வதற்கான பிரதான குழாய் வடிவமைப்பு மற்றும் தோராய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது .
- சந்தையில் அவ்வப்பொழுது அறிமுகப்படுத்தப்படும் புதிய பொருட்கள் பற்றி, சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலம் செயல்முறை விளக்கங்கள் தருவதற்கும், புதிய விலைப் பட்டியலில் இப்பொருட்களை சேர்ப்பதற்கும் துணைபுரிகிறது.
- வேறுபட்ட திறன்கொண்ட மின் மோட்டார்கள் இணையாக பிரதான குழாய்களில் இயங்கும்போது, அவற்றின் செயல் திறனை அறிவதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

- "மின் ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தில் சமர்ப்பித்தல்" தொடர்பான பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- தேசிய மற்றும் பன்னாட்டு முதன்மை நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் நடத்தும் கருத்தரங்குகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான கூட்டங்களில் கலந்துகொள்ள இத்துறை அலுவலர்களை அனுப்பும் பணி மேற்கொள்ளப்படுகிறது .

## 6.9 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள தரக்கட்டுப்பாடு பரிசோதனைக் கூடங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு தரக்கட்டுப்பாடு பரிசோதனைக் கூடங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் திண்டிவனத்தில் செயல்பட்டு வருகின்றனஇவற்றில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் . உள்ளபரிசோதனைக் கூடங்கள் NABL சான்றிதழ் பெற்றவை ஆகும்.

இந்திய தரக்கட்டுப்பாடு அமைப்பின் )BIS( நடைமுறைகளின்படி, வழக்கமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களில் களமாதிரிகளின் ஒப்புமை மதிப்பீடு, அவற்றின் பயன்பாட்டிற்கு முன்னதாக மதிப்பீடு செய்யப்படுகிறது .பரிசோதனை கூடங்களில் உள்ள

சோதனை வசதிகள், பணி செயல்பாட்டின் போது தர உயர்வுக்கு பெரிதும் உதவுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அமைப்புகளிடமிருந்து பெறப்படும் மாதிரிகளும் இந்த கூடங்களில் பரிசோதிக்கப்படுகின்றன.

2018-19 ஆம் ஆண்டில் இந்த 4 பரிசோதனை கூடங்களிலும் ,6984 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

### 6.10 மேலாண்மை தகவல் அமைப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனைத்து திட்டங்கள், நிதி கணக்கியல் மற்றும் மனித வளம் சம்பந்தமான தகவல் பரிமாற்றங்களை மேலாண்மை செய்ய "TWADNEST" எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தியுள்ளது .

இவ்வொருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம், வாரியத்தின் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேம்படுத்தப்படுகிறது மேலும் அதன் உபயோகத்திற்கேற்ப . வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், திறன் உயர்த்தப்பட்டும் வருகிறது .

புதிய குடிநீர் மற்றும் பாதாளசாக்கடைத் திட்டங்களை வடிவமைக்க "Water gem & Sewer gemஎன்ற " .மென் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன

செயல்படுத்தப்படும் திட்டங்களின் தரத்தினை கண்காணிக்கவும் மற்றும் உறுதிசெய்யவும் திட்ட செயல்பாட்டு விவரங்கள் இணையத்தில் ஏற்றப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்களில் உந்தப்படும் குடிநீரின் அளவு தினமும் பதிவேற்றம் செய்யப்பட்டு உடனுக்குடன் இணையத்தின் வழி Web based) online( .கண்காணிக்கப்படுகின்றது

வாரியத்தில் நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்களின் பணி முன்னேற்றத்தினை, களப் பணியிடத்திலிருந்து உடனுக்குடன் தெரிவிக்கும் பொருட்டு )Android-Mobileகைத (ீதொலைபேசி பயன்பாட்டு இணையம் உருவாக்கப்பட்டு, செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுமேலும் ., தளவாடப் பொருள்களின் தரக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த இணையதள சேவையின் மூலமாக செயல்படும் உடன் நிகழ்வு )onlineஇணையம் (, மண்டல பரிசோதனை கூடங்களுடன் இணைக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது .

வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குடிநீர்த் திட்ட செயலாக்கத்தின் பணி முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஆய்வு செய்யும் பொருட்டு சென்னை தலைமை அலுவலகம் மற்றும் கோவை, மதுரை, தஞ்சாவூர், வேலூரில் உள்ள நான்கு தலைமைப் பொறியாளர்

அலுவலகங்கள் மற்றும் திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் தர்மபுரியில் உள்ள ஐந்து மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் காணொலி காட்சி மூலம் இணைக்கப்பட்டுள்ளனதமிழ்நாடு குடிநீர் . வடிகால் வாரியத்தின் அனைத்து நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சிறப்பான கண ்காணிப்பிற்கு இது உதவுகிறது.

## 7. தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL)

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை (TNUIFSL), தனியார் துறை பங்களிப்புடன், ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக நிறுவியது. இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ₹ 2.00 கோடி ஆகும். இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ₹1.00 கோடியில், தமிழக அரசின் பங்கு ₹49.00 லட்சம் ஆகும். இதன் மற்ற பங்குதாரர்கள், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்&எப்.எஸ்ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF), குடிநீர் & சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மற்றும் இதர அரசு மானிய நிதிகள், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் (TNUIFSL), நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதன் பிரதான பணிகளில், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும்.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனமானது, நகர்ப்புற உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு ஆதாயப் பங்குத் தொகையையும் இந்நிறுவனம் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

## 7.1 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) என்ற அமைப்பு, தமிழ்நாடு அரசால், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்&எப்.எஸ் ஆகிய தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்பட்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளர்வதற்கும் அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புற சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

நகர்ப்புற உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோளாகும்.

### 7.1.1 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

- நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதியளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புற வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, மற்றும் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் தொடர்ந்து நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம்(TNUITCL) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தை (TNUDF) நிர்வகித்து வருகிறது. இந்நிதியம் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ் நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ₹ 199.60 கோடியில், தமிழக அரசு ₹142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்.&எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ₹56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.

## 7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மூலம், ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புற கட்டமைப்பு நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் (நிலை II - பகுதி 1 மற்றும் பகுதி- 2), உலக வங்கியின் நிதி உதவியுடனான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP) மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP) ஆகிய மூன்று வெளி ஆதாரக்கடன்கள் நிர்வகிக்கப்படுகின்றன. மேற்சொன்ன வெளி ஆதாரக்கடன்களின் மொத்த நிதி ₹ 8,386.06 கோடியாகும். அவற்றின் விபரம் பின்வருமாறு:

(₹ கோடியில்)

| வ.எண் | உட்கூறுகள் | TNSUDP | SMIF-TN | | TNUFIP நிலை I | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | நிலை II பகுதி 1 | நிலை II பகுதி 2 | | |
| 1 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன் | 1,225.92 | 344.32 | 417.36 | 304.78 | 2,292.38 |

| வ.எண் | உட்கூறுகள் | TNSUDP | SMIF-TN நிலை II பகுதி 1 | SMIF-TN நிலை II பகுதி 2 | TNUFIP நிலை I | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம் | 1,225.92 | 263.02 | 396.94 | 646.73 | 2,532.61 |
| 3 | மாதிரி நகரங்களுக்கான மானியம் | 389.48 | 0 | 0 | 0 | 389.48 |
| 4 | தொழில்நுட்ப உதவி மானியம்/செயல் திறன்சார்ந்த ஊக்கத் தொகை | 344.80 | 0 | 22.39 | 148.02 | 515.21 |
| 5 | கூடுதல் நிர்வாக செலவு மற்றும் வரி | 0 | 0 | 0 | 36.33 | 36.33 |
| 6 | பங்கு பத்திரம், மற்ற மானியம் & நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | 644.88 | 0 | 40.70 | 1,934.47 | 2,620.05 |
| மொத்தம் | | 3,831.00 | 607.34 | 877.39 | 3,070.33 | 8,386.06 |

### 7.2.1 ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

KfW எனப்படும் ஜெர்மன் நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன், நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு, எனும் திட்டம் இரண்டு நிலைகளைக் கொண்டது (நிலை 1 & நிலை 2).

இத்திட்டம், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015-ல் நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி- 2) கொண்டது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி-1) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹ 607.34 கோடி (80 மில்லியன் யூரோ) ஆகும். இதன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012-ல் இருந்து ஜூன் 2018 வரை ஆகும். இத்திட்டத்தின் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2018 வரை நீட்டிக்கப்பட்டது. துணைத் திட்டங்களின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு திட்டத்தினை நிறைவேற்ற 2020ம் ஆண்டு ஜூன் வரை மேலும் நீட்டிக்க கோரப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி 2) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹ 877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக ₹814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ₹ 22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) வழங்கப்படும். மூலதனச் சந்தையிலிருந்து நகராட்சிகளுக்கு கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ₹ 40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014 முதல் டிசம்பர் 2019 வரை ஆகும்.

நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு திட்டத்தின், இரண்டாம் நிலை-பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்களின் கீழ், 35 துணை திட்டப் பணிகளுக்காக ₹1,421.62 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.2.2 உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)

உலக வங்கியின் நிதியுதவியுடன்செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP),

இத்திட்டத்தில் பங்குபெறும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நகர்ப்புற சேவைகளை நீடித்த நிதி நிலையுடன் மேம்படுத்தல் மற்றும் மேம்பட்ட நகர்ப்புற மேலாண்மை நடைமுறைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புறங்களில் முன்னோடியாக செயல்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹ 3,831.00 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்), இதில், உலக வங்கியின் நிதியுதவி ₹2,554 கோடி (400 மில்லியன் அமெரிக்க டாலர்). மாநில அரசின் பங்கு மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக ₹1,277 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச் 2022 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், 14 துணை திட்டப் பணிகளுக்காக ₹2,474.33 கோடி வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 7.2.3 ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ் நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP)

ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம் (TNUFIP) மூன்று நிலைகளை கொண்டது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழிலக தெருவழிச் சாலைகளில், முதன்மையாக குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் ஆகிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், மாநில மற்றும் உள்ளாட்சி

அமைப்புகளின் திறன், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

மூன்று நிலைகளை கொண்ட, இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹8,155.81 கோடி (1268.40 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ₹ 3,227.86 கோடி (502.00 மில்லியன் அமெரிக்க டாலர்).

இத்திட்டத்தின் முதல் நிலைக்கான திட்ட மொத்த மதிப்பீடு ₹3070.33 கோடி (477.50 மில்லியன் அமெரிக்க டாலர்). இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ₹1099.53 கோடி (171.00 மில்லியன் அமெரிக்க டாலர்). இதில் மாநில அரசின் பங்கு மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக ₹1,970.80 கோடி (306.50 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நவம்பர் 2018 முதல் டிசம்பர் 2023 வரை ஆகும். இத்திட்டத்தின் முதல் நிலையின் கீழ், 9 துணை திட்டப் பணிகளுக்காக ₹951.51 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக்கான திட்ட மதிப்பீடு ஆசிய மேம்பாட்டு வங்கியால் (ADB) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.3 குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)

தமிழ்நாடு அரசால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி

திரட்டவும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்
- கூட்டு நிதி அமைப்பின் கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்
- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்
- குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய / மாநில அரசின் மைய முகவராக செயல்படுதல்.

இது வரை ₹302.30 கோடி நிதியை வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திர வெளியீட்டின் மூலமாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பின்வருமாறு திரட்டியுள்ளது:

| வ. எண் | விவரங்கள் | ₹ கோடியில் |
|---|---|---|
| 1 | 9.20 சதவீதம் - 15 ஆண்டுகள் -மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 30.41 |
| 2 | 7.25 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப்பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 6.70 |
| 3 | 7.50 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு | 83.19 |

| வ. எண் | விவரங்கள் | ₹ கோடியில் |
|---|---|---|
| | நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | |
| 4 | 10.60 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 51.00 |
| 5 | 8.71 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2013 ஆம் ஆண்டு 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 51.00 |

| வ. எண் | விவரங்கள் | ₹ கோடியில் |
|---|---|---|
| 6 | 8.25 சதவீதம் - 12 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு<br>2017 ஆம் ஆண்டு 4 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு (நிலை 2 - பகுதி 2) வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 80.00 |
| மொத்தம் | | 302.30 |

## 7.4 சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டம் (Chennai Mega City Development Mission)

தமிழ்நாடு அரசு, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டங்களை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்க, பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) என்ற திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்திற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும், அரசின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின்

வாயிலாக வழங்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) இத்திட்டத்திற்கான மைய முகவராக செயல்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த 2011 முதல் 2018 வரை ₹ 2500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த, 2018-19 ஆண்டில் ₹500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இது வரை, ₹ 3,832.50 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு (2018-19 ஆண்டுக்கான ₹623.34 கோடி உட்பட) ஒப்பளிக்கப்பட்டு, மூலதன மானியமாக ₹2,992.10 கோடியும் (2018-19 ஆண்டுக்கான ₹500 கோடி உட்பட) தொழில்நுட்ப மானியமாக ₹7.90 கோடியும் முழுவதும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ₹2,135.67 கோடி பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் மற்றும் ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

## 8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

தமிழ்நாடு அரசு, நதிகள் மற்றும் நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த உறுதி கொண்டு அதற்கான சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. சென்னை பெருநகரத்திற்குட்பட்ட கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, பங்கிங்காம் கால்வாய், பிற சிறுகால்வாய்கள் மற்றும் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட நீர்நிலைகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதாக அறிவித்து அதற்கு தேவையான திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் சீரமைப்புப்பணிகளை கண்காணித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை அரசு அறிவுறுத்தியுள்ளது. மேற்கண்ட இலக்குகளை அடைய, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஒருங்கிணைந்த அணுகு முறையை பின்பற்றி அனைத்துசார் துறைகளின் பங்களிப்புடன் எண்ணற்ற சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 8.1 அடையாறு கழிமுகப்பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு

நகர்ப்புற ஈரநிலங்களை பாதுகாப்பதற்கான முன்னோடித் திட்டமாக, 358 ஏக்கர் பரப்பளவினை கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியது. இதன் முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள அடையாறு உப்பங்கழியினை

சீரமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. அடையாறு உப்பங்கழி பகுதியில் கழிவுநீர் விடப்பட்டதாலும், நகர திடக்கழிவுகள் மற்றும் கட்டடக்கழிவுகள் கொட்டப்பட்டதாலும், உப்பங்கழியின் நீர் மற்றும் நிலத்தடி நீர்மாசடைந்து, மீன்கள், ஊர்வனங்கள் மற்றும் பறவைகளின் வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டது. அடையாறு உப்பங்கழி முழுவதும் சீமைக்கருவேல மரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, கொசுக்கள் மற்றும் துர்நாற்றத்தால், அருகில் வசிப்பவர்கள் இப்பகுதியிலிருந்து விலகி இருந்தனர். அடையாறு உப்பங்கழி சீரமைப்பின் முக்கிய பணிகள் பின் வருமாறு : (i) கடல் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்புப்பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது (ii) உள்ளூர் தாவரங்களான உலர் வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளை சார்ந்த தாவரங்கள், சதுப்பு நிலத் தாவரங்கள் மற்றும் அதன் வகையைச் சார்ந்த தாவரங்கள், கோரைப் புற்கள் நடப்பட்டுள்ளன (iii) சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புப்படுத்தும் வகையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச் சூழல் கல்வித்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2019-ஆம் ஆண்டு ஜூன் 15–ஆம் தேதி வரை 1061 பள்ளிகளைச் சேர்ந்த 86,155 மாணவர்கள் மற்றும் 4353 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்கு பெற்று சுற்றுச்சூழல்

பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்து பயனடைந்துள்ளனர். ஆண்டுதோறும், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) தனது சமூகப் பொறுப்புணர்வு திட்ட (CSR) நிதியின் மூலம், அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உதவி வருகின்றது.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரினப் பாதுகாப்பு குறித்து, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட ஆர்வமுள்ள பொதுமக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவினை, 2014-ஆம் ஆண்டு ஜூலை முதல் 2019- ஆம் ஆண்டு ஜூன் வரை 12,422 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.

இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்த கண்காணிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் வழிக்காட்டு விதி முறைகளை ஒப்பிடுகையில், அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தரம் 'வகுப்பு D' பிரிவின் கீழ் உள்ளது. இப்பிரிவின் படி தண்ணீரில் மீன்கள் மற்றும் பிற உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளமையால், சீரமைப்பின் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

**அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் காணப்படும் பல்லுயிரிகள்:**

| விலங்குகள் | 2007-08 | 2009-10 | 2011-12 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மெல்லுடலிகள் | - | - | - | 6 | 6 | 6 | 8 | 8 | 8 |
| நண்டுகள் | - | - | 4 | 9 | 9 | 9 | 9 | 13 | 13 |
| <u>பூச்சிகள்</u><br>(அ) தும்பிகள் | - | - | 12 | 15 | 17 | 19 | 25 | 25 | 35 |
| (ஆ)பட்டாம் பூச்சிகள் | - | - | 51 | 55 | 56 | 60 | 73 | 73 | 80 |
| (இ)மற்ற பூச்சியினங்கள் | - | - | - | - | - | - | - | 52 | 55 |
| மீன்கள் | 14 | 27 | 27 | 10 | 10 | 6 | 10 | 10 | 12 |
| இருவாழ்விகள் | 7 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| ஊர்வன | 19 | 19 | 19 | 19 | 19 | 19 | 19 | 19 | 19 |
| பறவைகள் | 88 | 90 | 98 | 100 | 97 | 99 | 103 | 105 | 120 |
| பாலூட்டிகள் | 13 | 13 | 13 | 15 | 15 | 16 | 16 | 16 | 16 |
| மொத்தம் | 141 | 159 | 234 | 239 | 239 | 244 | 273 | 331 | 368 |

## 8.2 அடையாறு முகத்துவார சுற்றுச்சூழல் சீரமைப்பு

அடையாறு உப்பங்கழி (58 ஏக்கர்) சீரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து, அடையாறு உப்பங்கழி,

முகத்துவாரம், சிறுதீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள 300 ஏக்கர் பரப்பளவிலான பகுதிகளை சீரமைக்க இரண்டாம் கட்ட பணிகள் தொடங்கப்பட்டது. சீமைக் கருவேல மரங்கள், குப்பைகள் மற்றும் கட்டடக்கழிவுகள், கழிவுநீர் விடப்பட்டதினால் கழிமுகசுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததின் விளைவாக நீர்ப்பரப்பு பகுதி குறைந்து, கடல் நீர் ஓதத்தின் தொடர்பு குறைந்து மற்றும் பல்லுயிர் பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்தது.

இரண்டாம் கட்ட சுற்றுச்சூழல் சீரமைப்பின் மூலம், அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப்பகுதியின் கரைகள் திடப்படுத்தப்பட்டு, நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி, கடல் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர்பரப்பு பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் 57,000 சதுப்பு நிலத்தாவரங்கள் மற்றும் பிராந்திய நிலவாழ் கடற்கரைத் தாவரங்கள் 35,000 நடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட செயல்களால் கழிமுகப்பகுதியின் பல்லுயிர் பெருக்கம் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

## 8.3 **ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத்திட்டம்**:

கூவம் நதி, திருவள்ளூர் மாவட்டம் கூவம் ஏரியில் தொடங்கி சுமார் 70 கிலோ மீட்டர் பயணித்து புனிதஜார்ஜ் கோட்டையின் தென் பகுதியிலுள்ள நேப்பியர் பாலத்தின் கீழ்நோக்கி சென்று இறுதியாக வங்கக்கடலை

சென்றடைகிறது. பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ) கூவம் நதி பகுதிகளை சீரமைக்க, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச் சூழல் சீரமைப்புத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக்கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச் சூழல் சீரமைப்புத் திட்டப்பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. குறுகிய கால திட்டப்பணிகள் மூன்று ஆண்டுகள் நடைபெறும். சுமார் 60 துணைத்திட்டங்களைக் கொண்ட குறுகிய காலதிட்டப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ₹ 604.77 கோடிக்கான நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இச்சீரமைப்புப் பணிகள், தொடர்புடைய சார்துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. பொதுப்பணித் துறையினரால் எல்லைகளை வரையறை செய்து எல்லை கல் நடுதல், தூர் வாருதல் மற்றும் சிறு கால்வாய் அமைத்தல், கரைகளை பலப்படுத்துதல், பெருநகர சென்னை மாநகராட்சியால்

திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலி, மிதவை தடுப்பான் அமைத்தல் மற்றும் பூங்காக்கள் அமைத்தல், ஆற்றின் கரையோரங்களில் மிதிவண்டித் தடங்கள் மற்றும் நடைப்பாதைகள் ஏற்படுத்துதல்; நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் ஊரகவளர்ச்சி இயக்குநரகத்தால் அவரவர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு அகற்றல், ஆற்றின் கரையோரங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் நடவு செய்தல்; சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல், பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுத் திட்டங்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, கூவம் ஆற்றின் கரையோரங்களில் வசித்த 8166 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டு, மறுவாழ்வுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல்வேறு துணைத்திட்டங்களின் செயல்பாட்டினை கண்காணித்து வருகிறது. திட்டமேலாண்மை ஆலோசகரை நியமனம் செய்து, அதன் மூலம் சார் துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளும் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தவிர, சென்னை நதிகள் சீரமைப்பு

அறக்கட்டளை சமுதாயக்கல்வி பணிகளை மேற்கொண்டு வருகிறது. கூவம் ஆற்றின் கரைகளில் பல்வேறுவகையான உள்ளூர் தாவரங்கள் மற்றும் சதுப்புநிலத் தாவரங்களை நடவு செய்வதற்கான பணிகள் துவங்கவுள்ளன.

₹604.77 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளில், இதுவரை, இச்சீரமைப்புத் திட்டத்திற்காக ₹190.90 கோடி சார்துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 8.4 அடையாறு நதியின் சுற்றுச்சூழல் சீரமைப்பு தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை – மூன்றாம் கட்டம்

அடையாறு நதி, கூடுவாஞ்சேரி அருகே உள்ள ஆதனூர் ஏரியில் தொடங்கி, திருநீர்மலை அருகில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீர் கலந்து சுமார் 42 கிலோ மீட்டர் தூரம் காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கிறது. நகர மயமாதலின் விளைவாக நீண்டகாலமாக அடையாறு நதியின் சுற்றுச்சூழல் மிகவும் மாசடைந்துள்ளது. ஆகவே, அடையாறு நதியின் தொடக்கம் (ஆதனூர் ஏரி) முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க பெருந்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியகூறுகள், கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கானப் பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரையிலான 42 கிலோ மீட்டர் தூரத்தை சீரமைக்கும் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண். 72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந-1), நாள்:12.07.2017-ல் ₹555.46 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. அடையாறு நதி சீரமைப்பின் துணைத் திட்டங்கள் பொதுப்பணித்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், பேரூராட்சிகளின் இயக்ககம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஆகிய சார்துறைகளின் மூலம் பணிகள் தொடங்கப்பட்டு, வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இதுவரை, அடையாறு நதியின் கரையோரங்களில் வசித்த 4398 குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட்டு, மறுவாழ்வுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல்சார் ஒழுங்கு முறை மண்டலத்திற்கு உட்பட்டுள்ள 13 துணை திட்டங்களை (அதாவது நதி முகத்துவாரத்திலிருந்து சைதாப்பேட்டை பாலம் வரை- 7.5 கி.மீ) செயல்படுத்துவதற்காக மாவட்ட கடல் சார் மண்டல ஒழுங்கு முறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு கடல் சார் மண்டல ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியினை பெறுவதற்கு, விரைவு சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கை சமர்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 8.5 நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகள் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை:

தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக, கூவம், அடையாறு மற்றும் பக்கிங்காம் கால்வாய்களில் மாசுப்பாட்டினை தடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது:

1) கூவம் வடி நில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான விரிவான திட்டம்

2) அடையாறு வடி நில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான விரிவான திட்டம்

3) சென்னை பெருநகரப்பகுதிக்குட்பட்ட எண்ணூர் கழிமுகப்பகுதி முதல் முட்டுக்காடு உவர் நீர்பகுதி வரை பக்கிங்காம் கால்வாயில் கலக்கும் பிரதான நீரோடைகளை சீரமைப்பதற்கான விரிவான திட்டம்

சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட கழிமுகப் பகுதியை சீரமைப்பதற்கான கீழ்க்கண்ட விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன:

1) கோவளம் கழிமுகப்பகுதி சீரமைப்பிற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை.

2) எண்ணூர் கழிமுகப்பகுதி சீரமைப்பிற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவானதிட்டஅறிக்கை.

## 9. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், கம்பெனிகள் சட்டம் ன் கீழ்1956 -21.03.1990இல் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு துணை நிறுவனங்களின் உட்கட்டமைப்புகளின் ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி அளிப்பதில் **TUFIDCO** முக்கிய பங்கு வகிக்கிறது.

TUFIDCO சீர்மிகு நகரத்திட்டம் (Smart Cities Mission) மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation) ஆகிய திட்டங்களுக்கு திட்ட இயக்குநரகமாக செயல்படுகிறது மேலும் .TUFIDCO கீழ்காணும் திட்டங்களை செயல்படுத்தும் முகமையாகவும் செயல்படுகிறது.

1. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்-உட்கட்டமைப்பு மற்றும் நகர்ப்புற - ஆளுகைக்கான திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission – Urban Infrastructure and Governance),
2. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium Towns),

3. துணை நகரங்களில் நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Satellite Towns)

4. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (Metropolitan Infrastructure Development Fund)

5. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission) ஆகியவற்றினை செயல்படுத்தும் முகமையாகவும் உள்ளது.

TUFIDCO மூலதன மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Operation and Maintenance Gap Filling Fund) ஆகியவற்றிற்கு நிதி மேலாளராகவும் செயல்படுகிறது.

### 9.1. சீர்மிகு நகர திட்டம் (Smart Cities Mission)

மத்திய அரசு, இந்தியா முழுவதிலுமிருந்து 100 நகரங்களைஅவற்றின் அடிப்படை வசதிகள் மற்றும் சிறப்பு பயன்பாடுகளை தரம் உயர்த்த சீர்மிகு நகரங்களாக தேர்வு செய்தது .சீர்மிகு நகரத்திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதும் நகரத்தின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துவதும் நோக்கமாகும். மேலும் தற்போதைய மற்றும் எதிர்காலச் சந்ததிகளின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளை அடைய உறுதி செய்வதும் ஆகும் .தமிழகத்திலிருந்து நகரங்கள் 11சீர்மிகு நகரங்களாக மாற்ற தேர்வாகியுள்ளன . அவையாவன சென்னை, கோயம்புத்தூர், மதுரை,

தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு.

நகர அளவில் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம் சீர்மிகு நகர திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதுஇத்திட்டத்தின்கீழ் பல்வேறு . பணிகளை செயல்படுத்த ஒவ்வொரு நகரத்திற்கும் மத்திய அரசின் நித ி உதவியாக கோடியும் 500₹ மாநில அரசின் மானியமாக கோடியும் கிடைக்கப்பெறு 500 ₹கிறது .

சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட நகர வாரியான திட்டங்களின் மதிப்பீடு மற்றும் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு.

(₹ கோடியில்(

| வ . எண் | நகரத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | சென்னை | 40 | 947.30 |
| 2 | கோயம்புத்தூர் | 34 | 1178.20 |
| 3 | மதுரை | 14 | 1242.95 |
| 4 | தஞ்சாவூர் | 30 | 1001.29 |
| 5 | சேலம் | 39 | 941.30 |
| 6 | வேலூர் | 34 | 883.29 |
| 7 | திருப்பூர் | 26 | 1103.63 |
| 8 | தூத்துக்குடி | 44 | 1053.65 |
| 9 | திருநெல்வேலி | 31 | 1074.67 |
| 10 | திருச்சி | 19 | 1140.24 |
| 11 | ஈரோடு | 16 | 986.78 |
| | மொத்தம் | 327 | 11553.40 |

ஒப்புதல் அளிக்கப்பட்ட கோடி மதிப்பிலான 11553.40₹ 327 திட்டங்களில், கோடி மதிப்பிலான 132.70₹ 38 திட்டங்கள் முடிவுற்றுள்ளன, 4904₹ கோடி மதிப்பிலான திட்ட 178ங்கள் செயல்பாட்டில் உள்ளன எஞ் .சியுள்ள மற்ற திட்டங்கள் எல்லாம் பலகட்ட முன்னேற்ற நிலையில் உள்ளன .

**9.2 அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம்** )AMRUT(

வீடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நகரங்களுக்கு தேவையான வசதிகளை உருவாக்கி தரவும் மேலும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் குறிப்பாக ஏழை மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டமானது ஆம் நாள்25 ஜுன் (அம்ரூத்) .நகரங்களில் துவக்கப்பட்டது 500 அன்று 2015குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் கழிவுநீர் கசடு அகற்றும் மேலாண்மை, மழை நீர் வடிகால் வசதி, நகர போக்குவரத்து வசதிகள் அமைத்தல், பசுமை மற்றும் திறந்த வெளி பகுதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றை உறுதிசெய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின்கீழ் (அம்ரூத்) தமிழகத்திலிருந்துகீழ்க்கண்ட 15 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி 1உள்பட மொத்தம் 28 நகரங்கள் அம்ரூத் நகரங்களாக கண்டறியப்பட்டுள்ளன .

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | வ எண் | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 15 | ஆவடி மாநகராட்சி |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 16 | பல்லவபுரம் நகராட்சி |
| 3 | மதுரை மாநகராட்சி | 17 | தாம்பரம் பெருநகராட்சி |
| 4 | திருச்சி மாநகராட்சி | 18 | கடலூர் பெருநகராட்சி |
| 5 | சேலம் மாநகராட்சி | 19 | காஞ்சிபுரம் பெருநகராட்சி |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 20 | திருவண்ணாமலை நகராட்சி |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 21 | கும்பகோணம் நகராட்சி |
| 8 | தூத்துக்குடி மாநகராட்சி | 22 | இராஜபாளையம் நகராட்சி |
| 9 | தஞ்சாவூர் மாநகராட்சி | 23 | புதுக்கோட்டை நகராட்சி |
| 10 | ஈரோடு மாநகராட்சி | 24 | ஆம்பூர் நகராட்சி |
| 11 | வேலூர் மாநகராட்சி | 25 | காரைக்குடி நகராட்சி |
| 12 | திண்டுக்கல் மாநகராட்சி | 26 | நாகப்பட்டினம் நகராட்சி |
| 13 | நாகர்கோவில் மாநகராட்சி | 27 | இராமேஸ்வரம் நகராட்சி |
| 14 | ஓசூர் மாநகராட்சி | 28 | வேளாங்கன்னி பேரூராட்சி |

### 9.2.1 நிதிக்கூறு :

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான திட்ட மதிப்பின் பங்கு விகித விவரம் பின்வருமாறு.

| வ எண் | மக்கள் தொகை | மத்திய அரசின் பங்கு - மானியம் | மாநில அரசின் பங்கு - மானியம் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 33.33 % | 20 % | 46.67 % |
| 2 | 10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 50 % | 20 % | 30 % |
| 3 | பசுமை பகுதி அமைத்தல் அனைத்து ) அம்ரூத் (நகரங்கள் | 50 % | 20 % | 30 % |

அம்ரூத் திட்டத்தின் கீழ் கோடி 11441.32₹ 445 மதிப்பீட்டில்திட்டங்களுக்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளதால் தமிழகம் தனித்தன்மையோடு நாட்டிலேயே அதிக நிதி பெற்றுள்ள மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது .ஒப்பளிக்கப்பட்ட 445 305.89 ₹ திட்டங்களில்கோடி மதிப்பிலான 411 எஞ்சியுள்ள திட்டங்கள் நிறைவுற்றுள்ளன .எஞ்சியுள்ள 34திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளன.

மாநில ஆண்டு செயல் திட்டம் I(16-2015) , II (17-2016) மற்றும்III இன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட - (20-2017) .பின்வருமாறு திட்டங்களின் விவரம்

**மாநில ஆண்டு செயல் திட்டம் I(16-2015)**

| வ எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹)கோடியில்( |
|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சி குடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 50.90 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி - விரிவாக்கப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல் துடியலூ)ர், வெள்ளைக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி( | 395.41 |
| 3 | ஈரோடு மாநகராட்சி -குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல் | 484.45 |

| | | |
|---|---|---|
| 4 | ஓசூர் மாநகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 87.91 |
| 5 | நாகர்கோவில் மாநகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 223.44 |
| 6 | இராஜபாளையம் நகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 180.05 |
| 7 | தஞ்சாவூர் மாநகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 48.14 |
| 8 | திருப்பூர் மாநகராட்சிவிரிவ - ாக்க பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல் | 250.00 |
| 9 | வேலூர் மாநகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 234.93 |
| 10 | பெருநகர சென்னை மாநகராட்சி - நீராதாரத்தை மேம்படுத்துதல் வேளச்சேரி), ஆலந்தூர், உள்ளகரம் புழுதிவாக்கம், மேடவாக்கம், கோவிளம்பாக்கம், நன்மங்கலம் மற்றும் மூவரசம்பேட்டை ( | 954.00 |
| 11 | வேளாங்கன்னி பேரூராட்சி - பாதாளச்சாக்கடை திட்டம் | 23.32 |
| 12 | பெருநகர சென்னை மாநகராட்சி மாநகராட்சி– TTRO Plant MLD 45 - கொடுங்கையூர் | 223.91 |
| 13 | பல்லவபுரம் நகராட்சி விடுபட்ட - பகுதிகளுக்கு பாதாளச்சாக்கடை திட்டம் | 25.37 |
| 14 | 25 அம்ருத் நகரங்கள் – பூங்காக்கள் - 98 எண்ணிக்கை | 63.67 |
| | மொத்தம் | 3245.50 |

## மாநில ஆண்டு செயல் திட்டம் II(17-2016)

| வ எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹) கோடியில்( |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி 24 - Xகுடிநீர் 7 வழங்கல் | 506.04 |
| 2 | பெருநகர சென்னை மாநகராட்சி - இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் உத்தண்டி) வழங்கல் திட்டம், ஜல்லடம்பேட்டை, மாத்தூர், மடிப்பாக்கம் மற்றும் நீலாங்கரை ( | 184.11 |
| 3 | பெருநகர சென்னை மாநகராட்சி குடிநீர் - வழங்க நீராதாரத்தைமேம்படுத்துதல் | 125.89 |
| 4 | கும்பகோணம் நகராட்சிகுடிநீர் - வழங்குதலை மேம்படுத்துதல் | 40.50 |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி - பாதாளச்சாக்கடை திட்டம் | 442.00 |
| 6 | வேலூர் மாநகராட்சிபாதாளச்சாக்கடை - முதலாம் கட்டம் - திட்டம் | 248.26 |
| 7 | வேலூர் மாநகராட்சி பாதாளச்சாக்கடை - இரண்டாம் கட்டம் -திட்டம் | 343.69 |
| 8 | பெருநகர சென்னை மாநகராட்சி - மணலி) பாதாளச்சாக்கடை திட்டம், சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம்( | 223.00 |

| வ எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹) கோடியில்( |
|---|---|---|
| 9 | பெருநகர சென்னை மாநகராட்சி 45 - MLD TTRO Plant கோயம்பேடு | 394.00 |
| 10 | கும்பகோணம் நகராட்சி - விடுபட்ட - பாதாளச்சாக்கடை திட்டம் பகுதிகளுக்கு | 59.84 |
| 11 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - முதலாம் -பாதாளச்சாக்கடை திட்டம் கட்டம் | 344.00 |
| 12 | திருநெல்வேலி மாநகராட்சி - பாதாளச்சாக்கடை திட்டம் - இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு | 289.01 |
| 13 | திருநெல்வேலி மாநகராட்சி - - பாதாளச்சாக்கடை திட்டம் பகுதி இரண்டாம் கட்டம் | 381.86 |
| 14 | இராமேஸ்வரம் நகராட்சி - பாதாளச்சாக்கடை திட்டம் | 40.33 |
| 15 | 25 அம்ரூத் நகரங்கள் – பூங்காக்கள் - 157 எண்ணிக்கை | 77.95 |
| | மொத்தம் | 3700.48 |

## மாநில ஆண்டு செயல் திட்டம் III(20-2017)

| வ எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹) கோடியில்( |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சிபில் - லூர் 3 குடிநீர் வழுங்குதலை மேம்படுத்துதல் | 649.30 |
| 2 | மதுரை மாநகராட்சி - குடிநீர் வழுங்குதலை மேம்படுத்துதல் | 1020.00 |
| 3 | திருப்பூர் மாநகராட்சி - குடிநீர் வழுங்குதலை நீராதாரத்தை மேம்படுத்துதல் | 992.94 |
| 4 | பெருநகர சென்னை மாநகராட்சி - வழுங்குத குடிநீர்லை மேம்படுத்துதல் - வளசரவாக்கம் | 67.74 |
| 5 | ஆம்பூர் நகராட்சிபாதாளச்சாக்கடை - திட்டம் | 129.07 |
| 6 | இராஜபாளையம் நகராட்சி - பாதாளச்சாக்கடை திட்டம் | 178.75 |
| 7 | திருப்பூர் மாநகராட்சி பாதாளச்சாக்கடை - திட்டம் | 525.92 |
| 8 | பெருநகர சென்னை மாநகராட்சி - திட்டம் பாதாளச்சாக்கடை | 576.76 |
| 9 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - ஆம் கட்டம்2 பாதாளச்சாக்கடை திட்டம் | 264.12 |
| 10 | 25 அம்ரூத் நகரங்கள் 154 பூங்காக்கள் - எண்ணிக்கை | 90.85 |
| | மொத்தம் | 4495.45 |

## 9.3 பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி) MIDF(

TUFIDCOல் பெருநகர திட்டத்திலிருந்து உருவான சுழற்சி நிதியானது சென்னை பெருநகரப் பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என உருவாக்கப்பட்டுள்ளது .

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும் மிக குறைந்த வட்டி விகிதத்தில் 4342.65₹ திட்டங்களுக்கு 34கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, அதில் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் பங்களிப்பு தொகை .கோடியாகும் 1156.47₹ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களில் 34, திட்டங்கள் 27 ஏற்கனவே நிறைவுற்றுள்ளன திட்டங்கள் பல்வேறு 7 மீதமுள்ள . நிலையில் உள்ளன.

## 9.4 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் -சுழற்சி நிதி )UIDSSMT – Revolving Fund(

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து ஒரு சுழற்சி நிதி உருவாக்கப்பட்டது .இந்நிதியிலிருந்து பல்வேறு குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடைத் திட்டங்களுக்கு மாநகராட்சி /நகராட்சிகளுக்கு 19-2018 .ஒப்புதல் வழங்கப்பட்டது ஆம் ஆண்டில்அதன் விவரம் பின்வருமாறு

(₹கோடியில்(

| வ. எண் | பகுதி | நகராட்சிகள் / மாநகராட்சிகளின் எண்ணிக்கை | சுழற்சி நிதியில் ஒப்புதல் வழங்கப்பட்டவை |
|---|---|---|---|
| 1 | குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல் | 73 | 169.58 |
| 2 | பாதாளச்சாக்கடை திட்டம் | 26 | 193.22 |
| | மொத்தம் | 99 | 362.80 |

ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளது.

## 9.5 TUFIDCO உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் )TIFS(

அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் துணை நிறுவனங்களின் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நீண்டகால மற்றும் குறுகிய கால கடனுதவி அளிக்கவும் TUFIDCO உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் TUFIDCOவில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், TUFIDCO நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும்.

## 9.6 ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் )IUDM(

2011-12 முதல் வரையிலிருந்த (வருடம் 5) 17-2016 மாநில அரசின் முன்னோடி திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமானது எல்லா மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் அடிப்படை உட்கட்டமைப்புகளான சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கழிவுநீர் அகற்றல், மழைநீர் வடிகால், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல், பூங்காக்கள் போன்றவற்றை மேம்படுத்துவதே ஆகும் .

இத்திட்டத்தின்கீழ் கோடி மதிப்பீட்டில் 10773.22₹ ப / முழு நிதி) திட்டங்களுக்கு ஒப்புதல் 13445குதி நிதி( வழங்கப்பட்டுள்ளன .ஒப்புதல் வழங்கப்பட்ட 13445 திட்டங்களில், 13, 189எண்ணிக்கையிலான திட்டங்கள் முடிவடைந்துள்ளன, திட்டங்கள் பலகட்ட 256 .முன்னேற்ற நிலையில் உள்ளது

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாட்டின் அடிப்படையில், தமிழக அரசு 19-2018 முதல், வருடத்திற்கு கோடி வீதம் இத்திட்டத்தை 750 ₹ செயல்படுத்த மீண்டும்துவக்கியது .இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

( ₹கோடியில்(

| திட்டப்பணிகள் | திட்டங்கள் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு | பிற திட்டங்களின் நிதி உள்ளாட்சி / அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 28 | 423.86 | 422.71 | 1.15 |
| கழிவுநீரகற்றல் | 57 | 238.82 | 238.82 | |
| சாலைகள் | 414 | 427.99 | 349.29 | 78.71 |
| மழைநீர் வடிகால் | 41 | 103.79 | 101.06 | 2.73 |
| கசடு அகற்றல் மேலாண்மை | 11 | 31.17 | 31.17 | |
| மற்றவை | 2 | 7.90 | 7.90 | |
| மொத்தம் | 553 | 1,234 | 1,151 | 82.59 |

**குடிநீர் வழங்குதலை மேம்படுத்துதல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு தேவையான நிதிதேவை மற்றும் செயல்படுத்தப்படும் காலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு** 1,234₹ கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன . மற்றும் -2019-2018ம் ஆண்டின் நிதியின் கீழ் கோடி 750₹ ஒப்புதல் **அளிக்கப்பட்டுள்ளது**.

## 9.7 அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்கோடு தமிழக அரசு மூலதன மானிய நிதி )Capital Grant Fund(, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி )Operation and Maintenance Gap Filling Fundபோன்ற திட்டங்களை ( மேற்கண்ட திட்டங்களின் நிதியை கையாள .நிறுவியது TUFIDCO நிறுவனத்தை தமிழக அரசு நியமித்துள்ளது .

அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டதற்கிணங்க, மூலதன மானிய நிதியின் கீழ் )Capital Grant Fundகோடி 787.24 ₹ (யும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் )O&MGFFஆண்டில் 19-2018 கோடியும் 209.30 ₹ ( .விடுவிக்கப்பட்டது

## 10. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம், 1995ல் முன்னாள் தமிழ்நாடு அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் தொடங்கப்பட்டது. பின்னர், புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் மாநகராட்சி, அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் உட்கட்டமைப்பு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, இந்தியாவிலேயே முதன்முதலாக பொது, தனியார் பங்களிப்புடன் கூடிய குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் திட்டத்திற்காக ஒரு சிறப்பு நோக்க நிறுவனமாக 20.06.2002-ல் மறுசீரமைக்கப்பட்டது. இந்த சிறப்பு நோக்க நிறுவனத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் நிறுவனத்தின் (IL&FS) 54% பங்குகளுடனும், தமிழ்நாடு அரசின் 46% பங்குகளுடனும், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் (TWIC) உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம் சேர்ந்து, நாள் ஒன்றிற்கு 185 மில்லியன் லிட்டரை (MLD) மேலும் 250 MLD வரை உயர்த்தத்தக்க நீர் வழங்கு திட்டத்தை அமலாக்கம் செய்வதற்கான சலுகை ஒப்பந்தம் ஒன்றினை செய்துள்ளது. இத்திட்டத்தின் செலவு தொகை ₹1023 கோடியாகும். அதில் 15 தனியார் நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை ₹322.70 கோடியாகும் மற்றும் 19 வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் தொகுப்பின் மூலம் மூத்த கடனாக

பெறப்பட்ட தொகை ₹613.80 கோடியாகும் மற்றும் இரண்டாம் தர கடனாக அளித்த தொகை ₹86.50 கோடியாகும்.

திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் தேவையான சுமார் 38.957 MLD, 8 கிராம பஞ்சாயத்துக்கள் மற்றும் 5 பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 கிராமப்புற குடியிருப்புகளின் குடிநீர் தேவையான சுமார் 18.26 MLD இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இதைத் தவிர, இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு நூலாடை நிறுவனங்கள், சாயப்பட்டறை மற்றும் அதைச் சார்ந்த செயலாக்கத் தொழிற்சாலைகளின் தேவையையும் பூர்த்தி செய்கிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் 15 MLD திறனுள்ள பாதாள கழிவுநீர் அகற்றும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. தற்போது 15,246 பாதாள கழிவுநீர் இணைப்புகள் மூலம் பெறப்படும் சுமார் 8 MLD பாதாள கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. மேலும் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நகர்ப்புற ஏழைமக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள் 31 சுகாதார வளாகங்கள் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2005 அக்டோபர் முதல் திருப்பூர் மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கிக் கொண்டு வருகிறது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் 30.01.2011 நாளிட்ட ஆணைப்படி பல்வேறு சாய மற்றும் வெளுத்தல் பட்டறைகள்/தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும்,

வீணாகும் தண்ணீரை மறுசுழற்சி செய்து உபயோகம் செய்வதற்ககான பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கொண்டு வரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இதன் காரணமாக, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் தொழிலில் ஒரு சுணக்கத்தையும், அதன் காரணமாக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை காலத்துடன் செலுத்துவதில் சிரமத்தையும் சந்திக்க நேரிட்டது. இந்த நிதிப்பற்றாக்குறை 2011-12ல் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் சமாளிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி கடனுதவி செய்த நிதிநிறுவனங்கள் கடனை மறுபரிசீலனை செய்து, கடனுக்கான வட்டி விகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சமபங்குகளாக மாற்றியும், மேலும், அரசு கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 MLD வரை குடிநீரை பொது மக்களின் வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம் மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. மேலும் அரசு ₹150 கோடி சமபங்குகளை இத்திட்டத்தில் உள் முதலீடு செய்துள்ளது. தற்சமயம் இந்நிறுவனத்தின் மூலம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 56 மில்லியன் லிட்டர் குடிநீரை திருப்பூர் மாநகராட்சிக்கும் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு 9 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் வணிக ரீதியாக மேலும் வலுப்பெற தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு

வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் நீர்விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன் பலனாக இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி பஞ்சாயத்து ஒன்றிய பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துக்களைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோணவாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம்பாளையம், செங்கப்பள்ளி, சர்கார்பெரியபாளையம், அக்ரஹாரப் பெரியபாளையம் ஆகிய இடங்களில் இருந்து குடிநீர் வழங்க திட்டப்பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் 9 MLD குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 65 MLD குடிநீர் கூடுதலாக திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் சுற்றுப்புற வழியோர கிராமங்களின் தேவைகளுக்காக இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், 131 MLD வீட்டு உபயோகத்திற்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகம் செய்யப்படும் 40 MLD தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

2015-2016 ஆண்டு முதல் இந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. தமிழக அரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி மற்றும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளால் நாள் ஒன்றிற்கு 65 மில்லியன் லிட்டர் தண்ணீரை கூடுதலாக வாங்குவது, நிறுவனத்தின் சேவை பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், இந்நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. இதனால், இந்நிறுவனமானது திருப்பூர் மாவட்டம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்து தனது சேவையை தொடர்ந்து செய்து வருகிறது. மேலும் தமிழக அரசின் மேற்கண்ட உதவிகளின் பலனாக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் தனது மூத்த கடனாளர்களின் ஒரு வருடக் கடன் தவணைகளை முன்கூட்டியே செலுத்த ஏதுவாகியது.

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் உதவி செய்துள்ளது. இந்த திட்ட அறிக்கை "அம்ருத்" திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசு தனது புதிய குடிநீர் திட்டத்திற்கான "கட்டுமானம், மேலாண்மை மற்றும் மேற்பார்வை" ஆலோசகராக புதிய

திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தை நியமித்து அனுமதி வழங்கியுள்ளது.

IL&FS குழுமத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக ஒரு புதிய இயக்குநர்கள் கொண்ட குழுவை மத்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைத்துள்ளது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளுக்கு இதனால் எந்தவித பாதகமான சூழ்நிலையும் ஏற்படவில்லை. மேலும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் நிதி மற்றும் நிர்வாகத்தை தனது சொந்த வளங்களின் மூலம் நடத்திக் கொண்டு இருப்பதால், "பசுமை" தரவரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் சலுகை ஒப்பந்தத்தின் கீழ் தனது கடமைகளையும், திருப்பூர் மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கான சேவைகளையும் தொடர்ந்து செய்து வருகிறது.

## 11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு அரசு மற்றும் உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை (IL&FS) நிறுவனமும் இணைந்து நிறுவனச் சட்டம் 1956ன் கீழ் ஒரு தனிப்பட்ட நோக்கம் கொண்ட நிறுவனமாக தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனமானது, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளை உள்ளடக்கிய புதிய திருப்பூர் குடிநீர் திட்டத்தினை பொது, தனியார் பங்களிப்புடன் (PPP) மேம்படுத்துவதற்காக துவக்கப்பட்டது. நகர்ப்புற குடிநீர் மற்றும் கழிவுநீர் நடைமுறைகள், மறுசுழற்சி செய்தல், கடல் நீரை குடிநீராக்குதல், தொழிற்சாலை கழிவுப்பொருள் மேலாண்மை ஆகியவற்றில் இந்நிறுவனம் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன் திட்டங்களை வரைவு செய்வது முதல் நடைமுறைப்படுத்துவது வரை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் செலவுகளை குறைக்கும் வகையில் வசதிகள் செய்து தருகிறது.

"புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்' (NTADCL), தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் (TWIC), உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் 28.72 விழுக்காடு மூலதனப் பங்களிப்பு செய்துள்ளது.

இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளில் தொழிற்சாலை கழிவுநீர் மேலாண்மை மற்றும் நகர்ப்புற குடிநீர் மேலாண்மை ஆகியவற்றில் முன்னணி இடத்தை அடைந்துள்ளது. தனித்துவமிக்க திரவ வெளியேற்றமில்லா

தொழில் நுட்பம் (ZLD) மற்றும் உப்பு நீர் மறு உபயோக தொழில் நுட்பம் ஆகியவற்றில் இந்நிறுவனம் நிபுணத்துவத்தை வளர்த்துக் கொண்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் காடையம்பட்டி, ஸ்ரீ பவானி, பெருந்துறை சிப்காட் ஆகிய இடங்களிலும், நாமக்கல் மாவட்டம், பள்ளி பாளையம் மற்றும் குமாரபாளையத்தில் பசுமை காவேரி சுற்றுச்சூழல் நிறுவனம் ஆகிய இடங்களில் கைத்தறி பூங்காக்களை திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்ப அடிப்படையில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க இந்நிறுவனத்தை திட்ட மேலாண்மை ஆலோசகராக தமிழக அரசு நியமித்துள்ளது. மேலும் இந்நிறுவனம், சிப்காட்டில் 60 MLD கடல் நீரை குடிநீராக்கும் தொழிற்சாலை திட்டத்திற்கும், குதிரைமொழியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 60 MLD கடல்நீரை குடிநீராக்கும் தொழிற்சாலை திட்டத்திற்கும், 9 மாநகராட்சிகளில் அளவுமானியுடன் கூடிய பகிர்மான குழாய் பகுதி அடிப்படையில் குடிநீர் மேலாண்மை திட்டத்திற்கும், சேலம் மற்றும் ஆவடியில் பாதாள சாக்கடை திட்டங்களுக்கும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் வைகை, பவானி மற்றும் காவேரி ஆற்றுப்படுகைகளில் மாசுபடுதல் தடுப்பதற்கான சாத்திய கூறு திட்டங்கள், சென்னை பெருநகர மாநகராட்சியிடமிருந்து 60 நீர் நிலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திடமிருந்து சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தியாகராய நகரை மேம்படுத்த

24x7 அடிப்படையில் குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கியுள்ளது.

இதைத் தவிர, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் நிலையத்தின் கட்டுமான மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், தஞ்சாவூர் மாநகராட்சியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் மேம்படுத்தும் திட்டம், பல்லாவரம் நகராட்சியில் ஜமீன் பல்லாவரம் ஏரி மற்றும் கீழ்க்கட்டளை ஏரி ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்வதை கண்காணித்தல், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் தூத்துக்குடியில் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம், கும்பகோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல் மேம்படுத்தும் திட்டம், கடலூர் நகராட்சியில் மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டம், குஜராத் தொழில் மேம்பாடு கழகத்தின் மூலம் 100 MLD கடல்நீரை குடிநீராக்கும் தொழிற்சாலைக்கான திட்டம் மற்றும் குஜராத் குடிநீர் உட்கட்டமைப்பு நிறுவனத்தின் கடல்நீரை குடிநீராக்கும் தொழிற்சாலைகளுக்கான ஏழு திட்டங்கள் ஆகியவைகளுக்கு திட்ட மேலாண்மை ஆலோசகராக செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், அருள்புரம், ராயபுரம், முருகம்பாளையம், சின்னக்கரை, காசிபாளையம், குன்னக்கல்பாளையம், எஸ்.பெரியபாளையம், மற்றும்

பெருந்துறை ஆகிய 9 இடங்களில் உள்ள திரவ வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், இந் நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பின்வரும் அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது:

**11.1 தமிழ்நாடு அரசு**

- தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 [தமிழ்நாடு சட்டம் 43, 1988], பிரிவு 16-ன் கீழ், இந்நிறுவனம் பங்கேற்கும் ஒப்பந்தங்களுக்கு, ஆலோசனை மற்றும் நிதிசேவை கொள்முதலுக்கு விலக்கு அளித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களால் இயற்றப்பட்ட அவசரச் சட்டம், தமிழ்நாடு அரசின் அரசிதழில் அறிவிப்பு எண். 333, நாள் 17.10.2017ல் அறிவிக்கை வெளியிடப்பட்டது.
- அரசு ஆணை (நிலை) எண்.132, ந.நி.(ம)கு.வ. (ந.நி3) துறை, நாள் 31.12.2012 மற்றும் அரசு ஆணை (3ப) எண். 10, ந.நி.(ம)கு.வ. (ந.நி3) துறை, நாள் 16.05.2017-ல் அரசின் சார்பாக கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் "திட்ட மேலாண்மை முகமை"-யாக நியமிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசின் பொது கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துவதற்கும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்கும் ஒரு பிரத்யேக முகமை.

- கழிவுநீர் மறு உபயோகம் மற்றும் கடல்நீரை குடிநீராக்குதல் மூலம் தொழிற்சாலைகளுக்கு குடிநீர் வழங்குதல்.
- தமிழக அரசின் நகராட்சி நிர்வாக ஆணையரகம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பினை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் பல்வேறு நகராட்சி /மாநகராட்சிகளில் பணிபுரியும் 135 பொறியாளர்களுக்கு இந்தியாவிலும் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டில் மணிலாவிலும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு, உரிய தேர்வுகள் மூலம் சர்வதேச அமைப்பின் அங்கீகார முகமை வாயிலாக அப்பொறியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## 11.2 இந்திய அரசு

- இந்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்திற்கு அறிவுசார் கூட்டாளியாக இந்நிறுவனம் விளங்கி வருகிறது.
- மத்திய நீர் ஆதாரம் மற்றும் கங்கை நதி புனரமைப்பு அமைச்சகத்தின் "தேசிய தூய்மை கங்கை" அமைப்பிற்கு ஆலோசகராக உள்ளது.
- இந்நிறுவனம் தேசிய கடல்சார் தொழில் நுட்ப நிலையத்தின் மூலம் பாரதீப் துறைமுகத்திற்காக

கடல்நீர் எதிர்மறை சவ்வூடு பரவல் மூலம் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் அமைப்பதற்கு ஆலோசனை வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

- மத்திய அரசின் “உட்சதாரா அவிஸ்கார் யோஜனா” திட்டத்தின்படி அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்தினை கண்காணிப்பு / மதிப்பீடு செய்வதற்கு அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவில் இந்நிறுவனத்தை "கள நிபுணர்" ஆக நியமித்துள்ளது.
- இந்திய அரசின், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் கீழ் இயங்கும் (CSIR) தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தில், "குடிநீர் தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல்" என்ற திட்டத்தின் கள வல்லுனர் குழுவில் ஒரு உறுப்பினராக இந்நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

2017 - 2018 ஆண்டில் ₹35.00 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வருவாய் 2018 - 2019 ஆம் ஆண்டில் ₹46.00 கோடியாக உயர்ந்துள்ளது. 2019 - 2020 ஆம் ஆண்டிற்கு ₹58.00 கோடி வருவாயினை அடையும் வகையில் தன்னுடைய இலட்சிய இலக்காக கொண்டுள்ளது.

IL&FS குழுமத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக ஒரு புதிய இயக்குநர்கள் கொண்ட குழுவை மத்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைத்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு இதனால்

எந்தவித பாதகமான சூழ்நிலையும் ஏற்படவில்லை. மேலும் இந்நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகத்தை தனது சொந்த வளங்களின் மூலம் நடத்திக் கொண்டு இருப்பதால், ஒரு சில நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட "பச்சை" தரவரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்
துறை அமைச்சர்